# செம்மண்

நிலம் 2 துகள் 59 வள்ளுவர் ஆண்டு 2052, 04 - 10 புரட்டாதி 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-




காணாமல் ஆக்கப்பட்டவர்களை யார், எவர் என்று தேட வேண்டாம்?

04



சொக்க வைக்கும் பரமசுந்தரி...!

22

# 3ஆவது தடுப்பூசியும் அவசியம்!

## சிறிலங்கா மருத்துவ சங்கம் பரிந்துரை



கொழும்பு, புரட்டாதி 4

இலங்கையில் நேற்றும் 202 பேர் கொரோனா நுண்தீமியின் பாதிப்பால் உயிரிழந்திருக்கும் நிலையில் நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும் உயிரிழப்புக்களைக் குறைக்கவும் மூன்றாவது தடுப்பூசியும் ஏற்றப்படுவது அவசியம் என்று சிறிலங்கா மருத்துவ சங்கம் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது.

நாட்டிலுள்ள 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. ஏற்கனவே கணிசமான எண்ணிக்கையானோருக்கு இரண்டு கட்டத் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இந்த நிலையில் சினோபாம் தடுப்பூசியை இரு கட்டங்களாகப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாவது கட்டத் தடுப்பூசி வழங்கப்பட்டு 28 நாட்களுக்குப் பின்னர் 3ஆம் கட்டத் தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மருத்துவ சங்கம் வலியுறுத்தியிருக்கின்றது.

கொரோனா தடுப்புச் செயலணியின் கூட்டம் நேற்று இடம்பெற்றபோது 20 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு அடுத்த கட்டமாக தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆராயப்பட்ட நிலையில் மருத்துவ சங்கத்தின் இந்த வலியுறுத்தல் முன்வைக்கப்பட்டுள்ளது.

பக்கம் 02

# 13 வரையும் முடக்கம் நீடிப்பு

கொழும்பு, புரட்டாதி 4

இலங்கை ஆட்சியாளர்கள் விருப்பப்படாவிட்டாலும் மேலும் ஒரு தடவை நாட்டில் பொது முடக்கம் நீடிக்கப்பட்டுள்ளது. புரட்டாதி 6ஆம் நாள் வரையில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த பொதுமுடக்கம் 13ஆம் நாள் வரையில், ஒரு வார காலத்திற்கு நீடிக்கப்படுவதாக சுகாதாரத்துறை அமைச்சர் கெகலிய ரம்புக்வெல நேற்று அறிவித்தார்.

அரச தலைவர் கோட்டாபய

பக்கம் 02



# அரிசி, சீனி குறைய மா விலை அதிகரிப்பு

கொழும்பு, புரட்டாதி 4

கோதுமை மாவின் விலையை 12 ரூபாவால் அதிகரிப்பதற்கு பிரிமா நிறுவனம் முடிவு செய்திருக்கின்றது. இந்த விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்தாலும் மா விலையை உடனடியாக அதிகரிப்பதற்கு பிரிமா தீர்மானித்துள்ளது.

நாட்டில் சீனி மற்றும் அரிசிக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை மற்றும் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து அவற்றுக்கான கட்டுப்பாட்டு விலைகளை அரசு அறிவித்து 24 மணி நேரத்திற்குள் கோதுமையின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைச் சீனியின் விலை 122 ரூபாவாகவும் மண்நிறச் சீனியின் விலை 125 ரூபாவாகவும் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 02

# போலிப் படிவம் குறித்துக் கவனம்

கொழும்பு, புரட்டாதி 4


இலங்கையில் தடுப்பூசி ஏற்றுவதற்காக 18 வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் விவரங்கள் திரட்டப்படுவதாகத் தெரிவித்து கூகிள் இணையப் படிவம் ஒன்று சமூக ஊடங்களில் உலா வருவதாகவும் அது போலியானது என்றும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சினாலோ தொற்றுநோயியல் பிரிவினாலோ அத்தகைய விவரங்கள் எவையும் சேகரிக்கப்படவில்லை என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் ரஞ்சித் பதுவந்துடாவ

பக்கம் 02

## குருநகர் இளைஞர் கொலை:

# 4 முக்கிய குற்றவாளிகள் தொடர்ந்தும் தலைமறைவு




இன்னும் தலைமறைவாகியுள்ள சந்தேகநபர்களான சந்திரன், டார்வின், சுலக்ஸ்ன.

யாழ்ப்பாணம், புரட்டாதி 4

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஜெறன்ஸ் பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்தோடு கெமி கும்பலால் படுகொலை செய்யப்பட்ட நிலையில் இந்தக் குற்றத்தில் ஈடுபட்டவர்களில் 6 பேர் காவல்துறையினரிடம் சரணடைந்தனர். எனினும் இளைஞன் உயிரிழப்பதற்குக் காரணமாக, அவரது உயிரைப் பறிக்கும் வகையிலான வெட்டுக் காயத்தை ஏற்படுத்தியவர் என்று குற்றஞ்சாட்டப்படும் முக்கிய சந்தேக நபரான சந்திரன் எனப்படும் நபர் இன்னும் கைது செய்யப்படவில்லை.

ஆவணி 22, ஞாயிற்றுக்கிழமை ஒரு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மூவரை வழிமறித்த வன்முறைக் கும்பல் ஒன்று அவர்களை வாள்களால் வெட்டியும் குத்தியும் தாக்குதல் நடத்தியது. அவர்களில் இருவர் வெட்டுக் காயங்களுக்கு உள்ளாக ஒருவர் படுகாயமடைந்திருந்தார். அவரது கால்கள் இரண்டிலும் கடுமையான வெட்டுக் காயம் காணப்பட்டது

பக்கம் 02

செம்மணி

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# அவசர காலச் சட்டம் விரைவில் நீங்கவேண்டும்

இலங்கையில் அவசர கால நிலை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. உணவு விநியோகத்தைச் சீராக்குவதற்காகவே இந்த அவசர கால நிலை அறிவிக்கப்பட்டிருப்பதாக ஆட்சியாளர்கள் கூறியிருக்கின்றார்கள். அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இதனை அறிவித்திருக்கிறார்.

அவசர காலச் சட்டத்தை இலங்கை அறிவித்திருப்பதற்குப் பல தரப்புக்களிடம் இருந்தும் எதிர்ப்புக்கள் வெளிப்பட்டுள்ளன. எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா, மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு, இலங்கையின் ஜனநாயகத்துக்கான சர்வதேச வலையமைப்பு போன்றன ஏற்கனவே கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளன. இருப்பினும் அவசர காலச் சட்டத்தால் போர்க் காலங்களில் கடுமையாகப் பாதிப்புக்களைச் சந்தித்தவர்களான தமிழர்களிடம் இருந்தே இதற்கான முதல் எதிர்ப்பு பதிவு செய்யப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கண்டனத்தைப் பதிவு செய்தார். நாட்டில் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கும், கட்டுக்கடங்காத மனித உரிமை மீறல்களில் இலங்கைப் படையினர் ஈடுபடுவதற்கும் போர்க் காலங்களில் அதிகம் இடமளித்த இரு சட்டங்கள் என்றால் அவை அவசர காலச் சட்டமும் பயங்கரவாதச் சட்டமுமே. அந்தச் சட்டங்களால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே.

நாட்டில் பேரிடர் ஏற்படும் நிலையில் அதனைச் சமாளிப்பதற்காகவே அவசர காலச் சட்டம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. ஆனால் அதனைத் தமது சர்வாதிகாரப் பயன்பாட்டுக்கான ஆயுதமாகவே கடந்த காலங்களில் இலங்கை ஆட்சியாளர்கள் முறைகேடாகப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். மிக நீண்ட காலத்திற்கு அவசர காலச் சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்திய சாதனை எல்லாம் இலங்கையின் வசம் இருக்கின்றது.

அத்தகைய கறைபடிந்த வரலாற்றைக் கொண்டிருக்கும் நிலையில், மிக மோசமான மனித உரிமை மீறல்களைக் கொண்ட போரை பாதுகாப்புச் செயலாளராக இருந்து வழி நடத்திய ஒருவரே இப்போது அரச தலைவராக இருந்து கொண்டு அவசர காலச் சட்டத்தைக் கையிலெடுத்திருப்பது மக்கள் மத்தியில் அச்சத்தை குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவது வியக்கக்கூடிய ஒன்றல்ல.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை மருத்துவ அறிவியல் ரீதியாக அணுகிக் கையாள மறுத்ததன் விளைவாக நாட்டின் பொருளாதாரத்தையும் அதளபாதாளத்தில் வீழ்த்தியுள்ள இன்றைய ராஜபக்சக்கள் ஆட்சி, அதனால் நிலைகுலைந்துள்ள பொருள்களின் இறக்குமதியையும் தளம்பலடைந்துள்ள பொருள்களின் விலைகளையும் காரணமாகக் காட்டி இந்த அவசரக கால நிலையை அறிவித்துள்ளது.

அவசர காலச் சட்டம் அரச தலைவரின் அதிகாரத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டாலும் ஒரு மாத காலத்திற்குள் அதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படவேண்டும். அது நீடிக்கப்படுவதானால் ஒவ்வொரு மாதமும் அதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைத் தன் வசம் வைத்திருக்கும் இந்த ஆட்சிக்கு மாதா மாதம் அவசர காலச் சட்டத்தை நீடிப்பது ஒன்றும் கடினமான காரியமல்ல.

அப்படி நிகழுமாயின் அது இலங்கையை மீண்டுமொரு பேரிடருக்கு இட்டுச் செல்வதற்கான அதிக வாய்ப்புக்களைக் கொண்டிருக்கும். அத்தகைய ஒரு நிலை வரக்கூடாது. ஏற்கனவே அளவுக்கதிகமான அதிகாரங்களைத் தனி ஒரு மனிதரான அரச தலைவரே கொண்டிருக்கும் நிலையில் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழான அதிகாரங்களையும் அவரிடமே வழங்குவது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதல்ல.

எனவே எந்தத் தேவைக்காக அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதோ அது முடிந்ததும் விரைவாக அந்தச் சட்டம் காலாவதியாகும் நிலையை உறுதிப்படுத்துவது அவசியம். இலங்கையின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் மக்களாட்சியை உறுதிப்படுத்தவும் அவசர காலச் சட்டம் முடிந்த விரைவில் நீக்கப்படுவது அவசியம். அது வருங்காலத்தில் அடக்குமுறைகளை நிகழ்த்துவதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படக்கூடாது.

போருக்குப் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆட்சியாளர்களுக்கு எதிரானவர்கள் மீது ஈவு இரக்கமின்றிப் பயன்படுத்தப்பட்டுவரும் நிலையில் அவசரகாலச் சட்டமும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கான கருவியாக மாறுவதை அனுமதிக்க முடியாது. எனவே ஜனநாயகக் காவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து விரைவில் அவசர காலச் சட்டம் நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

## 3ஆவது...

இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஏற்கனவே 9 ஆயிரத்து 800ஐக் கடந்துள்ளது. நேற்று மட்டும் 3 ஆயிரத்து 644 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தொற்றுக்குள்ளான 61 ஆயிரத்து 631 பேர் தொடர் கண்காணிப்பிலும் சிகிச்சையிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான மூன்று முக்கிய பரிந்துரைகளை மருத்துவ சங்கம் நேற்று முன்வைத்தது.

60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 18 வயது முதல் 60 வயது வரையானவர்களுக்கும் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகத் தடுப்பூசிகள் வழங்கப்படவேண்டும், அதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

60 வயதுக்கு மேற்பட்ட 2 தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களுக்கும் 12 வயதுக்கு மேற்பட்டவர்களில் நோயெதிர்ப்புக் குறைபாடு உள்ள, ஏற்கனவே இரண்டு கட்டத் தடுப்பூசிகளையும் பெற்றவர்களுக்கும் மூன்றாவது தடுப்பூசி வழங்கப்படவேண்டும்.

குறைந்தது 18ஆம் நாள் வரையிலாவது தற்போதைய முடக்கத்தை நீடிக்க வேண்டும்.

இந்த மூன்று விடயங்களையும் மருத்துவ சங்கம் அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

## 13 வரையும்...

ராஜபக்சவுக்கும் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணிக்கும் இடையில் வெள்ளிக்கிழமை காலை நடந்த கூட்டத்தில் முடக்கத்தை நீடிப்பதற்கான முடிவு எட்டப்பட்டது.

தற்போது செயற்படுத்தப்பட்டுவரும் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையின் மூலம் தொற்றுப் பரவலின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியும் என்று திடமாகப் பரிந்துரைக்கப்படுவதால் முடக்க நிலையை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நேரத்தைப் பயன்படுத்தித் தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ளும்படியும் தேவையற்று நடமாடாது வீட்டிலிருக்கும்படியும் முகமூடிகளை அணிந்திருக்கும்படியும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் நாட்டைப் பொது முடக்கத்தில் வைத்திருப்பது இயலாத காரியம் என்று ஆட்சியாளர்கள் கருதினாலும் தொற்றுப் பரவலின் வீரியம் காரணமாக பொது முடக்கத்தை தளர்த்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## 4 முக்கிய...

என்றும் ஒரு கால் கிட்டத்தட்ட துண்டாடப்பட்ட நிலையில் இருந்தது என்றும் நேரில் கண்ட சாட்சிகள் தெரிவித்தனர்.

இரண்ட வருடங்களின் முன்னர் கிறிஸ்மஸ் காலப் பகுதியில் யாழ். நகரில் உள்ள கடையில் ஆடைகள் வாங்கச் சென்ற சமயம் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டில் கெமி வன்முறைக் கும்பல் என அறியப்படும் குழுவின் தலைவனான கெமி என்பவரைத் தாக்கிய இளைஞனின் கால்களே துண்டாடப்படுமளவிற்கு வெட்டப்பட்டிருந்தன.

தனது அண்ணனான கெமியைத் தாக்கிய நபரின் கைகளை வெட்டுவேன் என்று முகப் புத்தகம் மூலம் பகிரங்கமாக அறிவித்த இந்தக் கும்பலின் உறுப்பினரான புக்க என அழைக்கப்படும் அஜித்தன் தலைமையில் இந்தப் படுகொலை திட்டமிட்டு நடத்தப்பட்டது என்று செம்மண் பத்திரிகையின் புலனாய்வில் தெரியவந்தது.

அஜித்தன் மீது ஏற்கனவே யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் ஒருவரை வாகனத்தால் மோதிக்கொல்ல முயன்றார் என்கிற வழக்கு நிலுவையில் உள்ளது. அதேபோன்று 17 வயது இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கினார் என்கிற வழக்கிலும் அவர் சந்தேகபராகச் சேர்க்கப்பட்டுள்ளார். இரு வழக்குகளிலும் நீதிமன்றப் பிணையில் இருக்கின்ற நிலையிலேயே இந்தப் படுகொலையைத் திட்டமிட்டு அவர் தலைமையிலான குழு நிகழ்த்தியிருக்கின்றது.

சம்பத்தில் குருநகரைச் சேர்ந்த 25 வயதான ஜெரன்ஸ் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி ஆவணி 23ஆம் நாள் உயிரிழந்தார்.

இந்தத் திட்டமிட்ட கொலையில் ஈடுபட்டவர்களில் 7 சந்தேகநபர்களைக் காவல்துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளனர். முக்கிய குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களான புக்க எனப்படும் அஜிந்தன், விஸ்வா எனப்படும் மிஸ்பா, மீன்குஞ்சு எனப்படும் மிதுசன், ஜூட் டானியல், டிலக்ஸன் ஆகியோர் சட்டத்தரணி றெமீடியஸ் மூலம் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்திய காவல்துறையினர் விசாரணைகளை நடத்துவதற்காகத் இரண்டு நாள்களுக்குத் தமது காவலில் வைத்திருப்பதற்கு நீதிமன்றத்தின் அனுமதியை வேண்டினர். நீதிவான் அனுமதி வழங்கியதுடன் தலைமறைவாகியுள்ள ஏனைய குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தினார்.

கெமி குழுவின் முக்கிய உறுப்பினர்களும் கெமியின் சகோதரர்களான டார்வின் மற்றும் சுலக்ஸன், சந்திரன், ராஜா குட்டி ஆகியோர் தொடர்ந்தும் தலைமறைவாகியுள்ளனர். இவர்களில் ஜெரன்ஸ் படுகாயமடையுமளவிற்கு அவரை வெட்டியவர் சந்திரன் என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

## அரிசி...

நாட்டுப் பச்சை அரிசியின் விலை 95 ரூபாவாகவும் குத்தரிசியின் விலை 98 ரூபாவாகவும் சம்பா அரிசியின் விலை 103 ரூபாவாகவும் கீரி சம்பாவின் விலை 125 ரூபாவாகவும் அரசால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

சந்தையில் இதுவரையில் சீனி 200 முதல் 220 ரூபாவாக விற்கப்பட்டு வந்த நிலையில் அரசின் விலைக் குறைப்பால் சந்தையில் உள்ள சீனி காணாமற்போகும் நிலை ஏற்படக்கூடும் என்கிற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று குத்தரிசியின் விலையும் 120 முதல் 140 ரூபா வரையில் எகிறியுள்ள நிலையில் அரசின் நடவடிக்கையால் சந்தையில் அவற்றையும் காணமுடியாத நிலை ஏற்படும் என்கிற அச்சம் நிலவுகின்றது.

இதற்கிடையே மா விலையை அதிகரிப்பது என்கிற பிரிமா நிறுவனத்தின் முடிவு சட்டத்துக்குப் புறம்பானது என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவிக்கின்றது. விலை அதிகரிக்கப்பட்டால் பிரிமா நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களிலும் இவ்வாறு மாவிலை அதிகரிக்கப்பட்ட சமயங்களில் நுகர்வோர் அதிகார சபை இப்படித் துள்ளிக் குதிப்பதும் பின்னர் விலை அதிகரிப்பு அங்கீகரிக்கப்படுவதும் வழக்கமாக நடந்தே வந்திருக்கின்றது.

## போலிப்...

தெரிவித்தார்."இது ஒரு போலியான தரவு சேகரிப்பு. அது ஆபத்தானதாகவும் இருக்கக்கூடும். இந்தச் சந்தேகத்திற்குரிய படிவத்தின் மூலம் எந்தவொரு தகவலையும் பகிர்ந்துகொள்ளவேண்டாம் என்றும் நாம் எச்சரிக்கின்றோம்" என்றார் அவர்.

இந்தப் போலி தகவல் சேகரிப்பு தொடர்பில் காவல்துறையினரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கவிதை எனும் தேனாறு

## குறும்பா
## குறும்பு இல்லாத வெறும்பாக்கள்

● வேலணையூர் _ தாஸ்

7

தமிழ்க் கவிதை காலத்துக்குக் காலம் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வளர்ந்து வருகிறது. மரபு, புதுக்கவிதை, பின் நவீனம், நவீனம் எனப் பல்வேறு விதமான கவிதை வடிவங்கள் தமிழ் கவிதை உலகை அலங் கரித்து இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் குறும்பாக் கவிதைகள். இதை முதலில் தமிழில் ஈழத்து கவிஞர் மகாகவி எழுதினார்.

ஆங்கிலத்தில் உள்ள 'லிமரிக்" என்கிற ஒருவகையைப் பின் பற்றி எழுதப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் அக்கவிதைகளில் இருந்து பல் வேறு வகைகளில் வேறுபட்டதாக இது அமைந்தது. அதாவது அக்கவிதைகளை வாசித்து அதன் அருட்டுணர்வில் எழுதப்பட்டதென்பதே பொருத்த மானதாகும் என்பதற்கு மகாகவி யின் குறும்பா நூலுக்கான முன்னுரையில் வருகின்ற பின் வரும்பகுதி ஆதாரம் ஆகிறது

'இலக்கிய விமர்சகர்கள்' எனத் தம்மைக் கருதுவோர் நம் நாட்டில் அநேகர் உளர். சோம்பலை ஓம்பி, நுனிப் புல் மேய்ச்சலிடும் சுபாவமுள்ள அவர்கள், "குறும் பாக்கள் லிமரிக்" கின் மொழிபெயர்ப்பே' என்று ஏக வசனத்திற் கூறிவிடுவார்கள். இது பிரமை அன்று. இக் குறும் பாக்களுட் சில இளம் பிறை' மாசிகையிற் பிரசுரமான காலத்தில், தாழ்வுச் சிக்கலி னாலும், விரக்தியினாலும் சாம்பிக் கொண்டி ருக்குஞ் சில 'இலக்கியக்காரர்' இத் தகைய அபிப்பிராயம் ஒன்றைப் பரப்பியதை நான் அறிவேன். குறும் பாக்களிலே சுயம்புவான கருத்து வீறும், மொழி வீச்சும், கற்பனை வளமும் இருக்கின்றன. இத் தன்மைகளே குறும்பா புதிய தமிழ்க் கவிதை முயற்சி என்பதை நிறுவுவதற்குப் போதுமா னவை.



இந்த கவிதை ஐந்து வரிகளைக் கொண்ட மிகச் சிறிய கவிதையாக இருப்பதால் குறும்பா என அழைக்கப்படு கிறது இருந்தா லும் இதனுடைய அமைப்பு இதற்குரிய சிறப்புத் தன்மை அதாவது ஒரு கருத் தியல் மீதான ஏளனம், நையாண்டி அதாவது குறும்புத் தன்மையை இது கொண்டிருகிறது. மகாகவி எழுதிய பல குறும்பாக்கள் இக்கு றும்பை இயல்பாய் கொண்டிருக்கின்றன. ஒரு கருத்தைக் குறும் பாகச் சொல்லுதல் வேடிக்கையாகச் சொல்வது என்ற பொருள் பட இது குறும்பா என அழைக்கப்படுவது பொருத்தம் என கருதுகிறேன்.

### து.உருத்திரமூர்த்தி {மஹாகவி}

மகாகவியின் குறும்பா தொகுப்பில் இருந்து இரண்டு குறும்பாக் கள்

பெஞ்சனிலே வந்தழகக் கோனர்
பெருங்கதிரை மீதமர லானார்.
அஞ்சாறு நாள் இருந்தார். அடுத்த திங்கள் பின்னேரம் . . .
பஞ்சியினுலே இறந்து போனர்.
மஹாகவியின்
சீதையை இராமபிரான் மீட்டார்.
சிற்றிடையின் கற்பை எடை போட்டார்.
ஏதும் அவர்க் கையம் இல்லை! என்றாலும் காட்டவர் வாய்
தீது, இலையேல் செய்வாரா?. . . . மாட்டார்!

மரபுக் கவிதைகளை மீண்டும் எழுதிப் பார்ப்பது போல தமிழ் கவிதையின் பல வடிவங்களை மீண்டும் எழுதிப் பார்க்க வேண்டி யிருக்கிறது. அவ்வாறான கவிதை வடிவங்களைத் தத்ருபமாக எழுதுகின்ற ஆற்றல் சிலருக்கு வாய்த்துள்ளது. அவ்வாறு கணினி வழியில் இந்தக் குறும்பா கவிதைகளை எழுத இன்று பலர் விருப் புக்கொண்டுள்ளனர்.

அவ்வாறு மகாகவிக்குபின் பல கவிஞர்கள் குறும்பா கவிதை களை எழுதி இருந்தாலும் இசு. முரளிதரன், கவிஞர் வடிவழகையன், சிவசேகரன், காரைகவி கந்தையா பத்மநாதன், அலெக்ஸ் பரந்தா மன் போன்றவர்கள் சிறப்பாக கவிதைகளை தந்திருக்கிறார்கள் என்றாலும் இதனுடைய இலக்கண அமைப்புச் சரியாக அமை கிறது என்பதற்காகச் சற்றுக் கூடுதலாகக் கவிதைகள் எழுத முற்படுகின்றபோது இலக்கண அமைப்பில் பொருந் தினாலும் கருத்தியல் ரீதியில் குறும்பு அல்லாத அதாவது நகைச்சுவை தன்மை இல்லாத வெறும்பாக்கள் வருவதற்கான சூழலும் அமைந்து விடுகிறது என்பதை இப்பொழுது இணையவழியில் எழுதப்படுகின்ற பல கவிதைகளில் காணமுடிகிறது.

பழைய கவிதை வடிவங்களை மீள எழுத முயற்சிப்பதும் வரவேற்க வேண்டியது என்றாலும் அதிக ஆர்வத்தில் குறும்பு இல்லாத குறும்பாக்கள் அதிகம் எழுதப்படுவது குறும்பா கவிதைகளின் தரத்தை குறைத்து விடுவதற்கும் வழியுண்டு.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி" என்கிற பழமொழியை இந்த நேரத்தில் நினைவில் கொள்ள வேண்டி யிருக்கிறது.

இன்று இணைய வழியில் நல்ல குறும்பாக்களை எழுது கின்ற கவிஞர்களின் சில குறும்பாக்கள் செம்மண் வாசகர்க ளுக்காகத் தரப்படுகிறது.



**கவிஞர் வடிவழகையன்**

படிப்பதற்கு சென்றுவந்தாள் லைலா
பாவையவள் நடப்பதுஓர் ஸ்ரைலா
துடியிடையாள் நடையழகோ
தகதிமிதா தாளமிட
பெடியளெலாம் பார்த்து ஒரே பைலா




**எஸ் .சிவசேகரன்**

சுழிபுரத்தில் ஏறினாளாம் ரம்பை
சுத்திவிட்டா ளாம்விழி யம்பை
நெளிவுகளை பக்கம்நின்று
நோக்கியதால் அம்பியவன்
வழியினிலெ பறிகொடுத்தான் தன்பை...!

**காரைக்கவி கந்தையா பத்மநாதன்**

வேலற்றை விடலைப்பொடி கேது
வெளியில வெளிக்கிட்டால்பரம சாது
பாலற்றை பெட்டையோடதெரியாம
பகிடிவிட்டு பல்லிளிக்கவையோ
ஏலாமப் போட்டுதிப்பவனுக்கு காது!



**அலெக்ஸ் பரந்தாமன்**

முகம் முற்றுமுழுவதுமாய் தாடி
முகம் சுழித்துச் சென்றாளென் 'லேடி'
அகத்திலில்லை அழுக்கென்று
ஆயிரம்முறை சொன்னபோதும்
நகம் கடித்துப் போகிறாயேஅடி போடி.

■

# காணாமல் ஆக்கப்பட்டவர்களை யார், எவர் என்று தேட வேண்டாம்?

**நியூட்டன்**



காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய விவகாரம் இலங்கையில் மிக நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. ஆனாலும் 2009ஆம் ஆண்டு மே 19ஆம் திகதிக்குப் பின்னர் அதாவது இறுதிப் போருக்குப் பிறகு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய தேடலே இப்போது வரை தமிழர்கள் மத்தியில் முனைப்புப் பெற்றிருந்தது. அதற்குக் காரணம் போரின் போது பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டார்கள் என்பதும், படையினரிடம் உறவினர்களால் நேரடியாகக் கையளிக்கப்பட்டவர்கள்கூட காணாமற்போகச் செய்யப்பட்டார்கள் என்பதும்தான்.

காணாமல்போன தமது தந்தை, கணவன், பிள்ளைகள், சகோதரர்களைக் காட்டுங்கள் என்று அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் பல்வேறு மாவட்டங்களிலும் கடந்த 12 ஆண்டுகளாகத் தவம் கிடக்கிறார்கள். இது இவ்வாறிருக்க காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் அரச தலைவர் கோட்டாபயவின் நிலைப்பாடு என்ன என்பதை நீதி அமைச்சர் அலி சப்ரியூடாக அண்மையில் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், "அதுபற்றி இனி ஆராய வேண்டாம். என்ன காரணத்துக்காக என்பதை விசாரிக்கத் தேவையில்லை. குற்றம் நிகழ்ந்துள்ளதா என்பதையும் பார்க்காதீர்கள். அவர்கள் எந்தப் பக்கம் என்றும் தேடவேண்டாம். அவர்கள் சிறீலங்காவைச் சேர்ந்தவர்கள் என்பதால் அந்த வலியை உணருங்கள். அவர்களுக்கு உரிய இழப்பீடுகளை வழங்க வேண்டும்" என முத்தாய்ப்பாகக் கூறிவிட்டார் அரச தலைவர்.

இறுதியாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் அடங்குவதால் புலம்பெயர் தமிழர்கள் அதற்கான பின்னூட்டல் ஒன்றைத் தொடர்ந்து கொடுத்து வருகிறார்கள். இந்த நிலையில் வெளிவந்திருக்கின்ற அரச தலைவரின் கருத்தின் பின்னணியில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்பது பொதுமைப்படுத்தப் பட்டுவிட்டது. பிரச்சினைகளில் இருந்து தப்பிக்கொள்வதற்கு ராஜபக்சக்கள் நீண்டகாலமாகப் பயன்படுத்தி வரும் உத்தி இந்தப் பொதுமைப் படுத்தல்தான்.

**யார் - யாரால் காணாமல் ஆக்கப்பட்டார்கள்?**

காணாமல் ஆக்கப்பட்டவர்களில் இலங்கையில் வாழ்கின்ற 3 இனங்களைச் சேர்ந்தவர்களும் அடங்குகின்றனர். இவர்கள் யாரால் காணாமலாக்கப்பட்டனர் என்ற கேள்விக்கு இலங்கை அரசு, இந்திய அரசு ஆகியவையும் அவர்களுடன் சேர்ந்து இயங்கியவர்களையும் பட்டியலிடவேண்டிய நிலை இருக்கிறது. மறுபுறத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதும் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன.

> **2005-2009 வரையான காலப் பகுதியில் ஆட்சியிலிருந்த மகிந்த தரப்பைவிட ஏனைய ஆட்சியாளர்களின் காலத்தில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களும் கணிசமாக உள்ளன**

2005-2009 வரையான காலப் பகுதியில் ஆட்சியிலிருந்த மகிந்த தரப்பைவிட ஏனைய ஆட்சியாளர்களின் காலத்தில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களும் கணிசமாக உள்ளன. இதில் 1971, 1989காலப்பகுதிகளில் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சிக் கால சம்பவங்களின்போது காணாமலாக்கப்பட்டவர்களும் உள்ளடங்குவர்.

இறுதியாகப் போராடும் முக்கிய தரப்பாக இருந்த விடுதலைப் புலிகள் அமைப்பால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலும் (வடக்குக் கிழக்குத் தமிழர், முஸ்லிம்கள், எல்லைக் கிராமச் சிங்களவர்களும் இதில் அடங்குவர்) முஸ்லிம்கள் தரப்பில் இயங்கிய ஜிஹாத் ஆயுதக் குழுவினரால் இல்லாதொழிக்கப்பட்டவர்களின் பட்டியலுமே இந்தப் பொதுமைப் படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்குள் இனி இடம்பெறவிருக்கிறது.

இதன் மூலம் சர்வதேச அரங்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை இலங்கை அரசு ஐந்தொகைக் கணக்கொன்றாக்கி அறிக்கையாகச் சமர்ப்பிக்கும். இதில் விடுதலைப் புலிகள் அமைப்பில் ஆயுதப் பயிற்சிபெற்ற 13ஆயிரம் போராளிகளுக்கு மறுவாழ்வளித்து ஐ.நாவின் உதவியுடன் மீண்டும் அவர்களின் குடும்பங்களுடன் கையளித்த விடயம் மகிந்த தரப்பினரால் மாத்திரமே இடம்பெற்றிருக்கிறது. இந்தக் கட்டத்தில் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டவர்களும், ஏனைய இயக்கங்களால் கடத்தப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் எடுத்துக்காட்டி தன்னால் காணாமற்போனவர்களின் எண்ணிக்கையுடன் அதனைச் சமப்படுத்த கோட்டாபய அரசு முழுமையாக முயற்சிக்கும்.



தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் பல கட்சிகளின் முக்கியஸ்தர்களாகவும் இருப்பவர்கள் 2009மே 19 வரை இலங்கைப் படைகளில் சம்பளம் பெற்ற ஊழியர்களாகச் செயற்பட்டதால் அதற்கான எழுத்து மூல ஆதாரங்களும் கோட்டாபய அரசிடம் உள்ளன. எனவே காணாமல் ஆக்கப்பட்ட பல சம்பவங்களுக்கு இலங்கைப் படைகள் காரணம் என்பதுடன் புலிகளுக்கு எதிரான தமிழ் ஆயுதக் குழுக்களும் பதில் சொல்லவேண்டியிருக்கும்.

அரச தலைவர் கோட்டாபய கூறியதாக நீதி அமைச்சர் குறிப்பிட்ட விடயத்தில் இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரின் போராட்டம் இழப்பீடு பெறுவதில் போய் முடியப்போகிறது என்பது அவர்களுக்கு வேதனையைக் கொடுத்தாலும் அவர்களின் போராட்டத்தின் விளைவால் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் தரப்பினர் நன்மையடையவே அதிக வாய்ப்புண்டு. அதேநேரம் காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் பழியை 2005-2009வரை ஆட்சி செய்த மகிந்த தரப்பினரைவிட ஏனையவர்களே அதிகம் சுமக்கவேண்டியிருக்கும்.

இந்த அதிகரித்த தொகை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்தாலும் இது விடயத்தில் கோட்டாபய அரசுக்குச் சாதகமாகவே ஐரோப்பிய, அமெரிக்க, இந்தியா ஆகியன செயற்படவேண்டியிருக்கும். வடக்குக் கிழக்கில் இந்தியப் படையினர் சம்பாதித்த கெட்ட இறந்த காலங்கள் இந்தியாவின் தலையைத் துண்டுபோட்டு மறைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளிவிடும். ■

# தலிபான்களின் ஆப்கானிஸ்தான் அரசு



■ வி.அருணாசலம்

அரபு நாடுகள் மத்தியில் அமெரிக்கா தனது நட்புறவை முதன் முதலாக ஏற்படுத்திய நாடு சவூதி அரேபியா. அங்கிருந்த அமெரிக்கத் தூதர் ஒருவர் ஒரு தடவை சவூதி மன்னரைச் சந்தித்தபோது, ஏனைய அரபு நாடுகளைக் கையாள்வதற்குச் சாகசங்களை விரும்புகின்ற ஓர் இளைஞனைத் தேடிக்கொண்டிருக்கிறேன் என்று கூறியிருக்கிறார். அவரது பேச்சின் உள் நோக்கமாக இருந்த நபர் அந்த மன்னரின் மகனே. அதைப் புரிந்துகொண்ட மன்னன் தனது மகனின் நண்பனும் பொறியியலாளருமான சாகசங்களை விரும்புகின்ற ஒசாமா பின்லேடனை அந்த அமெரிக்கத் தூதருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அந்த உறவு 2001 செப்ரெம்பர் 11இல் அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின் ஒசாமா பின்லேடனை இலக்கு வைத்து ஆப்கானிஸ்தானுக்குள் அமெரிக்கப் படை இறக்கப்பட்டதுடன் முடிந்தது. பின்லேடனைப் பாகிஸ்தானுக்குள் வைத்துக் கொல்வதற்கு ஆப்கானிஸ்தானின் படையிறக்கல் அமெரிக்காவுக்கு உதவியது. தற்போது அமெரிக்கப் படை அங்கிருக்க வேண்டிய அவசியமில்லை என்பதால்தான் பின்வாங்கியது. இதனால் அமெரிக்கா பலப்படுத்திய ஆட்சி ஆப்கானிஸ்தானில் செயலிழந்த நிலையில் தலிபான்கள் ஆப்கானிஸ்தானைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

**ஆப்கானிஸ்தான் ஒரு முஸ்லிம் நாடு என்ற வகையில் அவர்களின் பண்பாடு வழக்கு முறைகளுக்கு ஏற்ப ஷரியாச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நினைத்தால் அதை யாரும் தடுத்துவிட முடியாது. தலிபான்கள் சன்னி முஸ்லிம் பிரிவைச் சார்ந்தவர்கள்.**

ஆப்கானிஸ்தானைத் தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் அந்த நாட்டைக் கொலைக் களமாக மாற்றப்போகிறார்கள், 20 வருட காலமாக அமெரிக்கா ஆப்கான் மக்களுக்கு வழங்கிய சுதந்திரத்தை இனி அங்கு எதிர்பார்ப்பது சிரமம் என்றெல்லாம் அமெரிக்க, ஐரோப்பிய ஊடகங்கள் கதை அளந்தன. இதற்கு மாறாகத் தலிபான்களின் முன்னெடுப்புகள் அமைந்திருக்கின்றன.

உலகம் முழுதும் செய்தி ஊடகங்களை வைத்து அதன் பின்னணியில் செயற்படுவோர் யூதர்கள்.

யூதர்களின் செய்தி ஊடகங்களுக்கு மாறான செய்திகளை வழங்குவதில் ஆர்.ரி. எனப்படும் ரஷ்ய செய்தி நிறுவனத்தின் செய்திகளும் அல் ஜசீரா எனப்படும் யூதர்களுக்கு எதிராகக் களத்தில் நின்று செயற்படும் அரபு மக்களின் செய்தி ஊடகங்களும் சில தகவல்களை வெளியிடுகின்றன.

இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது மத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமல்லாது இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலும் உள்ளது. இலங்கையின் முன்னணி இஸ்லாமியத் தலைவரான எம்.எச்.எம். அஷ்ரப்பின் மனைவியின் தொடக்ககால ஒளிப்படங்களைப் பார்த்தால், பர்தா அணியாது முகத்தை மூடாத கைகளில் கறுப்பு உறைபோடாத நிலையிருந்தது. 1977இன் பின்பான காலப்பகுதியில் அரபு நாடுகளுக்கு தொழிலுக்காகச் சென்ற இஸ்லாமியப் பெண்கள் மார்க்க உடைகளை இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் அறிமுகப்படுத்தினர் (முகத்தை மூடிய கறுப்பு ஆடை). இப்போது அதுவே அவர்களின் பண்பாடு என்று போதிக்கப்படுகின்றது.

### தலிபான்களும் ஷரியாச் சட்டமும்

இலங்கையில்கூட ஷரியாச் சட்டம் நடைமுறையில் உள்ளது. அந்தச் சட்டத்தின்படி 18 வயதுக்குக் குறைந்த பெண்கள் திருமணம் செய்ய முடியும் (இந்துக்களிடமும் பால்ய திருமண வழக்கம் இருக்கிறது. மகாத்மா காந்திகூட 13 வயதுச் சிறுமியையே திருமணம் செய்தார்). இந்த விவரம் அறியாத பெண்களின் திருமணத்தை 18 வயதாக மாற்ற வேண்டும் என இலங்கை அரசு பரிசீலித்து வருகிறது.

ஆப்கானிஸ்தான் ஒரு முஸ்லிம் நாடு என்ற வகையில் அவர்களின் பண்பாடு வழக்கு முறைகளுக்கு ஏற்ப ஷரியாச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நினைத்தால் அதை யாரும் தடுத்துவிட முடியாது. தலிபான்கள் சன்னி முஸ்லிம் பிரிவைச் சார்ந்தவர்கள். தமிழ் நாட்டைப்போல 5 மடங்கு நிலப்பரப்பையும், அரைவாசி மக்கள் தொகையையும் (அண்ணளவாக 4 கோடி) கொண்டது ஆப்கானிஸ்தான். இதில் ஷியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்களின் அதிகரித்த செல்வாக்கு ஆப்கானின் வட பாகத்தில் உண்டு.

அமெரிக்காவும் அதைச் சார்ந்த நாடுகளும் தலிபான்களுக்கு எதிராகக் கருத்துக் கூறுவதற்கு அவர்களிடம் காணப்படுகின்ற இஸ்லாமிய அடிப்படைவாதக் கடும்போக்கும் பெண்கள் மீதான அடக்குமுறையும் காரணம் என்று கூறப்படுகின்றது. ஆனால், அது அவர்களின் பண்பாட்டுடன் கலந்த நடைமுறைகள், அதனை அமெரிக்கர்கள் அவ்வளவு இலகுவில் மாற்றிவிட முடியாது என்பதைக் காலம் நிரூபித்துள்ளது.

தற்போது ஆப்கானில் இருந்து வெளியேறத் துடிப்பவர்கள் கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்க மற்றும் நோட்டோப் படைகளுடன் இருந்து பணியாற்றியவர்களும் சுகபோகங்களை அனுபவித்தவர்களுமே. தனிப்பட்ட முறையில் தலிபான்கள் தம்மைக் கொல்வார்கள் என்ற அச்சத்தில் அவசர அவசரமாக வெளியேற நினைக்கின்றனர். இவர்கள் 40 ஆயிரம் அளவில் இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் ஏனைய

### தலிபான்களின்...

மக்கள் வாழ்கின்ற பகுதிகள் இயல்பு வாழ்க்கைக்கு மாறியிருப்பது தெரிகிறது. அங்கிருந்து நாளாந்தம் செய்தி ஊடகங்களுக்குக் கிடைக்கின்ற ஒளிப்படங்களும், கைபேசிக் கமராக்களில் எடுக்கப்படுகின்ற உச்சிப் பார்வைப் படங்களும் அதையே காட்டுகின்றன. அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் நினைத்ததைப்போல பெருந்தொகையானவர்களைத் தலிபான்கள் சுட்டுக்கொல்லவில்லை என்பது தெரிகிறது.

**பெண்கள் மீதான ஒடுக்குமுறை**

இதில் பல்வேறு விடயங்கள் அடங்குகின்றன. பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வரும்போது தனியாக அல்லாமல் யாராவது ஓர் ஆண் துணையுடன் வெளியே வர வேண்டும் (ஒரு சிறுவனுடாவது), முகம் துணியால் மூடியிருக்க வேண்டும், பொது இடங்களில் பெண்கள் உரத்துக் கதைக்கக் கூடாது, குதி உயர்ந்த காலணிகளை அணியக்கூடாது, அதன் சத்தம் மற்றவர்களுக்குக் கேட்கக்கூடாது, 8ஆம் வகுப்பு வரை கல்வி கற்கலாம், நகப் பூச்சுகள் பூசினால் தண்டனைக்குரிய குற்றம், வேலைக்குச் செல்ல முடியாது. இவை ஷரியாச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள போதிலும் கடந்த 20ஆண்டுகளாக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் தலிபான்கள் இவற்றில் சில தளர்வுப் போக்கை ஏற்படுத்தக்கூடும்.

ஒரு நாட்டின் இறைமையில் இன்னோர் நாடு தலையிடக்கூடாது என்பது ஐ.நாவின் நடைமுறையாகக் கூறப்பட்டாலும் அதையும் கடந்து பல முன்னணி நாடுகள் ஆப்கான் விடயத்தில் மூக்கை நுழைப்பது தெரிகிறது. அமெரிக்கா கூறுகின்ற ஜனநாயகத்துக்கு அப்பால் அங்குமே ஆப் என்கிற புதிய வகை ஆபத்தான குண்டை அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் பரிசீலித்திருப்பது எதிர்கால ஆப்கானிஸ்தானை எவ்வாறு கையாளப்போகிறது என்பதையே காட்டுகிறது. இதற்கு ஜனநாயகமும் மனித உரிமைகளும் சாட்சியாக இருக்கப் போகின்றன. என்பதே ஒரு கொடுமையான செய்தி.

உலகம் முழுதும் முஸ்லிம் மக்கள் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு மனித அவலமாக இருக்கும் நிலையில் தற்போது ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறுபவர்களாலும் அகதிகளை உள்வாங்கும் நாடுகளுக்குத் தலையிடி ஏற்பட்டிக்கிறது. உலக நாடுகளும், ஐ.நாவும், ஊடகங்களும், மனித உரிமை அமைப்புகளும் ஒரு விடயத்தில் கவனம் செலுத்தத் தவறக்கூடாது. அதாவது ஆப்கானில் இருக்கும் பெரும்பான்மையான மக்கள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற முயலவில்லை என்பதையும் அவர்கள் தலிபான்களுடன் வாழ விரும்புகிறார்கள் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். மக்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கப்போகின்ற முதலாவது நாடு தலிபான்களால் நிர்வகிக்கப்படவுள்ள ஆப்கான் மக்களல்ல என்பதையும் உலகம் கண்ணைத் திறந்து பார்க்கவேண்டும்.

# எங்கடை முதுகிலை நாங்களே தட்டுவமோ?

● கதிரேசன் காத்தவராயன்



"எங்கை வெளியிலை போக?" எண்டிற கேள்வி எனக்குத்தான் பொருந்தும்போலை... றோட்டு வலு கலகலப்பாய்த்தான் கிடக்குது... சட்டம் ஒரு பக்கம், வருத்தம் ஒரு பக்கம், சனமோ இன்னொரு பக்கம், நாட்டு நடப்பை நினைக்கச் சீய் எண்டல்லே கிடக்குது. றோட்டிலை பார்த்தால், நாட்டிலை கெடுபிடி இல்லவே இல்லைப்போலை கிடக்குது.. ஆனால் எனக்கு வீட்டிலை கடுங்கெடுபிடி.. படலை கடக்க முடியாச் சட்டம். ஆரோடையும் ஏதும் கதைக்காட்டில் தலை பத்தாயிரம் பதினைஞ்சாயிரமாச் சிதறுமாப் போலை கிடக்குது எண்டுபோட்டு மெல்லப் படலையடியிலை நிண்டன்.



சம்பர் அதாலை போனவர் என்னைக் கண்டிட்டார். சடக்கெண்டு சைக்கிளாலை குதிச்சு படலைக்குள்ளை வந்திட்டார். "என்ன கதிரேசண்ணை ஆளையே காணமுடியுதில்லை?" எண்டு கதையைத் தொடக்க தம்பர் பாய்ஞ்சடிச்சபடி வந்து சேந்தார். "அண்ணை அங்காலை சந்தியிலை பொலிஸ் ஆக்களை மறிச்சு பீசீஆர் செய்யுதாம்" எண்டார். "உதைக்க வேணுமடா உங்களை.. சட்டம் போட்டால் மதிச்சு நடவுங்கோவன்" எண்டு நான் சொல்ல பேசாமலுக்கு நிண்டிட்டினம் ரண்டு பேருமே.

"சரியப்பா நாடு போகிற போக்கைப் பாக்கப் பயமாயல்லே கிடக்குது?" எண்டு கதையை மாத்தினன். "ஊரடங்கு போடப்போகிறான் எண்டவுடனை பெற்றோல் செற்றிலையும் பாறிலையும் குவியிற முன்யோசினையிலை கொஞ்சத்தையெண்டாலும் வருத்தப் பாதுகாப்பிலையும் யோசிக்க முடிஞ்சிருந்தால் இந்தளவுக்கு மோசமான நிலைமை வந்திருக்காதல்லே?" எண்டு நான் சொன்னதை "ஓமோம் எங்கடையாக்கள் கவனமில்லாத ஆக்கள்தான்" எண்டு ஆமோதிச்சினம்.

"உந்தச் செல்லடி பொம்பரடிக்குள்ளை தப்பின எங்களுக்கு உதென்ன பெரிய பிரச்சனையையே எண்டல்லே நினைக்கினம்... கதைக்கினம்..." எண்டு தம்பர் சொல்ல "உதைத்தானே அரசாங்கமும் புழுகினது... பயங்கரவாதத்தை ஒழிச்சமாதிரி இதையும்ஒழிப்பமெண்டு மார்தட்டினதின்ரை விளைவைப் பாக்கிறம்தானே..." எண்டார் சம்பர். "உண்மைதான்.. வருத்தத்தாலை சாகப்போறமோ இல்லையோ பட்டினியாலை துலையப்போறம்" எண்டன் நான்.

"இஞ்ச வேலித் தடியை முறிச்சு மூண்டு கல்லை கோடிக்குள்ளை வைச்செண்டாலும் அடுப்பு மூட்டலாம்.. நகரப் பக்கம் உது சரிவருமே? காஸ் கண்ணிலை படுகுதில்லை..." எண்ட உண்மையைப் புலம்பிச்சுது தம்பர். அப்ப சுதன் வந்துது. "மாமா உங்களிட்டை சண்டி இலை வாங்குவமெண்டு வாறன்.. நீங்கள் வழக்கம் மாதிரி கலகலப்பாத்தான் இருக்கிறியள் போலை..." எண்டான் சுதன். "ஓ... ஓ... சும்மா இதிலை கண்டாப்போலை நாட்டு நடப்பைக் கதைக்கிறம்..." எண்டன் நான்.

"பள்ளிக்கூடங்களை வாற மாதம் திறக்கிறதைப் பற்றி யோசிக்கினமாம் தம்பி! உண்மைதானோ?" எண்டார் தம்பர். "ஓஓ... அதோ... அது சரிவருமெண்டு நினைக்கக்கூடின மாதிரியே நிலைமை கிடக்குது? பொழுதுபோகக் கதைக்கிற கதைதான். றிப்போட்டேசும் அதைப் பெரிசாக்கி செய்தியாக்கிறாங்கள்..." எண்டு சுதன் சலிச்சுக்கொண்டான்.

"அது சரி தம்பி! சோதினையள் அறம்புறமா நடக்குது, உன்ரை பள்ளிக்கூடத்திலையும் நடக்குதோ?" எண்டு கேட்டார் சம்பர். "ஓஓ... நடக்குது எண்டுதான் நாங்களும் இருக்கிறம்... பிள்ளையள் கொஞ்சம் வடிவாப் பயன்படுத்துதுகள்... படிச்சதுகளை மீட்டுறதுக்கும் படிக்காததுகளை அறியிறதுக்கும் ஒரு சந்தர்ப்பம்தானே? ஆனால் பெரும்பாலான பிள்ளையளுக்கு ஒண்டுமேயில்லை. எழுதுகிற கொஞ்சத்திலையும் அனேகமான பிள்ளையள் பாத்தெழுதுறதும் கூட்டுமுயற்சியும் எண்டு அர்த்தமில்லாமல் கிடக்குது" எண்டு உண்மையை போட்டுடைச்சான்.

"அப்ப உந்தச் சோதினையாலை என்னதான்ராப்பா பிரயோசனம்?" எண்டார் தம்பர். "நாங்கள் கல்வியிலை அக்கறையாயிருக்கிறம் எண்டு அதிகாரிகள் காட்ட உதவுமல்லே?" எண்டார் சமப்பர். சுதனும் நானும் சிரிச்சம். தம்பர் புரியால் தடுமாறினார். "உண்மைதான் மாமா... இதிலை பிள்ளையள் எடுக்கிற மாக்ஸ்சை வைச்சு ஒன்லைன் வகுப்புகளும் செயலட்டையளும் வெற்றி எண்டு அறிக்கையெழுதலாம். ஆனால் முக்கால்வாசிக்கு மேலை பிள்ளையள் உந்தச் சோதினையளிலை பங்குபற்றேல்லை எண்டிறதையும் ஏற்றுக்கொண்டு முடிவுகளை எடுத்தால் நல்லாயிருக்கும்... அது எப்பிடியோ பெரிய இடங்களின்ரை முடிவல்லே?" எண்டான் சுதன்.

"செய்யிற வேலையளுக்காக எங்கடை முதுகளிலை நாங்களே தட்டிப் பாராட்டலாம்" என்ன? எண்டு நான் சொன்னதோடை கதையை நிப்பாட்டிட்டம்.

■

# தமிழ் மக்களின் அதிகரித்த பொருட் கொள்வனவு

நியூட்டன்



அன்றாடப் பாவனைப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் விடயத்தில் தமிழர்கள் போருக்கு முந்தைய காலம், போர்க் காலம், போருக்குப் பிந்தைய காலம் (2009இன் பின்) எனப் பல்வேறு கட்டங்களில் பல் வேறு மாற்றங்களைக் கடந்து வந்திருக்கின்றனர். இதில் கடந்த 12 வருட காலத்தில் பொருட் கொள்வனவு செய் வதில் அபரிமிதமான மாற்றத் தைக் காணமுடிகிறது.

தமிழ் மக்களில் 30 சதவீதத் துக்குக் குறைவானவர்களா லேயே இந்த மாற்றம் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இன்றுள்ள இந்தப் போக்கென்பது ஏன் பொருட்களைக் கொள்வனவு செய்கிறோம் என்ற திட்டமில்லாமல் செயற்படுபவர்களால் நடந்தேறுகிறது.

இவர்கள் வேறு யாருக்காவது வழங்குவ தற்காக இந்தக் கொள்வனவுகளைச் செய்வ தில்லை. இதில் வெளிநாட்டுப் பணம், சுப்ப மார்க்கெற்றுகள், ஸ்மார்ட் தொலைபேசிகளின் பாவனை, இந்தியத் தொலைக்காட்சி நாடகங் களின் செல்வாக்கு, மோட்டார் சைக்கிள்கள், கார், வான்களின் பாவனை எனப் பல்வேறு விடயங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. இவை யனைத்தையும் தம்வசப்படுத்த முடிந்த ஓரள வுக்காவது பண வசதியுள்ள வர்க்கமே அந்த 30 சதவீதத்தவர்களுமாவர். போர் முடிந்த பின் னர் இந்தக் கொள்வனவுப் பழக்கம் அதிகமாக இருந்தபோதிலும் இந்தக் கொரோனாத் தொற்றுக்காலம் அதை மேலும் உந்தித் தள்ளி யிருக்கிறது.

### சுப்ப மார்க்கெற்றுகள்

2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப் பாண நகரில் அன்னை நாகா பூட் சிற்றி மாத்தி ரமே சுப்பர் மார்க்கெற் தரத்தில் முதன் முதலில் திறக்கப்பட்டிருந்தது. தற்போது அனேகமாக யாழ்ப்பாணத்தின் எல்லா நகரங்களிலும் இந்தச் சுப்ப மார்க்கெற்றுகள் முளைத்திருக்கின்றன. சுப்பர் மார்க்கெற்றுகளில் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஒரு நாகரீக பாணியும், ஒரு கூரைக்குள் எல்லாவற்றையும் வாங்கி விடலாம் என்பதும், காலாவதித் திகதி, விலை, பொருள்கள் ஆகியவற்றைப் பார்த்து வாங்க லாம் என்பதும் வகை வகையான மேலை நாட்டு உணவுப் பொருள்களை வாங்கலாம் எனபதுமாகப் பல்வேறு காரணங்கள் கூறப்பட் டாலும் உண்மையில் அங்கு பொருள்கொள்வனவு செய்யக்கூடிய பண வசதி சிலரிடம் இருப்பதும் அவர்களைப் பார்த்து தாமும் நடந்துகொள்ள வேண்டும் என்கிற ஆசை பலரிடம் இருப்ப துமே இதற்கான முதன்மைக் காரணமாகும். பண வசதியும் வெளிநாட்டுத் தொடர்புகளும் இல்லாத மக்கள் குளிரூட்டப்பட்ட - மின்னொ ளியில் மினுங்குகின்ற - வாகனங்கள் அதிகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஓர் ஆடம்பரச் சூழ லுக்குள் புகுந்து பொருள்களை வாங்க விரும்பு வதில்லை. "உதுக்குள்ள போனால் ஆயிரத்து ஐஞ்நூறு ரூபா எண்டாலும் வேணும்" என்று விலகிக் கொள்பவர்களும் இருக்கின்றனர்.

சுப்பர் மார்க்கெற் என்பது பேரம் பேசலில் லாத ஓர் இடம். அதற்குள் கடிகாரம் இருப்ப தில்லை. அங்கு பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்பவர்கள் எவ்வளவு நேரம் எடுத் தாலும் பரவாயில்லை என்று சுமை தெரியாமலி ருக்கச் சில்லுப் பூட்டிய வண்டில்களைக் கை யில் கொடுத்து அதிகம் பொருள்களை வாங்க வேண்டும் என்று உந்துகிறார்கள். அவசரத் துக்குச் சிறுநீர் கழிக்கவேண்டுமானால் கடைக் குள்ளே அந்த வசதிகளும் உண்டு. அதிக நேரம் அந்தக் கடைக்குள் மக்கள் நிற்க வேண் டும் என்பதே அதன் எதிர்பார்ப்பு.

ஒரு சுப்பர் மார்க்கெற்றுக்குள் புகுந்த உட னேயே பல பொருள்களுக்கு விலைக்கழிவு, இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம், முற்கூட்டியே குறுந் தக வல்கள் மூலம் வாடிக்கை யாளருக்குச் சலுகைகளை அறியத் தருவது வாடிக்கை யாளரின் பெயர் ,தொலை பேசி இலக்கம் பொறித்த சிட்டைகளை வழங்குவது என எல்லாம் சுப்பர் மாரக் கெற்றுகளுக்கும் பொருள் களை வாங்குபவர்களுடன் தமக்கான ஓர் இணைப்பை - உறவைப் பேணுவதற்கு தனியாகச் செயற்படுகின் றன.

இதைவிடச் சிறுவர்கள் தமக்குத் தேவையான பொருள்களை இலகுவில் கைவைத்து எடுக்கக்கூடிய உயரத்தில் கீழ்த் தட்டுகளில் அடுக்கி வைத்திருப்பதால் பிள்ளைகள் தமக்குப் பிடித்த எல்லாவற்றையும் பெற்றோர் இழுத்துச் செல் லும் வண்டில்களுக்குள் நிரப்புகின்றனர். அதற்கு மேலதிகமாகப் பணத்தைச் செலுத்தும் இடங்களில் பிள்ளைகள் அதிகம் விரும் பும் விலையுயர்ந்த இனிப் புப் பண்டங்கள், அவற் றுடன் இணைக்கப்பட்ட விளையாட்டுப் பொருள்கள் போன்றவற்றைக் கவர்ச்சிகர மாக அடுக்கி வைத்திருப் பார்கள். பணம் கொடுத்து வெளியேறுவதற்குள் பிள் ளைகள் வேறு சில விலையு யர்ந்த பொருள்களையும் எடுத்து விடுகின்றனர்.

**2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாண நகரில் அன்னை நாகா பூட் சிற்றி மாத்திரமே சுப்பர் மார்க்கெற் தரத்தில் முதன் முதலில் திறக்கப்பட் டிருந்தது.**

### கடன் வியாபாரம் இல்லை

1990களுக்கு முன் பிறந் தவர்கள் தமது பெற்றோரு டன் அல்லது மூத்த சகோ தரர்களுடன் சங்கக் கடைக் குச் செல்வதாகவே நடை முறையும் வழக்கமும் இருந் தது. அங்கு பேரீச்சம்பழம், கற்கண்டு, பிஸ்கட் போன்ற எதையாவது வாங்கித் தருவார்கள் என்ற ஆர்வத்திலேயே அவ்வாறு செல்வதுண்டு. இதைவிடத் தனிநபர் கடைகளில் ஏதாவது பொருள்கள் வாங்கினால் ஒரு புளுட்டோ ரொபி அல்லது தோடம்பழ இனிப்பு மிச்சக் காசுக்குத் தருவார்கள். அப் போதைய சிறுவர்களுக்கு பொருள்களின் விலைகள் துல்லியமாகக் கணக்கிடத் தெரியா விட்டாலும் இவ்வளவு பொருள்களை வாங்கி னால் தமக்கு என்ன தேறும் என்று தெளிவாகத் தெரிந்திருந்தது.

உள்ளூரிலுள்ள கடைகள் பல கடன் கொடு த்து அவற்றை மீளப் பெற முடியாமல் ஊரவர்க ளுடன் விரோதத்தைத் தேடி பூட்டப்பட்ட சம்பவங்கள் பலவுண்டு. ஒரு ராத்தல் பாணைக் கடனாகக் கேட்டுக் கடைக்காரர் அதைக் கொடுக்காத பட்சத்தில் ''நாங்கள் ஒரு பாணுக்குப் பெறுமதியில்லா மல் போயிற்றம் என்ன'' என்று கூறி அதற்காகச் சண்டை பிடித்து இறுதியில் அந்தக் கடன் ஆக்கி னைகள் தாங்காமல் பழைய தகரத்தில் கடன் இல்லை, இன்று கடன் இல்லை எனச் சுண்ணாம் பால் எழுதிக் காட்சிப்படுத்திய ஊர்க் கடைகளும் இருந்தன. ஆனால் அவர்கள் தம்மிடமுள்ள பொருள் களை ஓரளவுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள்.

இவ்வாறு பொது மக்களின் நலன்களில் அக்கறையுள்ள பல வர்த்தகர்கள் இருந்தாலும் திரு நெல்வேலி கலாசாலை வீதியில் இருக்கும் தாஸ் கடை இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். பொருளாதாரத் தடை நிலவிய காலத்தில் அவருக்கு ஒரு பரல் மண்ணெண்ணெய் கிடைத்தாலும் தம்மிடம் பொருள்கள் வாங்கும் வாடிக்கையாளர்களக்குக் கால் போத்தல் மண்ணெய்யையாவது கொடுப்பார். யாராவது அதை வாங்கத் தவறியிருந்தால் அவ் வழியால் சொல்லும்போது கூப் பிட்டுச் சொல்வார்.

சுப்பர் மாக்கெற்றுகளில் ஒரு வர் பத்து வருடங்கள் வாடிக்கை யாளராக இருந்து பல லட்ச ரூபாய்களுக்குப் பொருள்களை வாங்கியிருந்தால்கூட பத்து ரூபா குறைந்தால் அதைக் கடனாகப் பெற முடியாது. ஏன் எனில் அதன் உரிமையாளரை மக்கள் நேரடி யாகக் காண முடியாது. ஊழியர் கள் தமது எண்ணத்துக்குக் கடன் வழங்கவும் முடியாது. கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் கணினி மயப்படுத்தப்பட்டிருப்பதால் அதற்குள் புகுந்து கடன் கொடுப் பது சிரமமாகும்.




### கூட்டுறவுச் சங்கங்களின் வீழ்ச்சி

பொருளாதாரத் தடை, பொருள்களுக்கான தட்டுப்பாடு, இடர்காலப் பிரச்சினைகள் என ஏற்படும்போதெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறப்பாக இயங்கின. ஆனால் தற்போது அந்த நிலையில்லை. ஒரு குடும்பத்துக்கான பொருள்களைக் கூட்டுறவுக் கடைகளில் பெறு வதற்கான பொறிமுறை ஏற்கனவே இருந்த போதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் முன்பிருந்தது போல கொள்வனவு ஆற்றல்களைக் கொண்டி ருக்கவில்லை. கடந்த கால ஊழல்களால் பெரு மளவு நட்டத்தையே கூட்டுறவுச் சங்கங்கள் அடைந்திருக்கின்றன. இதனால் மக்களுக்கான சேவைகளை அவர்களால் வழங்க

(10ம் பக். பார்க்க)

மைல் 14

# தொலைதூர காதல்

கலியுக பித்தன்

"என்னப்பா பயந்துட்டியா?" முகத்தின் மேல் படர்ந்திருந்த சங்கரனின் கண்ணீர் துளிகளை துடைத்தவாறே கேட்டாள் சரஸ்வதி.

"அதொன்டும் இல்லைப்பா... ராத்திரி கொஞ்சம் கூட நேரமா யோசனையில இருந்துட்டன்... தூக்கமும் வரேல. பிறகு எப்பிடி நித்திரை கொண்டனோ என்டும் தெரியேல" கூறிக்கொண்டே அவன் மடியில் இருந்து எழுந்தாள்.

நீண்ட அழுகையை கடிவாளம் போட்டு பாதியிலையே நிறுத்தி கொண்டு சரஸ்வதியை ஒரு பார்வை பார்த்தான். எந்த அர்த்தப்படுத்தலுக்குள் அந்த பார்வையை அடக்குவது என்பதே தர்மசங்கடமான ஒன்றுதான்.

தாய்க்கு எதுவும் ஆகவில்லை என்று சந்தோஷப்படுவதா? இல்லை, தன்னால் தாய் எவ்வளவு கஷ்டத்தை அனுபவித்து கொண்டிருக்கிறாளே என்று தன் மீது கோபப்படுவதா? என்கின்ற இருவேறான உணர்வுகளின் நடுவே உள்ள உணர்விற்குரிய பார்வைதான் அது.

"இப்பவாவது பேசேன்பா.." இரு கைகளையும் விரித்தாள்.

ஒரு தாயின் அதிகப்படியான ஆசையே தன் பிள்ளை தன்னோடு மனம் விட்டுப் பேசவேண்டும், தன் கவலைகளை தன்னோடு பகிர்ந்து ஆறுதல் அடைய வேண்டும், தன் சந்தோஷங்களை தனக்கும் கூறி ஆனந்தம் அடையவேண்டும் என்பதாய்தான் இருக்கும்.



தன் உணர்வுகளை மட்டுமே நியாயப்படுத்தி பார்த்த அவனுக்கு, தாயின் உணர்வுகளையும் புரிந்து கொள்ள வேண்டியதன் நியாயப்பாடும் தற்போது புலனாகியிருந்தது.

"சொல்லுங்கம்மா..." சரஸ்வதியின் தோள்களை பற்றி, அவள் எழுந்து கொள்வதற்கு உதவியபடியே கேட்டான்.

"இந்த வார்த்தையை கேட்டு எவ்வளா நாளாச்சு தங்கம்" ஆனந்த கண்ணீர் பெருக்கெடுக்க, சங்கரனின் கன்னங்களைத் தடவி கொடுத்தவாறே சொன்னாள்.

தாயின் வாயிலிருந்து உதிர்ந்த அந்த சிறு வார்த்தையில் எவ்வளவு கனதி இருந்திருக்கவேண்டும். அந்த வார்த்தைக்கான பதிலை சொல்வதற்கு, சங்கரன் நீண்ட யோசனை செய்ய வேண்டியிருந்தது. அமைதியை தவிர வேறு பதிலை அவனாலும் கூறமுடியவில்லை.

"சரிப்பா இந்தக் கிழவிக்கு இப்போதைக்கு நீ சொன்ன உந்த சொல்லு ஒண்டு காணும். உனக்கும் ஆபிஸிக்குப் போக டைமும் ஆக போகுது.. நீ வெளிக்கிட்டு ஓடு.." உடல் பலவீனமாக இருந்தாலும், மனதில் உண்டான பலம் அவளை உறுதியாக வார்த்தைகளை வெளித்தள்ளிய படியே, சுயமாக எழுந்து கொள்ளவும் உதவியது.

சரஸ்வதி இவ்வளவு பேச்சு பேசியும் மறு பேச்சு பேசுவதற்கு அவனால் முடியவில்லை. திடீர் ஊமையாக மாறிவிட்டான்.

சரஸ்வதியும் அவனிடமிருந்து எந்தப் பதிலையும் எதிர்பார்த்து இருக்காததால், தனக்கான அன்றாட கடமைகளுக்குள்ளும், பணிகளுக்குள்ளும் தன்னை மூழ்கடித்துக்கொள்ளத் தொடங்கினாள்.

சங்கரனோ, ஏதேதோ எல்லாம் சிந்தித்தவனாய் தனக்கான காலைக் கடன்களை ஒவ்வொன்றாய் நிறைவேற்றி கொண்டிருந்தான். அப்படி இருந்தும் அவன் மனம் இன்னும் தெளிவு அடைந்தபாடாயில்லை. குழப்பத்தின் நடுவிலேயே தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தான்.

* * *   * * *   * * *   * * *

மீண்டும் இரண்டு மூன்று நாட்கள் சங்கரன் வேறொரு உலகத்தில் சஞ்சாரித்து கொண்டிருந்தான்.

இப்பூலோகவாசிகளிடம் எந்த தொடர்பையும் வைத்திருக்க அவன் விரும்பவில்லை.

கற்பனையில் கதைத்துக் கொண்டிருந்தான். சிரித்து கொண்டிருந்தான். இருந்திருந்து அர்த்தமற்ற கோபம் கொண்டு உக்கிரமாக நடந்து கொண்டான்.

அவனைப் பார்க்கும் மாணவர்கள் அச்சத்தால் நாலாபுறமும் தெறித்து ஓடினர். ஆசிரியர்களும் அவனின் நிலையைப் பெரிதுபடுத்திக் கொள்ளாது, அவன் போக்கிலேயே விட்டுவிட்டார்கள். உற்ற நண்பர்கள்கூட இடைவெளிகளை ஏற்படுத்தி கொண்டிருந்தனர். ஆனால் அவள் மட்டும் இன்னும் அவனோடு நெருங்கி கொண்டிருந்தாள்.

ஒருநாள் சங்கரன் தனியாக புலம்பி கொண்டிருக்க, அவ்விடத்தால் சென்று கொண்டிருந்த ரவீனா அவனைக் கண்டதும் ஸ்தம்பித்து போய் நின்றாள். அவன் என்ன பேசுகிறான் என்பதை அறிவதற்காய் தன் செவிகளை கூராக்கியபடி தயாரானாள்.

**கற்பனையில் கதைத்துக் கொண்டிருந்தான். சிரித்து கொண்டி ருந்தான். இருந்திருந்து அர்த்தமற்ற கோபம் கொண்டு உக்கிரமாக நடந்து கொண்டான்.**

"வர்ஷூ, நீ ஏன் இப்பிடி என்னோட கோவிக்கிறா? இப்ப இப்ப நீ என்னை சரியா கஷ்டப்படுத்திறா.." சோகமான தொனியில் சொன்னான்.

"ப்ளீஸ் வர்ஷூ, எனக்கு உன்னை நிறைய பிடிக்கும்.. உனக்கு ஏன் அது புரிய மாட்டேங்குது?"

"கொஞ்சம் இரு... யாரோ என்னை பற்றி பேசி கொண்டு போறாங்கள்... என்னன்டு கேட்டுக்கொண்டு வாறன்" கூறிக்கொண்டே விரைவாக எழுந்து சற்று தூரத்தில் தங்களுக்குள் பேசியவாறு சென்று கொண்டிருந்த இரு மாணவர்களை நெருங்கி சென்றான்.

"இஞ்ச நில்லு.. என்னை பற்றி என்ன கதைச்சு கொண்டு போறீங்கள்?" முறைத்தான்.

"நாங்கள் உங்களைப் பற்றி என்ன கதைச்சு கொண்டு போனாங்கள்... ஒன்டும் கதைக்கேல" என்றான் ஒருவன்.


# குருதியும் யாழ்ப்பாணமும்

ரவீந்திரன்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதித் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதற்காகக் குருதிக் கொடையாளர்களிடம் உதவி கோரப்பட்டது. இந்த நிலையில் யாழ்ப்பாண தரைப்படைக் கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் கிட்டத்தட்ட 200 சிப்பாய்கள் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் குருதி தானம் செய்தார்கள்.

ஒரு துளி குருதியைக் கூடத் தானம் செய்யாத முகநூல் அரட்டையர்கள் சிலர் இந்த விடயம் தொடர்பாக படையினரைப் பாராட்டியும், விமர்சித்தும் பதிவுகளை இட்டிருந்தார்கள். ஒரு பைந்த் குருதிகூட ஒருவரது உயிரைக் காக்கப் போதுமானது என்பது பலரும் அறிந்ததே. இதனால்தான் குருதிக்கு "உயிர்த்துளி" என்ற சிறப்புப் பெயரும்கூட.

**தமது உடலுக்குள் வேறு யாருடையதோ குருதி ஏற்றப் பட்டதன் பின்னரும் தங்களை உயர் சாதிக்காரர் என்றே அவர்கள் கூறித் திரிகின்றனர் என்பது வேடிக்கையிலும் வேடிக்கை.**



### சாதி, மத, மொழி, இனம் கடந்த குருதி

முன்னைய காலத்தில் (1970-80களில்) யாழ்ப்பாண மருத்துவமனையில் யாருக்காவது குருதி தேவைப்பட்டுக் குருதி ஏற்றவேண்டியிருந்தால் ஆரியகுளம், கொட்டடி, பாசையூர், கொழும்புத்துறை என நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் அலைந்து யாரையாவது பணம் கொடுத்துப் பிடித்து வந்து குருதியைப் பெறும் வழக்கம் இருந்தது.

ஒருவரிடமிருந்து குருதி எடுத்தால் அவர்கள் இறந்துவிடுவார்கள் ஆனால், மேற்கூறப்பட்ட ஊர்களில் இருப்பவர்கள் பலசாலிகள் ஆகவே இறக்கமாட்டார்கள் என்ற எண்ணம் அப்போது பொதுவில் இருந்தது. இவ்வாறு குருதி தேடி அலைபவர்கள் பெரும்பாலும் உயர் சாதிக்காரர் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள மேட்டுக்குடியினராகவே இருந்தார்கள். தமது உயிரைக் காப்பதற்காக அவர்கள் "தாழ்த்தப்பட்டவர்கள்" என அடையாளப்படுத்தப்பட்டவர்களின் குருதியைப் பெற்றுக்கொள்ள இன்றும் பின்னிற்பதில்லை.

தமது உடலுக்குள் வேறு யாருடையதோ குருதி ஏற்றப்பட்டதன் பின்னரும் தங்களை உயர் சாதிக்காரர் என்றே அவர்கள் கூறித் திரிகின்றனர் என்பது வேடிக்கையிலும் வேடிக்கை. வேறு எப்படித்தான் அவர்கள் சாதி ரீதியாகத் தங்களை வேறுபடுத்திக்கொள்கிறார்கள் என்பதை அந்த ஆண்டவனே அறிந்து வைத்துள்ளானோ என்பது சந்தேகமே.

### அரசியலில் குருதி

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தளபதி என வர்ணிக்கப்பட்டவர் அமிர்தலிங்கம். அந்தக் கட்சியினர் பேசியது அகிம்சையாக இருந்தபோதும் வெள்ளை வேட்டி, சால்வையுடன் அமிர்தலிங்கம் மேடையில் பேசத் தொடங்கும்போது பல இளைஞர்கள் தமது கைகளைச் சவர அலகினால் கீறி அதில் வரும் குருதியை அமிர்தலிங்கத்தின் நெற்றியில் வைத்த காலம் ஒன்றுள்ளது. அந்தக் குருதியில் சாதி பார்க்கப்படவில்லை. ஏனெனில் அத்தகைய தொண்டர்களின் வாக்குகளால்தான் அமிர்தலிங்கம் போன்றவர்கள் நாடாளுமன்றம் செல்லவேண்டிய தேவையிருந்தது. ஆனால் இப்போது அவரது கட்சியும் அந்தக் கட்சி தலைமையிலான கூட்டும் சாதி பார்த்துத்தான் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் வாக்காளர்களைத் தெரிவு செய்கின்றன என்பது கொடுமையிலும் கொடுமை.

அகிம்சாவாதி ஒருவர் குருதியைத் தனது நெற்றியில் பூசிக்கொள்வது எவ்வளவு கொடுமையானது என்பதை அமிர்தலிங்கத்தின் நெற்றியில் இளைஞர்கள் குருதித் திலகம் வைத்தபோது மக்கள் சிந்திக்கவில்லை. தமிழீழம் கிடைக்க வேண்டும் என்று குருதியால் சபதம் எடுத்தார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் வட மாகாணத்துக்கான

---

## தொலைதூர...

"பொய் சொல்லாதடா.. எனக்கு கேட்டது " முறுகலான தொனியில் இரைந்தான்.

"நாங்கள் எதுக்கு.." சொல்ல முற்பட்டவனை இடைமறித்து,

"இந்த பைத்தியத்தோட எங்களுக்கு என்ன கதை வேண்டி கிடக்கு? நீ வா போவம் " என்றான் மற்றையவன்.

"யாரை பார்த்துடா பைத்தியம் எண்டாய்..?" கத்திக்கொண்டே அவனின் சட்டையைப் பிடித்து உலுப்பினான்.

அவர்கள் இருவருமாக சங்கரனின் கைகளை பிடித்து மடித்து, அவனை தாக்குவதற்கு தயாராவதை பார்த்ததும் பதறியடித்து கொண்டு அவர்களை நெருங்கி வந்தாள் ரவீனா..

"அண்ணா அண்ணா.. ப்ளீஸ் அவரை மன்னிச்சு விடுங்கோ.." கைகூப்பியவாறே கெஞ்சினாள்.

அவளின் வேண்டுகோளை ஏற்றவர்களாய், "தங்கச்சி உங்கட வகுப்புதானே இவன்... கொஞ்சம் கவனமா பாருங்கோ.. இனியும் எங்களோட உப்பிடியென்டா இருட்டடி குடுக்க வேண்டி வரும்.. பிறகு எங்களைக் கேக்காதைங்கோ... இந்தத் தடவை உங்களுக்காக விடுறம்.." எச்சரித்தான் இருவரில் ஒருவன்..

"ஓமோமண்ணா... இனி அவர் உங்களோட சேப்டையளுக்கு வர மாட்டார்.. ரொம்ப தாங்ஸ் அண்ணா..." நன்றியுணர்வோடு கூறினாள்..

இருவரும் சங்கரனை முறைத்தவாறே அங்கிருந்து விலகி செல்ல, ரவீனா சங்கரனை கோபப் பார்வையோடு நோக்கினாள்.

"என்னடா உனக்கு விசரோ? எதுக்கு எல்லா ரோடையும் இப்பிடி வம்புக்கு போறா.. நாளைக்கு உனக்கு ஒன்டென்டா என்ன பண்ண முடியும்..?" அக்கறை கலந்த கோபத்தோடு இரைந்தாள்.

"எதுக்கு நீங்கள் என்னோட கோவிக்கிறீங்கள்? அவங்கள்தான் என்னை பற்றி பேசிக்கொண்டு போனவை " பேச்சில் குழந்தையாக மாறினான்.

"என்ன பேசினவை உன்னை பற்றி..? சொல்லு பார்ப்பம்.."

"அது... அ...து... என்னை பற்றி தான் பேசிக்கொண்டு போனவை " மீண்டும் அதையே மீட்டினான்.

"அதான் உங்களை பற்றி என்ன பேசினவை? அதை சொல்லுங்கோ.." கட்டாயப்படுத்தினாள்..

"தெரியேல.. மறந்துட்டன்... ஆனா என்னை பற்றித்தான் பேசி னவை.."

சொன்னதையே திருப்ப திருப்ப சொல்லி கொண்டிருந்த சங்கரனை பார்க்க அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

"சரி சரி.. அவங்கள விடுங்க.. நாங்கள் அங்கால போவம்.." கூறி கொண்டே அவனின் கைகளை தன் கைகளால் பற்றி பிடித்து கொண்டு முன்னே நடந்து செல்ல, இதை சற்றும் எதிர்பாராத சங்கரன் அவளையும், அவள் பற்றிப் பிடித்து கையையும் மாறி மாறி பார்த்தவனாய் அவளைப் பின் தொடர்ந்து நகர்ந்தான்.

பயணம் தொடரும்...

## தமிழ் மக்களின்...

முடியவில்லை. சங்கங்களுக்குச் சொந்தமான பாதிக்கப்படாத வாகனங்களைக் கழிவு விலையில் கணக்குக் காட்டி இரும்பு விலைக்கு விற்றதாகக் காட்டி தமது சொந்த வங்கிக் கணக்குகளைச் சில சங்கங்களின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் நிரப்பிக் கொண்ட சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில் நடந்தன. இதனால் இப்போது சங்கங்களை நாடுபவர்கள் இல்லை என்கிற நிலை ஏற்பட்டுவிட்டது. சுப்பர் மாக்கெற் மோகத்திற்கு இதுவுமொரு காரணம்.

சுப்பர் மாக்கெற் போன்ற தனியார் வர்த்தகர்கள் மக்களுக்கான சேவை என்பதற்கு அப்பால் தம்மிடமுள்ள பொருள்களை விரைவாக விற்றுப் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாகவுள்ளனர். அதற்காக அவர்கள் அடிக்கடி சலுகைகளை அறிவிக்கவும் தயங்குவதில்லை. இந்தப் போட்டிகளால் சாதாரண கடைகளை நடத்துகின்ற தனியார் கடை உரிமையாளர்கள் இக்கட்டான சூழலில் தமது வாடிக்கையாளருக்குத் தேவையான பொருள்களை வழங்க முடியாது திண்டாடுகின்றனர்.

மக்கள் தொகையில் 30 வீதத்துக்குக் குறைவான மக்கள் தம்மிடமுள்ள பண வசதியைப் பயன்படுத்தி 70 வீதமான மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களையும் தாமே கொள்வனவு செய்து வீட்டில் பதுக்கி வைத்திருக்கிறார்கள். கடந்த ஒன்றரை வருடமாக உழைப்பில் பின்னடைவு நிலையில் இருக்கும் சாதாரண மக்கள் தம்மிடமுள்ள சிறிதளவு பணத்தை வைத்துக்கூடத் தமக்குத் தேவையான அன்றாடப் பொருள்களை வாங்க முடியாத அளவுக்கு ஏனைய மக்களின் அதிகரித்த கொள்வனவுப் பழக்கமே பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று வசதியானவர்கள் தாம் இந்த இக்கட்டான சூழலில் இருந்து தப்பிக்கொள்ள நினைப்பதும் அவர்களுக்கு ஏற்றவாறு சுப்பர் மாக்கெற்றுகள் போன்ற பெரிய முதலீட்டாளர்கள் செய்படுவதும் ஆகும்.

# நம்மவூர்ச் சூத்துமாத்து

குணபாலன் - தம்பனை



## லீசிங்கால் பாடசாலைக் கல்வியை இழக்கும் சிறுவர்கள்




தம்பனைப் பகுதியில் கணவரை இழந்த பெண் ஒருவர் தனது இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார். அவரது குடும்ப வாழ்வாதாரத்துக்கு உதவுவதாகக்கூறி லீசிங் நிறுவனத்தைச் சேர்ந்த சிலர் அந்த விதவைப் பெண்ணை அணுகி அவர்களின் வருமானத்தை மேம்படுத்தும் வகையில் "லாண்ட் மாஸ்ரர்" ஒன்றை வழங்கியிருந்தார்கள்.

லாண்ட் மாஸ்ரரை இயக்க முடியாத அந்தப் பெண் சாரதிக்குச் சம்பளம் கொடுத்து வேலைகளைக் கவனிக்க வேண்டியிருந்ததால் அவளால் எதிர்பார்த்த வருமானத்தைப் பெற முடியவில்லை. ஆனால், லீசிங் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் மாதாந்தம் செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்தியே ஆகவேண்டும் என வற்புறுத்தினார்கள்.

தவணைப் பணத்தைக் கட்டுவது தற்போது சிரமம் என்று அந்தப்பெண் கூற அந்த நிறுவனத்தின் சட்ட ஆலோசகரை அங்கு அழைத்துச் சென்றார்கள். அந்தச் சட்டஆலோசகர் அந்தப் பெண்ணிடம், நீங்கள் பணம் கட்டாவிட்டால் உங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என அரைகுறைத் தமிழில் அச்சுறுத்தி, ஆவணம் ஒன்றில் அந்தப் பெண் ஒப்பம் இட்டிருப்பதைக் காட்டி உங்களுக்கு எதிராக நாங்கள் கொழும்பில் வழக்குத் தொடர்ந்தால் நீங்கள் கொழும்புக்குச் சென்றுவரும் செலவு, அங்கு தங்குவதற்கான செலவு, சட்டத்தரணிக்கு வழங்க வேண்டிய பணம் எனப் பெருமளவில் செலவிட வேண்டியிருக்கும் இவை எல்லாவற்றையும் தடுப்பதாக இருந்தால் நீங்கள் மிகுதியாக உள்ள பணத்தைக் கட்டவேண்டும். இல்லாவிட்டால் சிறைசெல்லவேண்டியிருக்கும். என்றெல்லாம் கூறிப் மிரட்டியிருக்கிறார்.

இதைக் கேட்டுப் பயந்த அந்த விதவைப் பெண் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த தனது இரண்டு பிள்ளைகளையும் கடைகளுக்கு வேலைக்கு அனுப்பி அவர்களின் சம்பளத்தைப் பெற்று மாதா மாதம் லீசிங் பணத்தைக் கட்டி வருகிறார்.

லீசிங் விடயத்தில் இறங்குபவர்கள் தாம் செய்யும் தொழிலை விட்டுவிட்டுப் புதிய தொழில் முயற்சிகளில் இறங்குவது தவறு நீங்கள் குறுகிய காலத்தில் பணக்காரர் ஆகிவிடலாம் என்று லீசிங் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் பொய்கள் பலதையும் சொல்லிக் கதைவிடுவர். அதேவேளை தமக்கு விளக்கமில்லாத சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பதிப்பித்து வந்து காண்பிக்கும் ஆவணங்களில் ஒப்பமிடக்கூடாது. இத்தகைய கடன்களைத் தவிர்க்கும்போது பொருத்தமற்ற முதலீட்டைச் செய்ய முற்பட்டு அல்லது ஏமாந்து தமது பிள்ளைகளின் கல்வியை இல்லாது செய்யும் நிலையும் வேறு யாரோ பண முதலைகள் தமது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்குச் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதையும் தவிர்க்க முடியும். மக்கள் தொடர்ச்சியான விழிப்புணர்வுடன் இருந்தால் மாத்திரமே இத்தகைய சதித்திட்டங்களில் இருந்து தப்ப முடியும்.

## குருதியும்...

ஆளுநராகவிருந்தவரான றெஜினோல்ட் குரே யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களின் உடலில் சிங்களக் குருதி ஓடுகிறது என்று பல தடவைகள் மேடைகளில் பேசியிருக்கிறார். அதன் அர்த்தம் யாழ்ப்பாணத்தவர்களுக்குத் தேவையேற்படும் போதெல்லாம் குருதி கொடுப்பவர்கள் சிங்களச் சிப்பாய்களாக இருந்தார்கள் என்பதாகும்.

நிலைமை இவ்வாறிருக்கும் போது அண்மையில் சிங்களப் படையினர் குருதி கொடுத்திருப்பது குறித்து சமூக வலைத்தளங்களில் பொங்கியவர்களில் பலர் அந்தக் குருதி எமக்குத் தேவையில்லை என்ற அர்த்தத்திலேயே குமுறினார்கள். சொல்லைவிடச் செயலே வலிமையானது. சிப்பாய்கள் 200 பேர் குருதி கொடுத்திருக்கையில், சிங்களக் குருதி தேவையில்லை என்று வாதிடுபவர்கள் தாங்கள் குறைந்தது 250 தமிழரையாவது குருதி கொடுக்க வைத்துவிட்டு அதை முகநூலில் பதிவு செய்திருந்தால் மிகவும் காத்திரமானதாகவும் இனப்பற்று மிக்கதாகவும் இருந்திருக்கும்.

எந்த விடயம் என்றாலும் சவால் விடுகிற மனநிலையைத் தமிழர்கள் வளர்த்துக்கொள்வது நல்லது. ஆனால் அது வெறும் வாய்ச் சவாலாக இருக்கக்கூடாது. செயற்படுத்தப்படுவதாக இருக்கவேண்டும். அதற்குத் தமிழ்த் தேசியம் பேசுகின்ற அரசியல்வாதிகள் புதிய முன்னெடுப்புகளை மேற்கொள்ள முடியும். தமிழ்த் தேசியக் கட்சிகள் பல்கிப் பெருகியுள்ள நிலையில் அவர்களின் அணி களமிறங்கினால் படையினர் ஒருபோதும் குருதி கொடுக்கும் முயற்சியில் இறங்கப்போவதில்லை. தன்மானமுள்ள தமிழர்கள் அவ்வாறே செயற்படுவார்கள்...!





# சிறைக்குள்... 19

▪ சு.தர்மராசா ▪

**சிறைச்சாலை உட் கதவினூடாகப் பிள்ளைகளை அழைத்து வந்தார்கள். ஐயர் முற்றத்தில் குந்தியிருந்து 2 பிள்ளைகளையும் அணைத்துக்கொண்டு கதறியழுத காட்சியை என்னால் வர்ணிக்க முடியாது. மனதை உலுக்கிய சம்பவம் அது. இத்தகைய ஒரு நிலை எந்தத் தந்தைக்கும் வரக்கூடாது.**

## பிள்ளைகளைக் கண்டு கதறி அழுத ஐயர்

எங்கள் சிறை அறைக்குள் வேதனையில் துடித்துக்கொண்டிருந்தவனின் பெயர் துரை. அவன் எங்கள் இருவரையும் பார்த்து "சித்தாலேப ஏதாவது இருக்கா" என்று கேட்டான். எம்மிடம் அது இருக்கவில்லை. அவனுடைய அந்த வேதனையை மேலும் உச்சத்துக்குக் கொண்டுபோகும் வகையில் ஐயர் அவனுடன் கதைக்கத் தொடங்கினார். அவனது பூர்வீகம் பற்றியெல்லாம் விசாரித்தார். ஐயருக்குத் தமிழிலுள்ள இங்கிதம் என்ற சொல்லின் அர்த்தம் தெரியாமலிருப்பதை நினைத்து நொந்துகொண்டேன். அந்த இருவருடன் நானும் ஒரு பிராணியாக மாட்டிக் கொண்டு விட்டதை நினைத்துச் சபித்தும் கொண்டேன்.

நாள் முழுதும் பயணம் செய்த களைப்பு என்பதால் படுத்தவுடன் நித்திரை வந்தது. நுளம்போ, புளுக்கமோ, பாதுகாப்புப் பற்றிய யோசனைகளே எவையும் இருக்கவில்லை. ஒரு சிங்களச் சிறையில் இருக்கக்கூடிய சாதாரண குழப்பங்கள் எவையும் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இருக்கவில்லை. ஒரு தமிழ்ச் சூழலில் இருக்கிறோம் என்ற எண்ணமே அது.

"தமிழ் அரசியல் கைதிகளை இதைவிடச் சுதந்திரமாக முன்பு சிறைக்குள் நடமாட விட்டோம். மாற்று இயக்கக்காரர்கள் யாராவது தீங்கியல் குற்றங்களுக்காகச் சிறைக்குள் வரும்போது அவர்களை அரசியல் கைதிகள் தாக்கியதால் திறந்து விடும் நேரத்தை நிர்வாகம் குறைத்துவிட்டது" என்று சிறைச்சாலை ஊழியர் ஒருவர் என்னிடம் கூறினார்.



மட்டக்களப்பில் கைதிகளைப் பூட்டித் திறக்கும் நேரம் ஏனைய சிறைகளைவிட வித்தியாசமாக இருந்தது (எல்லாச் சிறைகளிலும் 12 மணிநேரம் பூட்டப்பட்டிருப்பது பொதுவான விடயம்). காலை 6 மணிக்குத் திறந்து கைதிகளை எண்ணியவுடன் வெளித் தொட்டியில் உள்ள தண்ணீரில் குளிக்க விடுவார்கள். அதன் பின் சிறை அறை ஒவ்வொன்றுக்குமுரிய பாணையும் சம்பலையும் சிறை அறையிலிருந்து யாராவது ஒருவர் போய் சமையலறையில் எடுத்து வருவார். காலை 6.45 மணிக்கு மீண்டும் உள்ளே விட்டு வெளிக்கதைவை மட்டும் பூட்டி விடுவார்கள். மீண்டும் 9 தொடக்கம் 10 மணி வரையிலும், மாலை 3.45 மணி தொடக்கம் 4.45 மணி வரையிலும் கைதிகளை வெளியே திறந்து விடுவார்கள். பகல் உணவுக்குத் திறந்து உடனேயே பூட்டி விடுவார்கள்.

மேல் மாடியில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது (அது அறைகளற்ற மண்டபம்). அதுதான் எல்லோருக்கும் பொழுதுபோக்குக் கூடம். அந்தத் தொலைக்காட்சியில் எத்தகைய நிகழ்ச்சி காட்டப்பட்டாலும் ஒரு சில கைதிகளுக்கு அவற்றைத் தொடர்ந்து பார்க்கும் பழக்கம் இருந்தது.

பொதுவாக வெளி வாழ்க்கையில் பிராமணர்கள் உண்ணும்போது சூத்திரர்கள் பார்க்கக்கூடாது என்கிற எழுதப்படாத விதியுண்டு. ஆனால், இங்கு நாங்கள் மூவரும் ஒன்றாக இருந்து சாப்பிடுவோம். நானும் துரையும் மாட்டிறைச்சி சாப்பிடும்போது ஐயர் அருகிலிருந்து மரக்கறிச் சாப்பாட்டைச் சாப்பிடுவார். இது இந்து சமய விழுமியங்களுக்கு முரணானது. தமிழரின் பண்பாடு நம்பிக்கை எல்லாமே இவ்வாறான நடைமுறைகளால் பல இடங்களில் சிதைக்கப்படுவதைக் காணலாம். சில விடயங்களில் மற்றவர்களின் மனம் புண்பட நடப்பது சிரமமானது. ஐயர்கூட வரக்கூடாத இடத்துக்கு வந்துவிட்டால் இப்படித்தான் கஸ்ரப்பட வேண்டும் என்பது சிறைச்சாலையைப் பொறுத்தவரை ஒரு பொது விதியாகவே இருந்தது.

நான் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குச் சென்ற தொடக்க நாள்களில் ஐயருக்கும் எனக்கும் விசிட் வருவதற்கு (பார்க்க வருவதற்கு) யாரும் இல்லை. ஆனால் எமக்கு எந்தக் குறையும் அங்கிருக்கவில்லை. நாம் இருவரும் விசேட அதிதிகள்போல எல்லாக் கைதிகளாலும் கவனிக்கப்பட்டோம். வீட்டில் வாழ்வதுபோல அந்த உறவு இருந்தது. மட்டக்களப்புச் சிறை என்பது ஒருவருக்குச் சிறை என்று புரிவதற்குரிய அடையாளம் மாலை 5.30 மணிக்குப் பூட்டி மறுநாள் காலை 6 மணிக்குத் திறப்பது மாத்திரம்தான்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் மிகப் பழைய காலத்து அலுமினியக் கோப்பைகள் இன்னும் உண்டு. சிறைச்சாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அந்தக் கோப்பைகள் வழங்கப்பட்டிருத்தல்வேண்டும். அது ஒரு தடித்த கனமான அலுமினியத் தகட்டை வளைத்துச் செய்யப்பட்டது. இதுபோன்ற கோப்பைகளை வேறு சிறைகளில் நான் கண்டதில்லை. அந்தப் பழைய தகட்டுக் கோப்பையுடன் வரிசையாக உண வுக்குக் காத்திருப்பது மிகவும் துன்பமானது. இன்னொரு வகையில் சொல்வதானால் அந்தக் கோப்பைகளில் பல்லாயிரக்கணக்கான கைதிகள் உணவு வாங்கிச் சாப்பிட்டிருப்பார்கள்.

சிறைச்சாலையில் கிடைக்கும் பிரதான பயிற்சி சகிப்புத்தன்மையை வளர்த்துக்கொள்வதற்கானது. அங்கு மனதுக்கு ஒவ்வாத நிகழ்வுகள் பல தினமும் நடக்கும். அவற்றைச் சகித்துக் கொள்வதைத் தவிர

(13ம் பக். பார்க்க)

> "அட்மீடஸின் சுற்றத்தினரை அப்பல்லோ இரட்சித்ததாகக் கவிஞர்கள் கூறுகிறார்கள். போலவே, உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் முட்டாள் வேடம் தரித்திருக்கும் கடவுள்தான்" -ரால்ஃப் வால்டோ எமர்ஸன்.

# பல்தஸாரே ஸில்வாண்டேவின் இறப்பு

■ மார்சல் ப்ரூஸ்ட் (தமிழில் இல.சுபத்திரா)

**கடந்த வார தொடர்ச்சி...**



**4**

"நாளையும் மறுநாளும் அதற்கடுத்த நாளும் முந்தைய தினத்தின் அற்ப தருணங்களுக்குள் நுழைந்து நிச்சயிக்கப்பட்ட காலத்தின் இறுதி நொடிகளை நோக்கி அழைத்துச் செல்கின்றன நமது கடந்த காலங்களனைத்தும் முட்டாள் மனிதர்களுக்கு மரணத்தை நோக்கி ஒளிகாட்டியிருக்கிறது. அணைந்திடு, அணைந்திடு, சிறிய மெழுகுவர்த்தியே! வாழ்க்கை என்பது ஒரு நகர்கிற நிழல், தன் காலத்தில் மேடையில் கர்வத்துடனும் பதற்றத்துடனும் நடைபோடுகிற ஒரு துயர்மிகு நடிகன், அதன்பிறகு அவன் காணாமல் போய்விடுகிறான் வாழ்க்கை என்பது கர்வமும் ஆத்திரமும் நிறைந்த ஒரு முட்டாள் சொல்கிற அர்த்தமற்ற கதை". -ஷேக்ஸ்பியர், மெக்பத்

மைத்துனியின் நோய்மைக் காலத்தில் அவருள் ஏற்பட்ட உணர்வுகளும் களைப்பும் அவரது நோயை அதிகப்படுத்தியிருந்தது. இன்னும் ஒரு மாதம் மட்டுமே எஞ்சியிருக்கிறதென அவரது பாதிரியார் அறிவித்தார். அப்போது காலை பத்து மணி, மழை அடித்துப் பெய்து கொண்டிருந்தது. அரண்மனைக்கு முன்பு ஒரு வண்டி வந்து நின்றது. சீமாட்டி ஒலீவியேன் வந்திருந்தார். முன்பு மரணத்தின் தருணங்களை அலங்கரிக்க முயன்ற காலங்களில் அவர் தனக்குள் இப்படிச் சொல்லியிருந்தார்.

"அது ஒரு தெளிவான மாலையாய் இருக்கும். சூரியன் இறங்கிக்கொண்டிருக்க, ஆப்பிள் மரங்களினூடாகக் காட்சியளிக்கும் கடல் ஊதா நிறம் கொண்டிருக்கும். வெளிறிய மலர்களைப் போல் எடையின்மையும் குற்ற உணர்வினைப் போல் கனமும் கொண்ட இளஞ்சிவப்பு முகில்கள் தொடுவானில் இறங்கும்..."

அது காலை பத்து மணி. அடித்துப் பெய்கிற மழையினூடாகத் தாழ்ந்து இறங்கியிருக்கும் விசும்பின் கீழ் சீமாட்டி ஒலீவியேன் வந்து சேர்ந்தார். நோய்மையினால் முற்றும் சோர்வடைந்து, உயர்சிந்தைகளால் மட்டுமே ஆக்கிரமிக்கப்பட்டிருந்த அவர், இதுநாள் வரை வாழ்விற்கு அழகும் மதிப்பும் பெருமையும் சேர்க்கின்ற விஷயங்கள் எனக் கருதியவற்றின் கருணை மீது தற்போது ஆர்வம் இழந்திருந்தார். தான் மிகவும் சோர்ந்திருப்பதாகச் சீமாட்டியிடம் சொல்லும்படி பணியாட்களைப் பணித்தார். சீமாட்டி மீண்டும் கட்டாயப்படுத்திய போதும் அவர் உறுதியாக மறுத்துவிட்டார். அவள் இப்போது அவருக்கு எதுவுமில்லை. பல வாரங்களாக அவர் அஞ்சிக்கொண்டிருந்த உறவுகளின் சங்கிலியிலிருந்து இறப்பு அவரைச் சட்டென விடுவித்துவிட்டது. ஒலீவியேனைப் பற்றிச் சிந்திக்க முயன்றபோது, அவரது மனதின் கண்களுக்கு எதுவுமே தட்டுப்படவில்லை. அவரது கற்பனையின் கண்களும் கர்வத்தின் கண்களும் உணர்விழந்திருந்தன.

என்றாலும், அவரது மரணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, பொஹீமியாவின் சீமாட்டி ஒரு கேளிக்கையை ஏற்பாடு செய்திருப்பதாகவும் அதில் பியா, மறுநாள் டென்மார்க் கிளம்பவிருக்கும் கஸ்ட்ரூக்கோவுடன் நடனமாடவிருக்கிறாள் என்றும் கேள்வியுற்றபோது தோன்றிய ஆத்திரம் அவருள்ளிருந்த பொறாமையைத் தூண்டியது. பியாவைக் காண வேண்டுமெனப் பிரபு விருப்பம் தெரிவித்த போது அவரது மைத்துனி அதற்கு மறுப்பு தெரிவித்தாள். பியாவைப் பார்க்கவிடாமல் அவர்கள் தடுப்பதாகவும் அவரைச் சித்திரவதை செய்வதாகவும் எண்ணிச் சினமுற்றார் அவர். எனவே அவரது துயரத்தைக் குறைக்கும் பொருட்டு உடனடியாக அவளுக்கு அழைப்பு விடுத்தனர்.

அவள் வந்து சேர்ந்தபோது அவர் அமைதியடைந்திருந்தார். ஆனால் மிகவும் துயருற்றிருந்தார். அவளைப் படுக்கை அருகே அழைத்தவர், உடனடியாகவே பொஹீமியாவின் சீமாட்டி ஏற்பாடு செய்திருக்கும் கேளிக்கையைப் பற்றிப் பேசினார்.

"நாம் உறவினர்கள் அல்ல. எனவே நீ எனக்காக துக்கம் அனுஷ்டிக்க மாட்டாய். ஆனால் நான் உன்னிடம் ஒரு உதவி கோர உள்ளேன். அந்தக் கேளிக்கைக்கு நீ செல்லாதே. செல்ல மாட்டேன் என எனக்குச் சத்தியம் செய்துகொடு"

கண் மணிகளின் விளிம்பில், மரணத்தினாலும் பிணைக்க முடியாதென அறிந்து துயரத்தாலும்

> **அது உன்னால் முடியாது, நீ என்னை மறந்து விடுவாய். ஆனால் ஒரு வருடத்திற்குப் பிறகோ அதற்கு அதிகமான காலத்திற்குப் பிறகோ ஏதேனும் துயரக் கவிதையோ ஒரு மரணமோ அல்லது ஒரு மழை மாலையோ உனக்கு என்னை நினைவூட்டினால், நீ என்மேல் கருணை காட்டலாம்**

அன்பாலும் நிறைந்த அவர்களது ஆன்மா ததும்பி நிற்க, அவர்கள் ஒருவரை ஒருவர் உற்று நோக்கினர்.

அவளது தயக்கத்தை அவர் புரிந்துகொண்டார். உதடுகள் வலியால் முறுக்கிக்கொள்ள அவர் மெல்ல முனகினார்.

"வேண்டாம், சத்தியம் செய்யாதே. இறக்கின்ற ஒரு மனிதனுக்குச் செய்த சத்தியத்தை நீ மீற வேண்டாம். உனக்கு உறுதியாகத் தெரியாத பட்சத்தில் நீ சத்தியம் செய்யாதே."

"என்னால் உங்களுக்குச் சத்தியம் செய்ய முடியாது. நான் அவரைப் பார்த்து இரண்டு மாதங்களுக்கும் மேலாகிறது. மீண்டும் சந்திக்க இயலாமலேயேகூடப் போகலாம். அந்த விருந்திற்குச் செல்ல முடியாவிட்டால் நான் ஒருபோதும் ஆறுதலடையாதவளாய் திரிவேன்."

"நீ அவனைக் காதலிப்பதாலும் இறப்பு வந்துவிடக்கூடும் என்பதாலும்... நீ உடல்நலத்தோடு இன்னும் உயிரோடிருக்கப் போவதாலும், நீ சொல்வது சரிதான். ஆனாலும் நீ எனக்குச் சிறியதாக ஏதேனும் செய்ய முடியும். எல்லோரையும் குழப்புவதற்காக, கேளிக்கையின் போது சிறிது நேரத்தை நீ என்னுடன் செலவழிக்க வேண்டும். அந்த நேரத்தை உனது மாலையில் இருந்து கழித்துவிடு. உன்னுடனான சில நிமிடங்களை நினைவுகொள்ள எனது ஆன்மாவிற்கு அனுமதியளி. என்னைப் பற்றி கொஞ்சம் யோசி."

"அந்தச் சத்தியத்தையும்கூட என்னால் உங்களுக்குத் தர முடியாது. கொண்டாட்டம் மிகக் குறைந்த நேரத்திற்குத்தான் திட்டமிடப்பட்டுள்ளது. நான் கிளம்பாவிட்டாலும்கூட அவனுடன் செலவிட மிகக்குறைந்த நேரமே எனக்கு இருக்கும். ஆனால் அதற்குப் பிறகு தினமும் உன்னை நினைத்துக்கொள்வேன்."

"அது உன்னால் முடியாது, நீ என்னை மறந்துவிடுவாய். ஆனால் ஒரு வருடத்திற்குப் பிறகோ அதற்கு அதிகமான காலத்திற்குப் பிறகோ ஏதேனும் துயரக் கவிதையோ ஒரு மரணமோ அல்லது ஒரு மழை மாலையோ உனக்கு என்னை நினைவூட்டினால், நீ என்மேல் கருணை காட்டலாம். நான் உன்னை ஒருபோதும் திரும்பக் காண முடியாது. என் ஆன்மாவிற்கு மட்டுமே அது சாத்தியமாகும் - ஆனால், அதற்கு நாம் இருவருமே ஒருவரை ஒருவர் நினைக்க வேண்டும். நான் உன்னை எப்போதும் நினைத்துக் கொண்டே இருப்பேன் என்பதால் நீ, ஒருவேளை, வரவிரும்பும் சமயத்திற்காக அந்தப் பாதை திறந்தே இருக்கும். ஆனால் அதற்கு நான் அதிக காலம் காத்திருக்க வேண்டும்! நவம்பர் மாதப் பருவமழை என் கல்லறையில் இருக்கும் பூக்களை அழுகிப்போகச் செய்திருக்கும். ஜூன் மாதம் அவற்றை எரித்திருக்கும். முடிவாக என் ஆன்மா பொறுமையற்று எப்போதும் அழுதபடியே இருக்கும். ஹ்ம்! என்றேனும் ஒரு நாள் ஒரு நினைவுப்பரிசோ, பிறந்தநாளோ என்னைக் குறித்த எண்ணத்தை உன் சிந்தனையில் தோற்றுவித்து என் அன்பு வளையத்திற்குள் உன்னைக் கொண்டுவரக்கூடும். அந்த தினத்தில், எனக்கு அது கேட்டுவிட்டது போலவும் நான் உன்னை உணர்ந்துகொண்டது போலவும் ஆகி ஒரு மந்திரத்தால் உன் வருகைக்காக எல்லாமும் மலர்களால் சூழப்பட்டுவிடும். இறந்துபோனவனைப் பற்றி யோசி. ஆனால், ஐயோ! வாழ்வின் உற்சாகமும் நமது கண்ணீரும் மகிழ்ச்சித் தருணங்களும் உதடுகளும் சாத்தியப்படுத்தாத ஒன்றை மரணமும் உன் வருகையும் சாத்தியப்படுத்திவிட முடியுமா?"

**5**

"உன்னதமான ஓர் இதயம் இதோ இப்போது மடிந்துவிட்டது. உறங்குங்கள், இனிய இளவரசரே தேவதைகள் இணைந்து உங்களது ஓய்விற்காகப் பாடுகிறார்கள்!" - ஷேக்ஸ்பியர், ஹாம்லட்.

இதற்கிடையே பிரபுவிற்கு ஏற்பட்ட சித்தப்பிரமையுடன் கூடிய காய்ச்சல் குணமாகாமலேயே போனது. முன்பு, மகிழ்ச்சியைத் தக்கவைத்திருந்த பல்தஸாரேயை தன் பதிமூன்றாவது பிறந்த நாளில் அலெக்ஸிஸ் சந்தித்த அந்த அகன்ற

## சிறைக்குள்...

மாற்று வழிகளில்லை.

**11.9.2001** அன்று பிற்பகலில் ஐயரின் இரண்டு பிள்ளைகளையும் ராமகிருஷ்ண மிஷனில் இருந்து சிறைச்சாலைக்கு அழைத்து வந்தார்கள். மூத்த பெண் பிள்ளைக்கு 9 வயதிருக்கும். ஆண் பிள்ளைக்கு 7 வயதிருக்கும். 2 வருடங்களின் பின்பு அன்றுதான் ஐயர் தனது பிள்ளைகளைச் சந்தித்தார். சிறைச்சாலை உட் கதவினூடாகப் பிள்ளைகளை அழைத்து வந்தார்கள். ஐயர் முற்றத்தில் குந்தியிருந்து 2 பிள்ளைகளையும் அணைத்துக்கொண்டு கதறியழுத காட்சியை என்னால் வர்ணிக்க முடியாது. மனதை உலுக்கிய சம்பவம் அது.

இத்தகைய ஒரு நிலை எந்தத் தந்தைக்கும் வரக்கூடாது. அவர் பிள்ளைகளைக் கவனிக்க வேண்டிய நேரத்தில் பிள்ளைகள் ஒரு பிஸ்கட் பெட்டியுடன் வந்து தந்தையைச் சிறையில் பார்த்துப்போனது மிகவும் துன்பமாக இருந்தது.

ஐயரின் மனைவியும் ஐயருடன் கைது செய்யப்பட்டு வெலிக்கடை பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஐயருடைய மனைவியும் ஐயருடன் சேர்ந்து வந்து பிள்ளைகளை மட்டக்களப்புச் சிறையில் பார்ப்பதற்கு வெலிக்கடைச் சிறையூடாக விண்ணப்பித்திருந்தபோதிலும் அது நிராகரிக்கப்பட்டது என்று பின்னர் அறிந்தேன். (தொடரும்)

## பல்தஸாரே...

வட்ட அறைக்கு அவரது படுக்கை மாற்றப்பட்டது. இங்கே அவரால் கடலை, கப்பல்களை, மறுபுறம் சமவெளியை, வனத்தைக் காண முடியும். அவ்வப்போது அவர் பேசினார். ஆனால் அவரது வார்த்தைகள், சமீபமாய் அவருக்குள் தோன்றிச் சமநிலைப்படுத்தியிருந்த உயர்சிந்தனைகளுக்கு சற்றும் தொடர்பில்லாதனவாய் இருந்தன. அவரைப் பரிகாசம் செய்த கண்ணுக்குத் தெரியாத ஒரு மனிதனை மோசமாகச் சபித்தபடி, இந்நூற்றாண்டின் மகத்தான இசைக்கலைஞனும் இப்பிரபஞ்சத்தின் புகழ்பெற்ற மேற்குடியினனும் தான்தான் எனத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

பின் திடீரென அமைதியானவர், தன்னை ஒரு குகைக்கு அழைத்துச் சென்று வேட்டைக்காகக் குதிரைகளைச் சேணமிடுமாறு குதிரைக்காரனிடம் வேண்டினார். பார்மாவின் தளபதியின் தங்கையுடனான தன் திருமணக் கொண்டாட்டத்திற்குப் பெரிய மனிதர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுப்பதற்கான ஏற்பாடுகளைக் கோரினார். சூதாட்டத்தில் பட்ட கடனை அடைக்க முடியாமல் போனதை எண்ணி அஞ்சிய அவர், படுக்கை அருகே இருந்த அட்டைக்கத்தியை எடுத்து அதைத் துப்பாக்கி போல் ஏந்தி குறிவைத்தார். முந்தைய இரவு அவர் தாக்கிய காவலர்கள் இறந்துவிட்டனரா எனக் கண்டறிவதற்காக தூதுவர்களை அனுப்பினார். தான் யாருடைய கரங்களையோ பற்றிக்கொண்டிருப் பதாகக் கருதிச் சிரித்தபடியே அவரிடம் ஏதேதோ உளறினார். தீய எண்ணங்களை விரட்டி இழிவான நினைவுகளை இருளில் தள்ளும் அந்த 'விருப்பம்', 'சிந்தை' என்ற இரண்டு தேவதைகளும் அவரைக் கைவிட்டிருந்தனர்.

மூன்று தினங்களுக்குப் பிறகு ஐந்து மணிவாக்கில் அவர் ஒரு மோசமான கனவிலிருந்து விழித்தது போல் எழுந்துகொண்டார். அக்கனவிற்கு அதனைக் கண்டவர்தான் பொறுப்பென்பது போல் தோன்றினாலும் அவரால் அதை முழுமையாக நினைவுகூர முடியவில்லை. அதீத கீழ்மையையும் பழமையையும் மறைந்துவிட்ட சுயத்தையும் அவர் வெளிப்படுத்திய அந்தச் சமயத்தில் உறவினர்களோ நண்பர்களோ அங்கிருந்தனரா என வினவினார். ஒருவேளை தான் மனம்பிறழ்ந்து நடந்துகொண்டால் பார்வையிட வந்தவர்களை உடனடியாக வெளியேற்றி மீண்டும் நினைவு திரும்பிய பிறகுதான் உள்ளே அனுமதிக்க வேண்டும் எனப் பணியாளர்களுக்கு ஆணையிட்டார்.

கண்களை உயர்த்தி அறையைச் சுற்றிப் பார்த்தவர், ஒரு சீன ஜாடியின் மேல் அமர்ந்து செவ்வந்தி மலருடன் விளையாடியபடி அதன் நறுமணத்தை நுகர்வது போல சைகை செய்துகொண்டிருந்த கருப்புப் பூனையைக் கண்டு புன்னகைத்தார். எல்லோரையும் வெளியே அனுப்பிவிட்டு, அவருக்காகக் காத்திருந்த மதபோதகரிடம் நீண்ட நேரம் பேசினார். என்றாலும், வேறு உணவை ஏற்றுக்கொள்ளும் நிலையில் தன் உடல் இல்லை என மருத்துவர் மூலம் தெரிவித்து, இறுதி விருந்தை மறுத்துவிட்டார். ஒருமணி நேரத்திற்குப் பிறகு பணியாள் மூலம் மைத்துனியையும் ழான் காலியஸையும் வரவழைத்தவர் பின்வருமாறு கூறினார்.

"நான் விடைபெறுகிறேன், மரணிப்பது குறித்தும் கடவுளிடம் செல்வது குறித்தும் நான் மகிழ்ச்சி கொள்கிறேன்."

அறையில் காற்றோட்டம் குறைவாய் இருந்ததால் கடலை நோக்கி இருந்த ஜன்னலைத் திறந்து வைத்தனர். மறுபுறத்தில் மேய்ச்சல் வெளியிலிருந்தும் வனத்திலிருந்தும் வந்த காற்று அதீதமாக இருந்ததனால் அந்த ஜன்னலை அவர்கள் திறக்கவில்லை.

திறந்த ஜன்னல்களுக்கருகே தன் படுக்கையை இழுத்துப்போடச் செய்தார் பல்தஸாரே. மாலுமிகளின் வழிகாட்டுதலோடு படகொன்று கடலை நோக்கி நகர்ந்தபடி இருந்தது. பதினைந்து வயது மதிக்கத்தக்க ஒரு அழகான சிறுவன் கப்பலின் முகப்பில் நின்றுகொண்டிருந்தான். ஒவ்வொரு அலையும் அவனை நீருக்குள் மூழ்கடிப்பது போல் தோன்றினாலும் அவன் தனது உறுதியான கால்களால் வலுவாக நின்றான். உப்பு படிந்த உதடுகளுக்கிடையே எரிகிற குழாய் ஒன்றை பொருத்தியிருந்த அவன், மீன் பிடிக்கும் பொருட்டு தன் வலையை விரித்தான். படகை உயர்ந்தெழச்செய்த அதே காற்று இவர்களது வட்ட அறைக்குள்ளும் நுழைந்து பல்தஸாரேயின் கன்னங்களைக் குளிர்வித்து ஒரு காகிதத் துண்டை அறைக்குள் படபடக்கச் செய்தது. ஒருசமயம் தான் மிகவும் விரும்பி அனுபவித்த, இனி அனுபவிக்க வாய்ப்பில்லாத அந்த மகிழ்ச்சியான காட்சியைத் தவிர்க்கும் பொருட்டு அவர் தலையை வேறு புறம் திருப்பிக்கொண்டார். துறைமுகத்தை நோக்கிப் பார்வையைத் திருப்பினார். முப்பாய்மரக் கப்பல் ஒன்று புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தது.

"அது மேற்கிந்தியத் தீவுகளை நோக்கிக் கிளம்புகிறது," என்றார் ழான் காலியஸ்.

கப்பலில் இருந்தபடி தங்கள் கைக்குட்டைகளை அசைத்த அந்த மனிதர்களை அவரால் அடையாளம் காண இயலவில்லை. ஆனால் அறியப்படாத விஷயங்கள் மீதான தாகம் நிறைந்த அவர்களது கண்களை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. அறிந்துகொள்ளவும் அனுபவிக்கவும் உணரவும் இன்னும் அவர்களுக்கு எவ்வளவோ உள்ளது. நங்கூரம் அகற்றப்பட்டது, கூச்சல்கள் எதிரொலிக்க கப்பல் இருண்ட கடலைத் துளைத்தபடி மேற்கு நோக்கிப் பாய்ந்தது. பொன்னிற மூடுபனியின் பின்னணியில் படகுகளை மேகங்களோடு பிணைத்து ஒளியூட்டி தெளிவற்ற ஆர்வமூட்டும் நம்பிக்கைகளைப் பயணிகளுக்கு அளித்தபடி காட்சியளித்தது அக்கடல்.

வட்ட அறையின் கடலை நோக்கிய ஜன்னல்களை மூடச்சொல்லிய




# ராமோஜி திரைப்பட நகருக்குள் பேய்

■ குருபரன் - காங்கேசன்துறை

தமிழ்த் திரைப்பட ரசிகர்களின் மனதில் ஆழப்பதிந்த ஒரு திரைப்படம் சந்திரமுகி. மறுபிறவி, பேய் நடமாட்டம் போன்ற விடயங்களைக் காட்சிப்படுத்திய திரைப்படம் அது. இந்தத் திரைப்படம் எடுக்கப்பட்ட இடம் ஹைதராபாத்திலுள்ள ராமோஜி திரைப்பட நகரம். இந்தத் திரைப்பட நகரம் கிட்டத்தட்ட ஆயிரத்து 500 ஏக்கர்கள் அளவிற்குப் பெரியது. ஒரு நகரத்தில் இருக்கவேண்டிய எல்லாமே அதற்குள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஜப்பான், பிரித்தானியா, அமெரிக்கா எனச் சில நாடுகளில் உள்ள வீதிகளும், வடிவமைப்புகளும் கூட அங்குள்ளன. எனினும் அங்கு பேய்களின் நடமாட்டம் அதிகமாக உள்ளது.



ராமோஜி ராவ் என்பவருக்குச் சொந்தமான இந்தத் திரைப்பட நகரத்தில் படப்பிடிப்பு, சுற்றுலாத்துறையினரின் வருகை, விடுதிகள், பொழுதுபோக்குகள், ஆடம்பரங்கள் என்று பல விடயங்கள் இருப்பதால் தினமும் லட்சக்கணக்கான மக்கள் அங்கு செல்கின்றனர். இந்தத் திரைப்பட நகரில் ஹிந்தி, தெலுங்கு, தமிழ் எனப் பல்வேறு மொழிப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்தப் படங்களைப் பார்ப்பவர்கள் அங்கு செல்லவும் ஆர்வப்படுகின்றனர்.

ஆனால், அங்கு இரவு - பகல் என்றில்லாமல் பேய்களின் நடமாட்டத்தைப் பலர் கண்டிருக்கிறார்கள். விளக்குகள் திடீரென அணைவது, உடைவது, ஜன்னல் கண்ணாடிகள் உடைவது, உருவமில்லாமலே பலர் அடிவாங்கியிருப்பது, உணவைக் கொண்டு வந்து வைத்தால் அவற்றைச் சாப்பிட்டு மிகுதி எஞ்சிக் கிடப்பது எனப் பல மர்மங்கள் அங்குண்டு.

ராமோஜி திரைப்பட நகரம் பேய்கள் பற்றிய அதிக மர்மங்களைக் கொண்டது. அங்கு ஏன் அப்படி நடக்கிறது என்று கேட்டால், ஹைதராபாத்தை நிஜாம்கள் ஆண்டபோது (1720-1948) அது ஒரு போர்க் களமாக இருந்திருக்கிறது. போர் வீரர்களும், மக்களும் வகைதொகையின்றி அங்கு கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் ஆவிகளே அந்தப் பகுதியில் உலாவுகின்றன எனப் பொதுவில் நம்பப்படுகி றது.

பல்வேறு மொழிகளில் உலகத்துக்குத் திகில் நிறைந்த திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு உதவிய ராமோஜி திரைப்பட நகருக்குள் பேய்களின் அட்டகாசம் உண்மையிலேயே இருக்கிறது என்பதை யாராலும் நம்பிவிடவும் முடியாது.



# சரும பாதுகாப்புக்கு தாமரை..!

பொதுவாக அழகுப் பராமரிப்பில் பெருமளவு மூலிகையை அதிலும் இயற்கையாக கிடைப்பதைப் பயன்படுத்துவது பற்றி எமது செம்மண் அழகு பகுதியில் பார்த்து வருகின்றோம். அந்த வகையில் பூக்களைக்கொண்டு பூக்களைப் போன்று சருமத்தையும் மென்மையாக்கிவிட உதவக் கூடிய பூக்கள் பல உண்டு. அதில் தாமரைப் பூவும் ஒன்று.

தாமரை வறண்ட சருமத்தைப் போக்கவும், சருமம் இளமையாக இருக்கவும் உதவுகிறது. தாமரை இதழ்கள், வேர்கள், விதைகள் என அனைத்துமே மருத்துவ குணங்களோடு அழகு தரும் குணங்களைக் கொண்டிருக்கின்றது.

இந்த வாரம் தாமரையைப் பாவித்து எவ்வாறு சருமப் பாதுகாப்பை மெருகூட்டலாம் என்பது பற்றிப் பார்க்கலாம். தாமரை இதழ்களைத் தனியாக எடுத்து நறுக்கி வைத்து அதனுடன் பால் சிறிது சேர்த்து நன்றாக அரைத்து முகம் மற்றும் கழுத்து பகுதியில் பூசி மசாஜ் செய்ய வேண்டும். பூசிய பின்னர் 20 முதல் 30 நிமிடங்கள் வரை இருந்து பிறகு வெதுவெதுப்பான நீரில் முகத்தை கழுவி எடுத்தால் போதும்.





வாரத்துக்கு இரண்டு முறை இதைச் செய்து வந்தால் முகத்துக்கு வேண்டிய நன்மைகள் கிடைக்கும். நெற்றியில் இருக்கும் கோடுகளை, புள்ளிகளை சுருக்கங்களை மறையச் செய்யும். மேலும், சருமம் மெல்லியதாகவோ வறட்சியாகவோ இருந்தால் தாமரைப் பூவை நீரில் ஊறவைத்து அதைக் கொண்டு முகத்தைக் கழுவி வந்தால் போதுமானது, விரைவில் மாற்றத்தை உணரலாம்.

## பல்தஸாரே...

பல்தஸாரே, புல்வெளிகளையும் வனத்தையும் நோக்கிய ஜன்னல்களைத் திறந்து வைக்கச் சொன்னார். சமவெளிகளின் மீது பார்வையைச் செலுத்தினாலும் முப்பாய்மரப் படகிலிருந்தபடி விடைபெற்றவர்களின் கூக்குரலைச் செவிகளிலும், பற்களிடையே குழாயைப் பொருத்தியபடி வலை விரித்த சிறுவனைக் கண்களிலும் உணர முடிந்தது.

பல்தஸாரேயின் கரங்கள் காய்ச்சலுற்றது போல் நடுங்கின. இதயத்துடிப்பைப் போல, ஆழமும் பிரித்தறிய முடியாததமுமான தன்மைகொண்ட, ஒரு மங்கலான வெள்ளி மணியோசையை அவரால் கேட்க முடிந்தது. வெகுதொலைவில் இருக்கும் ஒரு கிராமத்தில் ஒலிக்கின்ற அந்த மணியை இவரது குற்றமற்ற செவிகளில் சேர்க்கும்படி பல மைல் நிலங்களையும் ஆறுகளையும் கடக்கச் செய்த தெளிவான சாதகமான மாலைத் தென்றலுக்கு நன்றி. அந்தக் குரல் ஒரே சமயத்தில் தற்காலத்தியதாகவும் பழங்காலத்தியதாகவும் ஒலித்தது. இப்போது அவரது இதயமும் அந்த மணியோசையோடு இயைந்து ஒலிப்பது போல் இருந்தது. இடையிடையே அது அமைதியுற்ற போது அதை ஆழ்ந்து உள்ளிழுத்து, பின் பலவீனமான நீண்ட சுவாசமாக வெளியிட்டது. வாழ்க்கை முழுவதுமே எப்போது இப்படித் தொலைதூர மணியோசைகளைக் கேட்டாலும், பால்யகால நாட்களில் சமவெளிகளைக் கடந்து தன் அரண்மனையை நோக்கித் திரும்பும்போது உணர்ந்த காற்றின் இனிமையை நினைவுகூர்வார்.

அந்த நிமிடம் எல்லோரையும் அழைத்த மருத்துவர், ''எல்லாம் முடிந்துவிட்டது!'' என அறிவித்தார்.

நெருங்கிவிட்ட மரணத்தினால் மரத்துப் போயிருந்த தன் செவிகளால் கேட்கமுடியாத மணியோசையை இதயத்தால் கவனித்தபடி கண்களை மூடி பல்தஸாரே படுத்திருந்தார். வீட்டிற்குத் திரும்பிய அவரை நெற்றியில் முத்தமிட்டு, இரவில் கால்களைத் தேய்த்துச் சூடுபடுத்தி, படுக்கைக்கு அனுப்பி, உறங்கும் வரை உடனிருக்கிற அம்மாவை நினைவில் கண்டார். ராபின்சன் க்ரூஸோவை நினைத்துக்கொண்டார். பிற்காலத்தில் இவர் ஒரு சிறந்த இசைக்கலைஞனாவார் எனக் கணித்த ஆசிரியரையும் மறைத்துக்கொள்ள இயலாமல் அதற்குத் தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்திய அன்னையையும் நினைத்துக்கொண்டார். அன்னையும் சகோதரியும் அவரிடம் கொண்டிருந்த எதிர்பார்ப்புகளை நிஜமாக்குவதற்கு இனி நேரமில்லை. ஊணா மரத்தின்கீழ் தனக்குத் திருமணம் நிச்சயமான தினத்தையும் பின் அந்த நிச்சயம் முறிந்து போன தினத்தையும் நினைத்துக்கொண்டார். அன்று அவரது அன்னையால் மட்டுமே அவரை ஆறுதல்படுத்த முடிந்தது. தன் பாட்டியை முத்தமிடுவதாகவும் தன் முதல் வயலினைக் கையில் பற்றியிருப்பதாகவும் எண்ணிக்கொண்டார். ஒரு பிரகாசமான தொலைவில் சமவெளியை நோக்கித் திறந்திருக்கும் ஜன்னல் வழித்தெரியும் இனிமையும் துயரமும் நிறைந்த காட்சிகளைப் போல இவற்றைக் கண்டார்.

அவர் இக்காட்சிகளைக் கண்ட இரு நொடிகளுக்குள், அவரது நாடித்துடிப்பைச் சோதித்த மருத்துவர், ''இதுதான் இறுதி!'' என்றார்.

எழுந்துகொண்ட மருத்துவர் சொன்னார். ''எல்லாம் முடிந்துவிட்டது!''

அப்போதுதான் வந்து சேர்ந்த பார்மாவின் தளபதியுடன் சேர்ந்து அலெக்ஸிஸூம் அவனது அம்மாவும் ழான் காலியஸூம் முழங்காலிட்டனர். திறந்திருந்த வாயிலில் அவரது பணியாட்கள் அழுதுகொண்டிருந்தனர்.

(நன்றி: தமிழினி இணையத் தளம்)

## 'தலைவி'க்கு வந்த சிக்கல்!

இந்தியாவின் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகிவருகின்ற படம் 'தலைவி'. இதை ஏ.எல்.விஜய் இயக்கியுள்ளார். இதில் ஜெயலலிதாவின் கதாபாத்திரத்தில் கங்கணா ரணாவத் நடித்துள்ளார். இவருடன் அரவிந்த்சாமி, மதுபாலா, சமுத்திரக்கனி உள்ளிட்ட பலர் இணைந்து முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். இ

ந்தப் படத்தின் அனைத்து பணிகளும் முடிவடைந்து படம் வெளியீட்டுக்குத் தயாராகவுள்ள நிலையில், இந்தியாவில் திரையரங்குகள் திறக்கப்பட்டுள்ளதால், படம் இந்த மாதம் 10ஆம் திகதி வெளியாகும் என்று படக்குழுவினர் அறிவித்தனர். ஆனால், தலைவி வெளியீட்டில் தற்போது சிக்கல் ஏற்பட்டுள்ளது. திரையரங்குகளில் வெளியான 2 வாரத்தில் ஓடிடியில் வெளியிட 'தலைவி' படக்குழுவினர் ஒப்பந்தம் செய்துள்ளனர். இதற்குத் திரையரங்கு உரிமையாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். திரையரங்குகளில் வெளியான 4 மாதங்களுக்குப் பிறகுதான் ஓடிடியில் வெளியிடவேண்டும் என்ற விதிமுறை இருப்பதால், இந்தச் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான பேச்சுகள் நடந்து வருகின்றன. ஆனாலும் தலைவி திரைப்படம் இன்னமும் வெளியீட்டுச் சிக்கலில் இருந்து மீளவில்லை. தமிழ், ஹிந்தி, தெலுங்கு உள்ளிட்டப் பல மொழிகளிலும் ஒரே சமயத்தில் 'தலைவி' திரைப்படம் வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# அட்ரிவ்ப்

**காதலனை இழந்து 41 நாள் வரை நடுக் கடலில் தனி ஒருத்தியாகக் கடலில் தத்தளித்து மீண்ட ஒரு பெண்ணின் உண்மைக் கதையே இது.**

## கடலில் கரைந்துபோன காதல்

"டைட்டானிக்" என்றாலே அனைவரது ஞாபகங்களையும் வந்து நிறைப்பது அந்தக் கப்பல் மூழ்கியதற்கு அப்பால் அந்தக் கப்பலில் பயணித்த காதல் ஜோடிகளின் கதைதான். அந்தக் காதல் கடலுடன் கரைந்துபோன சோகக் கதையே. காதலன் இறந்துபோகக் கரைமீண்ட காதலியின் நினைவுகளால் ஆகியிருந்த டைட்டானிக் கதையில் மூழ்காத உள்ளங்களில்லை, அந்தத் திரைப்படமும் நிகழ்த்தாத சாதனைகள் இல்லை.

டைட்டானிக்கைப்போல இல்லாவிட்டாலும் அதேபோன்றதொரு உண்மைக் கதையை 2018ஆம் ஆண்டில் படமாக்கியிருக்கிறார் இயக்குநர் பல்ராஷர் கொர்மாகுர். ஆனால், கதை



என்னவோ டைட்டானிக்கைப்போல கடலில் தனது காதலனைப் பறிகொடுத்த பெண்ணை மையப்படுத்தியதாகவே இருக்கிறது. கடல் இப்படியிப்படி எத்தனை காதல்களைத் தனக்குள் அமிழ்த்தி வைத்து ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கிறது எனும் கேள்வி படத்தின் நிறைவில் நிச்சயம் உங்களுக்கு ஏற்படும். அதே வேளை ஆங்கிலத் திரைப்படங்களில் கடலும் காதலும் ஒரே மாதிரியாகச் சித்திரிக்கப்பட்டு வருகின்றன என்கிற உண்மையும் உங்களுக்குப் பிடிபடும்.

பிரிட்டனைச்சேர்ந்த மாலுமி ரிச்சர்ட் ஷார்ப். அமெரிக்காவின் கலிபோர்னியாத் துறைமுகம் ஒன்றில் பணிபுரிகிறாள் டாமி. ஒரு சந்தர்ப்பத்தில் அங்கு சந்திக்கிற ரிச்சர்ட்டுக்கும் டாமிக்கும் நட்பு உருவாகிறது. தனது படகான மாயலுகா வில் இரவு உணவு உண்பதற்கு டாமியை அழைக்கிறார் றிச்சார்ட். நீடிக்கும் நட்பு காதலாகிறது. மோதிரமும் மாற்றிக்கொள்கிறார்கள். இருவரும் பசுபிக் தீவு ஒன்றுக்குச் செல்லத் திட்டமிடுகிறார்கள். சந்தோசமாக வாழ்க்கை நகர்ந்துகொண்டிருந்த சில நாள்களில் திட்டமிட்டபடி கடல் பயணத்தை மேற்கொள்கிறார்கள்.

பல நாள்கள் பயணத்தின் இடைநடுவில் ஒரு நாளில் அவர்களது கப்பலைச் சூறாவளி தாக்குகிறது. கப்பலின் மேல் தளத்தில் நின்ற றிச்சார்ட் கடலில் காணமல்போக, உட்தளத்தில் சுயநினைவிழந்து கிடக்கின்ற டாமி நடுக்கடலில் தனித்துப்போகிறாள். அவளது கப்பலும் மூழ்கும் நிலையில் இருக்கிறது. திக்குத் தெரியாத பெருங்கடலில் அலையின் போக்கில் தத்தளிக்கும் கப்பலும் அவளும் எதிர்நோக்கும் அவலங்களும், சவால்களும் அடுத்தடுத்து வருகின்றன. அவற்றிலிருந்து அவள் மீண்டாள இல்லையா என்பதே இந்த உண்மைக் கதையின் முடிவு.

# எமையறிதல்

**ஐயங்கொண்டான் சுவாமிகள்**

22

நல்வாழ்வு என்பதன் அர்த்தம் சரியான புரிதலுக்குட்பட்டிருக்கிறதா? அது கடவுள் என்கின்ற கற்பிதம் ஒன்றினால்தான் வழங்கப்படக்கூடியதா? எமக்கான நல்வாழ்வு என்பது எமக்கு வெளியேதான் இருக்கிறதா? அப்படியாயின் எமக்கான வாழ்வில் எமக்கான பங்கு பணி என்ன? எமக்கான வாழ்வை எவனோ ஒருவன்தான் வழங்கவேண்டுமா? அதற்காக நாம் எமக்கான வாழவைப் பெறுதல் என்று அதை எப்படியும் பெறலாமா? ஒரு ஒழுங்குமுறையென்பது அவசியமில்லையா? என்றவாறாக எப்போதாவது கேள்வியெழுப்பியிருக்கிறோமா?

எமது எண்ணங்கள் எம்மைச் செழுமை செய்கின்றன என்பதை அறிவியல் தெளிவுறுத்தியுள்ளது. அதையேதான் மெயஞ்ஞானமும் சொல்கிறது. எனவே சிந்தனைதானே வாழ்வு... சிந்தனைத் தெளிவுதானே ஆரோக்கியம்... அப்படியில்லையா? நாம் உடலை வருத்துவதனூடாக உடல் உள ஆரோக்கியம் இரண்டையுமே தூரத் தள்ளிவைத்துவிட்டு எதைத்தான் அடையப்போகிறோம்? ஆற அமர்ந்து எண்ணிப் பார்க்கவேண்டியவர்களாகவே உள்ளோம் என்பதையாவது உணர்ந்துகொள்வோமா?

எதை அடைய வேண்டுமோ அதைத் தொலைத்துவிடுகின்ற நாம் ஆறறிவு படைத்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் தகுதியை உடையவர்களாக உள்ளோமா? நம்புதல் என்பதன் தொடக்கப் புள்ளியாகிய எம்மை நாம் கவனிக்காது விட்டுவிட்டு எதை நம்புகிறோம்? எமக்கு நாமே நம்பிக்கைக்குரியவர்களாக இல்லாதிருந்துகொண்டு எமக்கு அப்பாலானவற்றை அதிலும் அனேக வெறுமைகளை நம்புகிறோம் என்பதுதான் பிரச்சனைகளுக்குக் காரணமாவும் இருக்கலாமல்லவா?

எண்ணங்களை ஒடுக்குதல் என்பதா எண்ணங்களை விரித்தல் என்பதா பொருத்தமுடையது? எமது இயக்கங்கள் யாவுமே எண்ணங்களாலானவையல்லவா? அந்த எண்ணங்கள் ஏன் எமக்கப்பாலான ஒன்றிலிருந்த தொடங்கவேண்டும்? அங்கேயே ஏன் நிலைகொண்டிருக்க வேண்டும்? வலிந்து ஒரு சூனியத்தை நோக்கி எமது எண்ணங்களைச் செலுத்தவேண்டும்? ஏன் அப்படியே செய்துகொண்டிருக்கிறோம்? பழக்கதோசமா?

இந்த எண்ணமானது எம்மால் விரிவுபடுத்தப்படுவதற்குப் பதிலாக சிதறடிக்கப்படுகிறது. கடவுளை நம்புதல் என்பதற்காக உடலையும் உள்ளத்தையும் வருத்துகிறோம். அதனைவிட சோதிடம் என்றும் பில்லி - சூனியம் - செய்வினை - கழிப்புக்கழித்தல் என்று ஒரு நீளப் பட்டியலிடக்கூடிய விடயங்களில் எமது எண்ணங்களையும் எத்தனங்களையும் ஈடுபடுத்திக்கொண்டும் இருக்கின்றோம். இவையெல்லாமே இப்பகுதியினது முன்பகுதிகளில் கூறியது போல நம்பிக்கை எனும் பெயரிலான நம்பிக்கையீனங்களேயன்றி வேறென்ன?

நேற்றுக்களிலிருந்தான பட்டறிவு, இன்றுகளின் நடைமுறை, நாளைகளின் எதிர்பார்ப்பு என எதையும் எண்ணங்களைச் சிதறவிட்டுவிட்டு அடையமுடியாது என்பது உணரப்படல் அவசியமானது. அவை தொடர்பான ஒரு தொடர் அவதானம் என்பது எமது அலை பாய்கின்ற எண்ணங்களால் சிதறவிடப்படுகிறது. எமதான இயலுமைகளை ஆற்றல்களை மட்டுமல்ல தீர்க்கப்படக்கூடிய குறைபாடுகளைக்கூட உணரமுடியாதவாறு அவற்றைப் பற்றி எண்ணமுடியாதவாறு எமது கவனமானது எண்ணங்கள் வழி அலைந்துகொண்டிருக்கிறது.

எதிர்பாரப்பு நிறைவடைவதை இன்பமென்றும் அடையப்பட முடியாத எதிர்பார்ப்பைத் துன்பமென்றும் குழப்பி வைத்திருக்கிறோம். எதிர்பார்த்தது அப்படியே கிடைப்பதில் ஏதும் சுகமிருக்கிறதா? அப்படிக் கிடைத்தது நிலைக்குமா என்கின்ற ஏக்கம் உருவாகுவதில்லையா? ஒன்று எதிர்பார்த்தபடி கிடைத்ததை இன்பமென்று கூறித் தொடர்ந்து அனுபவிக்க முடிகிறதா? நிலையாமை பற்றியும் பேசுகிறோம் நிலைக்கவேண்டுமென்றும் விரும்புகிறோம் என்பதிலிருந்து எமது சிந்தனை எப்படியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதா?



ஒன்றையே நினைத்துக் கொண்டும் ஏங்கிக் கொண்டும் எதிர்பார்த்துக் கொண் டும் பொழுதைக் கழித்தால் இன்று மட்டுமல்ல நாளையும்கூட எப்படி எமக் கானதாகும்? எம்மிடமிருந்துதானே எல்லாம். இன்பமாகட்டும் துன்பமாகட்டும் எல்லாமே எமது கற்பிதங்கள்தானே? அவை சடப்பொருட்களா? இல்லையே எண்ணங்கள் தானே? எண்ணங்களைச் சரியாக்கினால் எல்லாமே ஒன்றுதான். சிந்தனையை விசாலிப்போம்.



## அட்ரிவ்ப் . . .

இதுவே கதையானாலும் அது சொல்லப்பட்டிருக்கிற விதம் வேறுபட்டது. நிகழ்காலத்தில் இடையிடையே வரும் ஞாபகங்களாக டாமியின் நினைவுகள் காட்டப்படுகின்றன. சூறாவளி தாக்கியதால் கப்பலுக்குள் மூழ்கிக் கிடக்கும் டாமியுடன் தொடங்குகின்ற படம் அவள் றிச்சார்ட்டைத் தேடுவது, கப்பல் கடலில் திக்குத் தெரியாமல் மிதந்துகொண்டே போவது, நீர், ஆகாரம், எவ்வித உதவிகளுமின்றித் தவிப்பது என்று நீண்டாலும் இடையிடையே வரும் ஞாபகக் காட்சிகளே காதல் கதையையும் முன்னரான சம்பவங்களையும் பார்வையாளர்களுக்குத் தெரியப்படுத்துகின்றன. கதையின் சுவாரசியத்துக்காகப் படத்தொகுப்பில் அந்த மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தாலும், காதலனைக் காப்பாற்றிக் காயப்பட்ட அவனைக் கப்பலில் வைத்துப் பராமரித்தபடி கடலில் தத்தளிப்பதாகக் காதலி கற்பனைக்குள் மூழ்கிக் கிடப்பதாகக் காட்டி வந்து இறுதியில் அது மாயை என்பதை வெளிப்படுத்தும் இடம் பார்வையாளர்களுக்கும் ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது. தவிர கடலும் அதன் பயங்கரமும் வியாபாகமும் எத்துணை கொடூரமும் பிரமாண்டமும் நிறைந்தது என்பதும் படம் முழுதும் புரையோடிக் கிடந்து பார்வையாளர்களைப் பயமுறுத்துகிறது. ஆர்ப்பாரித்துக்கொண்டேயிருக்கும் கடல் சொல்லும் செய்திகளும் பல. தரையில் பிரமாண்டங்களைப் பார்த்து வியக்கின்ற மனிதர்களுக்குத் தரையை விடவும் பூமியில் இரண்டு மடங்கில் பரந்திருக்கின்ற ஒருபோதும் ஓயாத கடல் பிரமாண்டத்தை விடவும் பிரமாண்டம் என்பதும் இதில் ஒரு துளிச் செய்தி.

காதலனை இழந்து 41 நாள் வரை நடுக் கடலில் தனி ஒருத்தியாகக் கடலில் தத்தளித்து மீண்ட ஒரு பெண்ணின் உண்மைக் கதையே இது. 41ஆவது நாளில் அவளது கப்பலில் தரையிறங்கும் புறா ஒன்றின் போக்கில் நிலத்தையும் ஒரு கப்பலையும் தூரத்தில் கண்டறிந்து அந்தக் கப்பலுக்குச் சமிக்ஞை வழங்கிக் கரை சேர்கிறாள் அவள். அமெரிக்க மாலுமியும் எழுத்தாளருமான டாமி லீ ஓல்ட்ஹாம் ஆஷ்கிராஃப்ட் என்கிற இந்தப் பெண் 1983ஆம் ஆண்டில் பசுபிக் பெருங்கடலில் 41 நாள்கள் அலைந்து இறுதியில் ஹவாய்த் தீவில் கரைதட்டுகிறாள். 41 நாள்கள் கடலில் தனியாக உயிர் பிழைத்த அவள் பின்னர் மாலுமியாகத் தனது வாழ்வைத் தொடர்கிறாள் என்கிற உண்மைச் செய்திகள், கட்டுரைகள், படங்களைக் காட்சிப்படுத்தியவாறு முடிகிறது படம்.

# மிதிலா

## 7

▌நா.சத்தியபாலன் ▌



I

அன்பும் புரிதலும் விட்டுக்கொடுப்பும் பொறுமையும் பரிவும் மிகுந்த மனித இதயங்களுக்கான தேவை காலம் காலமாக இருந்தே வருகின்றது. வாழ்வின் எந்த நிலையிலும் எத்தகைய தரத்திலும் எத்தகைய உறவுகள் மத்தியிலும் இந்தப் பண்புகள் என்றுமே வேண்டப்படுவனவாகவே இருந்து வருகின்றன.

மிதிலாவின் குடும்பத்தோடு நானும் வந்து இணைந்து வாழ்கின்ற நிலை ஏற்படக்கூடும் என்று நான் நினைத்திருக்கவில்லை. நினைத்தேயிருக்காத விதத்தில் ஒரு சம்பந்தம், அதன் மூலமாகக் கிடைத்த உறவுகள் - அவர்களின் நல்லியல்புகள் அதனால் நிறைந்து பரிமளிக்கின் எனது செல்வ மகளின் வாழ்க்கை இவை அனைத்துக்குமாக ஒரு அம்மாவாகக் கடவுளுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும்.

எனக்குத் திருமணம் நடந்த அந்த நாட்கள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. மிதிலாவின் அப்பாவை எனக்குத் திருமணம் செய்து வைத்தபோது எனக்கு வயது இருபத்தொன்று. மிதிலாவின் அப்பாவுக்கு இருபத்தொன்பது.

தபாற் திணைக்களத்தில் பணிபுரியும் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் எனக்குக் கணவராக அமையக்கூடுமென யாருமே நம்பியிருக்கவில்லை. எனது அம்மாவின் உறவினர் ஒருவரே இந்தச் சம்பந்தத்தைக் கொண்டு வந்திருந்தார். எங்கள் ஐயா முதலில் கொஞ்சம் தயங்கினார். "நான் வெறும் தோட்டக்காறன். என்ர பிள்ளை ஓ.எல். வரைக்கும்தான் படிச்சவள். அவையளின்ர குடும்பமே படிச்ச குடும்பம். தாய் தேப்பன் வாத்திமார் எண்டு சொல்லுறியள் எங்களிட்ட வரச் சம்மதிப்பினமோ...?" ஐயா கேட்டபோது எல்லாம் அறிஞ்சுதான் வருகினம், பவளத்தின்ர மகள் எண்டால் நல்ல குடும்பப் பொறுப்பான பிளையாத்தான் இருக்கும் எண்டுதான் எங்களிட்டப் பொம்பிளை கேட்டு வருகினம், நீங்கள் சம்மதிச்சால் பிளைக்கு ஒரு நல்ல குடும்பத்தில சம்பந்தம் கிடைக்கும். அவளின்ர பரம்பரையும் நல்லா வரும், ஏதோ யோசிக்கு முடிவெடுங்கோ, இப்பிடியான இடம் லேசில அமையுறேல்ல, பிள்ளையின்ர அதிர்ஷ்டம்- தேடி வருகுது, மறுக்காமல் செய்யுங்கோ"

ஊரையே அழைத்துச் சொக்கட்டான் பந்தலில் கோலாகலமாக நடந்தது எனது திருமணம் அந்த நாட்களிலெல்லாம் திருமண மண்டபங்களோ வீட்டுக்கு வெளியே திருமணம் நடத்தும் நடைமுறைகளோ இருக்கவில்லை. இரவு ஏழு மணிக்கு மேல்தான் முகூர்த்தமே. எங்கள் ஐயா அந்தக்கால ஆடம்பர முறையில் லைற் மெஷின் பிடித்து வீட்டையும் தெருவையும் மின்விளக்குகளால் அலங்கரித்து ஒலி பெருக்கி பொருத்தி ஊர் முழுக்க கேட்கப் பாட்டுப் போட்டு வெகு விமரிசையாகச் செய்து வைத்தார்.

ஊரே மகிழ்ச்சியோடு கூடிக் கொண்டாடிய திருமணம் அது. திருமணம் முடிந்து ஒரு வருடம் ஆகியும் குழந்தைகளில்லையே என்று ஐயா கவலைப்பட்டார். அடுத்த வருடப் பங்குனியில் மிதிலா எனது வயிற்றில் உறவானாள். குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் மிதிலா ஒரு மகிழ்ச்சி தரும் குழந்தையாய் வீட்டை உலா வந்தாள். கலகலப்புக்கும் குடும்பத்தில் எந்தக் குறையுமிருக்கவில்லை. அவள் வளர்ந்து படித்து தேசிய கல்வியியல் கல்லூரிக்குத் தெரிவானபோது எல்லோருமே மிகவும் சந்தோசப்பட்டோம். அவளது தகப்பனும் அவள் பல்கலைக்கழகத்தை நாடாமல் கல்வியியல் கல்லூரியை விரும்பியபோது அவளது விருப்பப்படியே படித்ததும் ஆசிரியையாகி வெளியேறியதும் நேற்றுப் போலிருக்கிறது.

"எனது மகள் ஒரு கணித ஆசிரியை" என்று பெருமிதமாகச் சொல்லிக்கொள்வார் அவளது அப்பா. அவளது கற்பித்தல் பயிற்சி உள்ளூரில் கிடைத்தபோது நிம்மதியாயிருந்த எங்கள் குடும்பத்தில் வெளி மாவட்டம் ஒன்றில் அவள் நியமனம் பெற்றபோது சிறுது கலக்கம் ஏற்பட்டது. அம்மா அப்பாவைவிட்டுத் தூரம் போவதற்கு அவள் தயங்கியபோது அவளுக்கு நியமனம் கிடைத்த கிளிநொச்சிப் பாடசாலைக்கு அருகிலேயே வீடொன்றை வாடகைக்கெடுத்து என்னையும் மிதிலாவோடு அனுப்பி வைத்தார் தகப்பனார்.

**குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் மிதிலா ஒரு மகிழ்ச்சி தரும் குழந்தையாய் வீட்டை உலா வந்தாள். கலகலப்புக்கும் குடும்பத்தில் எந்தக் குறையுமிருக்கவில்லை**

II

அம்மாவை எங்கள் வீட்டோடு அழைத்துக்கொண்டது எவ்வளவு மகிழ்ச்சியும் நிறைவுமான விடயம் என்பதை உணர்த்துகின்ற மாதிரி அம்மா ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொருவர் விசயத்திலும் நடந்துகொள்வதைப் பார்த்து நாம் எல்லோருமே திருப்தி கொண்டிருந்தோம்.

நேற்று இரவு படுகைக்குப் போகுமுன் வழக்கம் போல எல்லோருடைய உடல்நலம் மருந்து போன்றவை பற்றிக் கேட்டுக்கொள்ள கோமதி அக்காவிடம் அம்மா சென்றபோது அக்கா காலுக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்தாள். கட்டிலில் அமர்ந்தபடி குனிந்து எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்ததைப் பார்த்து "எட இப்பிடியா வழக்கமா எண்ணெய் தேக்கிறனீங்கள் பிள்ளை? நல்லாய் ஊண்டியெல்லோ தேய்க்கவேணும்" என்றபடி அவளருகே போன அம்மா அருகிலிருந்த நாள்காலி ஒன்றை எடுத்துக்கொண்டு அக்காவின் முன்னாள் அமர்ந்துகொண்டாள். "இஞ்ச கொண்டாரும் பிள்ளை எண்ணெய்யை...." என்று அதை வாங்கிக்கொண்டு "காலைத் தூக்கி என்ர மடியில வையும் என்று சொல்லிக் கொண்டே அவளது வலக் காலைத் தூக்கித் தனது மடியில் வைத்துக்கொண்டாள். கோமதியக்கா இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. "ஐயோ அம்மா.... என்ன வேலை பாக்கிறியள்? உங்கட மடியில என்ர காலை வைக்கிறியளே....?" என்று சங்கோஜத்துடன் காலை இழுத்துக்கொள்ள முயற்சித்தாள்.

"சும்மா இருங்கோ பிள்ளை. எண்ணெய் தேய்க்கிறதெண்டால் இப்பிடித்தான். பேசாம இரும். ஒரு பிரச்சினையுமில்லை...." என்று சொன்ன அம்மா, "என்ர மூத்த மகளுக்கு நான் செய்யாமல் இதெல்லாம் வேற ஆர் செய்யிறதாம்..." என்றபடி எண்ணெய்யைக் கையில் ஊற்றிக்கொண்டு கோமதியின் முழங்கால் வரை நிதானமாய்

# தங்கத்தை உண்ண முடியாது நீரை உருவாக்க முடியாது...!

■ சந்திரகாசன் சுஜந்தினி ■



நீரை வீணடிக்கக்கூடாது என்கிற வாக்கியங்கள் பலவற்றைப் பாடசாலைகள் தொடக்கம் அரச நிறுவனங்கள் வரைப் பொறித்தே வைத்திருக்கிறார்கள். நீரைச் சேமிக்கப் பழகவேண்டும் என்று பாடசாலை தொடக்கம் பல வயதினருக்கும் விழிப்புணர்வூட்டுவதும் நடக்கிறது. என்னதான் சொன்னாலும் நீரை மாசுபடுத்துவதும் அதை வீணடிப்பதும் சளைக்காமல் தொடர்கிறது.

இலவசமாகக் கிடைப்பதாலும் இயற்கையால் அளவு கணக்கின்றித் தரப்படுவதுமாக இருப்பதாலோ என்னவோ நீரைப் பற்றிய எவ்வித சிந்தனையும் மக்களுக்கு இருப்பதில்லை. அதிலும் தரைக்கீழ் நீர்வளத்தைக் கொண்ட யாழ்ப்பாண மக்களில் அநேகம் பேர் நீர் பற்றிய எவ்வித பொறுப்புணர்வும் இல்லாதவர்களாக இருப்பதைக் காணலாம்.

நீர் பொன்னுக்குச் சமம் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் முன்புற மதிற்சுவர்களில் எழுதியிருந்த வாசகங்கள்கூட அழிந்தே போய் விட்டன. நீர் பொன்னுக்குச் சமமா? என்று கேட்டால், இல்லை அது பொன்னை விட விலையுயர்ந்ததும், மதிப்பு மிக்கதும் என்பதே சரியான பதிலாக இருக்கும். ஆனாலும் அதன் மதிப்பும், தாற்பரியமும் பற்றி எவரும் விளங்கிக் கொள்வதில்லை.

யாழ்ப்பாண நகைக் கடைத் தெருவைத் தினமும் காலைவேளையில் அளவு கணக்கின்றி நீரூற்றிக் குளிப்பாட்டி நீரை வீணடிக்கும் காட்சியைக் கண்டால் நீரின் அருமை தெரியாத நம்மவர்களைக் கண்டு மனம் கலங்கவே செய்யும். மறுபுறத்தில் தீவகப் பகுதி, பூநகரிப் பகுதி எனப் பல பகுதிகளில் குடிக்கவோ, குளிக்கவோ நீரற்று மக்கள் பரிதவிப்பதையும் குடா நாட்டின் பல பகுதிகளில் நீர் இவ்வாறு வீணடிக்கப்படுவதையும் கண்டால் கண் கலங்கவே செய்யும். நகைக் கடைத் தெருவை மாத்திரமன்றி நீர் பலவிடங்களில் இவ்வாறு வீணடிக்கப்படவே செய்கிறது.

**பூமியில் நீர் புதிதாக உருவாவதில்லை. பூமியில் இருக்கின்ற குறிப்பிட்டளவு நீர்தான் சுற்றோட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஓர் ஒட்சிசன் அணுவும் இரண்டு ஐதரசன் அணுவும் சேர்ந்து உருவானதுதான் நீர் என்றாலும் அதை அவ்வாறு ஆய்வுகூடத்தில் வைத்து அறிவியல் தொழில்நுட்பத்தில் வளர்ச்சி கண்ட மனிதர்களால் உருவாக்க முடியுமா?**

**தங்கம்**

நீர் பொன்னுக்குச் சமம் என்பதே நம்மவர் வாக்கியம். தங்கம் என்பது ஓர் உலோகம். நீரைப்போல ஏறத்தாழ 19 மடங்கு எடையுள்ளது. நிறம் மங்கிப்போகாத, துருப்பிடிக்காத உலோகம். பெரும்பாலும் நிலத்தடியில் பாறைகளில் படர்ந்திருக்கும் தங்கத்தைச் சுரங்கங்கள் மூலம் தோண்டி எடுக்கிறார்கள். பாறைகளை வெடி வைத்துத் தகர்த்துத் தங்கத்தை இரசாயன (வேதியியல்) முறையில் பிரித்தெடுக்கிறார்கள்.

அதன்பின் மின்பகுப்பு முறையில் சுத்தம் செய்கிறார்கள். உலகில் கிடைக்கக் கூடிய




தங்கத்தில் பாதியளவு தென்னாபிரிக்காவில் வெட்டி எடுக்கப்படுகிறது. கனடா, வடதென் அமெரிக்க நாடுகள், ஆஸ்திரேலியா, கொரியா ஆகியவற்றிலும், இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தின் கோலார் என்னுமிடம், இலங்கையின் பூகொடை என்னுமிடம், களனி ஆற்றுமண் படிவுகள் எனத் தங்கப் படிவுகள் மிகச் சொற்ப அளவுடையதாகவே உலகில் கிடைக்கின்றன. இதனால், தங்கத்துக்கு உலகில் உயரிய மதிப்பு இருக்கிறது.

எப்போதும் பளபளப்பாகவே இருப்பாதல் நகைகள் செய்வதற்குப் பயன்படுகிறது. நகைகள் என்பது பெரும்பாலும் பெண்களையே மையப் படுத்திய பொருள் ஆகையால் அதற்குக் கேள்வி அதிகமாக இருக்கிறது. தவிர அது வர்த்தகச் சந்தையில் முக்கிய பொருளாகவும் இருக்கிறது. வரலாற்று ரீதியாக அரிய உலோகமாகவே அது இருந்து வருவதால் விலையிலும் முதன்மை பெறுகிறது.

**நீர்**

மறுபுறத்தில் நீர் பற்றிப் பார்த்தால், நீர் என்பதை ஒரு வகை வேதியியல் சேர்மம் என்கிறார்கள். நிறமில்லாத, வாசனையற்ற ஒளிபுகும் தன்மையுடைய இந்த நீரில் ஓர் ஒட்சிசன் அணுவுடன் இரண்டு ஐதரசன் அணுக்கள் இருக்கின்றன. நீர் ஒரு திரவமாக இருந்தாலும் திண்ம நிலையில் பனிக்கட்டியாகவும் வாயு நிலையில் நீராவியாகவும்கூடக் காணப்படுகிறது. பூமியிலுள்ள குளங்கள், ஏரிகள், கடல்கள், தரைக்கீழ் நீர் நிலைகள் என நீர் கிடைத்தாலும் அவை அனைத்துக்கும் மழை வடிவில் தான் நீர் வந்துசேர்கிறது.

மழையாக நீர் எப்படி வருகிறது என்று பார்த்தால், மேற்கூறிய நீர் நிலைகளிலிருந்து நீர் ஆவியாகி மேலெழுந்து மேகங்களாகி மழை பொழிந்தே நீர் கிடைக்கிறது என்பது தெரியவரும். ஆக, இங்கிருந்து (தரை) போய் அங்கிருந்து (மேகம்) வருகிறது. நீர் என்பது பூமியில் ஒரு சுழற்சி முறையில் சுற்றோட்டமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அத்தோடு பூமியில் அது குறிப்பிட்ட அளவே நீர் இருக்கிறது. அது இயற்கையாகப் புதிதாக உருவாவதில்லை. இதனால், அதன் அளவில் அதிகரிப்பு ஏற்படுவதில்லை. தொடர்ச்சியாக சுழற்சிக்கு உட்பட்டு இயங்கிக் கொண்டேயிருக்கிறது.

---

**மிதிலா...**

அழுத்தமாய் நீவி விடத் தொடங்கினாள். தொடக்கத்தில் தடுத்துப் பார்த்த கோமதி அவளிடமிருந்து காலைப் பறித்துக்கொள்ள முடியாமல் பனித்துவிட்ட கண்களோடு அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ர அடுத்த பிறவியில உங்கட சொந்த மகளா வந்து பிறக்க வேணும் நான்..." கோமதியிடம், "இந்தப் பிறவியிலயும் நீ எனக்கு மகள்தானம்மா... என்னட்ட உன்னைக் கொண்டு வந்து சேர்க்க காலம் இப்பத்தான் வேளை பார்த்திருக்கு. அவ்வளவுதான்" என்றபடி தனது உள்ளங்கையுள் மோமதியின் பாதத்தை அழுத்தி நீவினாள். அம்மா இருந்த நிலையிலேயே தலையைக் குனிந்து அம்மாவின் முதுகில் முகத்தைப் பதித்துக்கொண்ட கோமதியின் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் அம்மாவின் முதுகை நனைத்தது.

சுடுநீர்த் துளிகளாய் முதுகில் இறங்கிய கண்ணீரை உணர்ந்து நிமிர்ந்த அம்மா "என்ர ராசாத்தி ஏனடியம்மா அழுகிறாய்..?" என்றபடி நிமிர்ந்து அவளைத் தன் மார்போடணைத்துக்கொண்டாள். "இப்பிடியொரு அன்பை இதுக்கு முன்னம் நான் கண்டதில்லை அம்மா..." என்றாள் கோமதி.

(தொடரும்)

# கொரோனாவுக்குச் சேவை செய்யும் மக்கள்

■ ரவீந்திரன் ■

இலங்கையில் வழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம்கள், வேடர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் கொவிட் தொற்று ஏற்பட்டுவிட்டது. இதற்குப் முழுக் காரணம் மருத்துவத் தரப்பினரின் அறிவுறுத்தல்களைக் கருத்தில் எடுக்காமல் ஆட்சியாளர்கள் செயற்பட்டமையே. இதன் மூலம் மக்கள் கொவிட் நுண்தீமிக் காவிகளாக மாறியுள்ளனர்.

**நீதியமைச்சரின் வேண்டுகோள்**

நீதி அமைச்சர் அலிசப்ரி அண்மையில் வெளியிட்ட



அறிக்கை ஒன்றில் இலங்கையில் தொற்று ஏற்பட்டவர்களில் 40 வீதமானவர்கள் முஸ்லிம்கள். அவ்வாறு அதிகரித்த தொற்று ஏற்பட்டதற்கு அவர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாததே காரணம் என்றார்.

கொரோனவைத் தடுப்பதற்குத் தடுப்பூசி ஒன்றே தீர்வு என்று ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் பேசப்படுகிறபோதும் மக்கள் மத்தியில் உலாவுகின்ற மூட நம்பிக்கைகளே அதிகம் ஆதிக்கம் செலுத்துகின்றன. அதனால் அவர்கள் தடுப்பூசி போடுவதைத் தடுக்கிறார்கள்.

தடுப்பூசி போட்டவர்களில் மிகக் குறைந்த தொகையினருக்கு ஏற்பட்ட பாதிப்புகளை முன்னிறுத்திக் கதைத்துத் தடுப்பூசி போடுவதைத் தவிர்க்கின்றனர். இதைவிடத் தடுப்பூசியின் வகையில் அந்த நாட்டுத் தடுப்பூசிதான் சிறந்தது, இந்த நாட்டு ஊசி சரியில்லை என்றும் உள்ளூர்க் கதைகாரர்கள் முடிவெடுக்கின்றனர். இதைவிடத் தாம் வணங்கும் கடவுளர்கள் தம்மை இந்த நோயிலிருந்து காப்பாற்றுவார்கள் என்றும் நம்புகின்றனர். எந்த மதத்தின் கடவுளர்களோ, மதத் தலைவர்களோ இது வரை அதை உறுதிப்படுத்தவில்லை. மதத் தலைவர்கள் இதுவிடயத்தில் தமது கடவுளை நம்பாது தடுப்பூசியை நம்புவதால் ஓடோடிப் போய்த் தடுப்பூசி ஏற்றிக் கொள்கின்றனர்.

**கொரோனவைத் தடுப்பதற்குத் தடுப்பூசி ஒன்றே தீர்வு என்று ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் பேசப்படுகிறபோதும் மக்கள் மத்தியில் உலாவுகின்ற மூட நம்பிக்கைகளே அதிகம் ஆதிக்கம் செலுத்துகின்றன**

**திருமண வைபவங்கள்**

அண்மையில் சலவைத் தொழில் செய்யும் எனது நண்பர் ஒருவருக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியபோது அவர் முடக்க நிலையிலும் தான் பிசியாக இருக்கிறேன் என்றார். பின்னர் அது என்ன பிசி என்றும் கூறினார். "நாளைக்குக் கலியாண வீட்டு நாள். பலர் வீட்டுக்கு வந்து நிற்கிறார்கள். உடுப்புகள் அயன் பண்ணிக் குடுக்கவேணும். மாப்பிள்ளையின் தலைப்பாகை எடுக்கவும் கனபேர் வந்து நிக்கினம்" என்றார்.

திருமணம் செய்வது மிகவும் முக்கியமான காரியம்தான். அதையும் சங்கையாக வழமைபோல ஒரு நோய்த்தொற்றுப் பரவும் காலத்திலும் செய்து முடிக்கவேண்டும் என்று அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த மண்டைக் காய்களும், சுழியன்களும் (சுத்துமாத்துப்பேர்வழிகள்) திட்டமிடுவதால் இந்தக் கொண்டாட்டங்கள் முடிந்த பின்னர் பல குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டும் தமது குடும்ப அங்கத்தவர்களை இழந்துமுள்ளன. இந்த வைபவங்களுக்கு அழைத்ததும் முகத்தை முறிக்க முடியாமல் அதில் கலந்து கொண்டவர்களும் சிக்கலுக்குள் மாட்டியுள்ளனர்.

**பெற்றோரை இழந்து தவிக்கும் பிள்ளைகள்**

பல பெற்றோர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக அவர்களின் பிள்ளைகள் நிர்க்கதியாகியுள்ளனர். இது ஒரு தொற்று நோய் என்பதால் உற்றார் உறவினர்களும் நண்பர்களும் இந்தப் பிள்ளைகளை அரவணைப்பதில் தயக்கம் காட்டுகின்றனர். அண்மையில் கிளிநொச்சியிலிருந்து வான் ஒன்றில் வந்து தனது குடும்பத்துக்கு யாழ்ப்பாணத்தில் பீட்சா வாங்கிச் சென்றவர் குடும்பத்துடன் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரை இங்கு வாழும் மூவினங்களும் கொரோனாவுக்குச் சேவை செய்பவர்களாகவே உள்ளனர். இதனால்தான் புத்தாண்டுக் கொத்தணி, கோவில் கொத்தணி, வேறு பல கொத்தணிகள் எனப் பல்கிப் பெருக வாய்ப்பேற்பட்டது. இனி ஏற்படப்போகும் சாவுகளால் மட்டுமே இந்தப் போக்கைக் கட்டுப்படுத்த முடியும்.

---

## தங்கத்தை...



**நீரை உருவாக்க முடியாது**

மனித உடலுக்கோ, மற்றைய உயிரினங்களுக்கோ ஆற்றலையோ, கனிம ஊட்டச்சத்துகள் எதையுமோ வழங்காவிடினும் உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு நீர் அத்தியாவசியமானதாக இருக்கிறது. ஆனால், மறுபுறத்தில் தங்கத்தை ஆபரணங்களாக்கி அணிந்து மகிழலாமே தவிர அருந்த முடியாது. உணவாக்கி உயிர்வாழ முடியாது.

பூமியில் நீர் புதிதாக உருவாவதில்லை. பூமியில் இருக்கின்ற குறிப்பிட்டளவு நீர்தான் சுற்றோட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஓர் ஒட்சிசன் அணுவும் இரண்டு ஐதரசன் அணுவும் சேர்ந்து உருவானதுதான் நீர் என்றாலும் அதை அவ்வாறு ஆய்வுகூடத்தில் வைத்து அறிவியல் தொழில்நுட்பத்தில் வளர்ச்சி கண்ட மனிதர்களால் உருவாக்க முடியுமா? என்றால் அதுதான் இல்லை. இயற்கைச் செயற்பாட்டால் மாத்திரமே ஆகியுள்ளது நீர். இயற்கையாகப் பூமியில் புதிய நீர் தோன்றாத நிலையிலும் மனிதர்களால் நீரை உருவாக்க முடியாதிருக்கிற சூழலிலும் பூமியில் சுழற்சி முறையில் இயங்கிக்கொண்டிருக்கின்ற குறிப்பிட்டளவு நீரைத் தான் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு 21ஆம் நூற்றாண்டில் இருக்கும் மனிதர்களின் தொகைக்கும் இனி வரும் காலங் களில் அதிகரிக்கப்போகும் மனிதர்களுக்கும் இந்தக் குறிப்பிட்டளவு நீரே ஆதாரம்.

வண்ணத்துப்பூச்சி விளைவு (பட்டெர்பிளே தியறி) என்பதால் குறிப்பிடப்படுவதுபோல இந்த நீர் விடயத்தில் எதிர்காலச் சந்ததியினரின் - மற்றொருவ ரின் வாழ்க்கையில் நாம் இப்போது ஆற்றும் செயல்களால் பாதிப்பை ஏற்படுத்தப்போகிறோம் என்பதையும் நமது தலையில் நாமே மண்ணை அள்ளிப்போட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் உணர்ந்துகொள்ளவேண்டும். நீர் பொன்னைவிட மேலானது என்பதைப் புரிந்து நடக்கவேண்டும்.

அறிவியல்

7

■ கஜந்தன் ■

# அதிரும் ஆடை

வாருங்கள் ஏற்றங்களின் விளையாட்டைத் தொடர்ந்து கண்டு ரசிப்போம்




**காற்றில் வளையும் நீர்த்துளிகள்**

நீர்க் குழாயிலிருந்து தண்ணீர் அருவிபோல கொட்டும்பொழுது, ஏற்றம் ஊட்டப்பட்ட சீப்பொன்றை அருகில் கொண்டு வந்தால், நீர் அந்தச் சீப்பை நோக்கி வளையும். நாம் சென்ற வாரம் பார்த்த அதே விளக்கம்தான். ஆனால் அந்தக் காகிதத் தாள்கள் ஓய்விலிருந்தன. இங்கு நீர் ஒழுகிக்கொண்டுள்ளது. இருப்பினும் இந்த வீழ்ச்சியைப் பொருட்படுத்தாது ஏற்றங்களின் ஆதிக்கம் ஆட்சி செலுத்தும்.

"ப்ளாக் விடோ" திரைப்படத்தின் இறுதி சண்டையில், மேகங்களுக்கு மேல் வளர்ந்த ஒரு பெரும் கட்டடம் பொடி பொடியாய் உடைந்து விழும். அப்படி விழுந்துகொண்டிருக்கும் கட்டடத்துண்டுகள் மேல் குதித்துக் குதித்து கதாநாயகி எதிர்ப்புறத்திலுள்ள வில்லியை வந்தடைவார். அதுபோல, நீர் விழுந்துகொண்டே இருக்கும், ஆனால் நீரிலுள்ள இலத்திரன்கள் சீப்பு உள்ள பக்கம் நோக்கிப் பாய்ந்துவரும். நீரை நூல்போல் மெல்லிதாய்த் திறந்து விடவேண்டும். அப்பொழுதே இதை அவதானிக்கலாம். (டம்ளர் கணக்கில திறந்துவிட்டுட்டு, வளையல்ல குழையல்ல எண்டு சொல்லப்படாது!)

**44 வயதினிலே...**

சிஸ்டிக் பைப்ரோசிஸ் (CYSTIC FRBROSIS) எனும் நோய் ஒன்று உண்டு. நம் அனைவருக்கும் சுரக்கும் சளி இந்நோய் உள்ளவர்களில் மிகவும் தடிப்பாய் சுரக்கும். இதனால் அச்சளியே வளிக்குழாய்களை அடைத்து நிமோனியாவைக் கொண்டுவந்துவிடும். இந்த நோய் உள்ளதா என்பதைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் ஒரு வழி, நம் வேர்வையில் உள்ள உப்பை அளப்பதாகும்.


ஏற்றம் அடைந்த அணு, அயன் என்றழைக்கப்படும். ஓரிரண்டு இலத்திரன்களை இழப்பதன் மூலமோ இல்லை மேலதிகமாகப் பெறுவதன் மூலமோ அணு அயன் ஆகின்றது. இழக்கும் போது நேர் ஏற்றம் கொண்ட அயனாகும். பெறுதலின்போது மறை ஏற்றம் கொண்ட அயனாகும்.

**உபகரணத்தை இயக்கும் பொழுது, இந்த மேற்சட்டை உப்பி வீங்கி நெஞ்சை அழுத்தும், இதனால் வளிக்குழாய்களில் அடைபட்டுள்ள சளி அழுத்தத்தில் நகரத் தொடங்கும்**

உப்பு என்பது சோடியம் தனிமத்தின் நேர் ஏற்ற அயன்களாலும் குளோரின் தனிமத்தின் மறை ஏற்ற அயன்களாலும் ஆனது. வேர்வையானது சுரக்கப்படும் பொழுது, சில குளோரின் அயன்கள் மீண்டும் உடலினால் உறிஞ்சப்பட்டுவிடும். இதனை மீள் உறிஞ்சல் (REABSORPTION) என்பர். இவ்வாறு மறை ஏற்றம் கொண்ட குளோரின் அயன்கள் உறிஞ்சப்படும்பொழுது, அவற்றோடான ஈர்ப்பின் காரணமாக, நேர் ஏற்றம் கொண்ட சில சோடியம் அயன்களும் பின்தொடர்ந்து உடலுக்குள் சென்றுவிடும். (காதலியோடு உடுப்புக்கடைக்கு சென்றால், படிக்கட்டுவரை வெளியில் வந்துவிட்டு மீண்டும் ஏதாவது வாங்க உள்ளே செல்வாள், இவனும் திரும்பித் தொடர்வான், அதே அவல நிலைதான் சோடியம் அயனுக்கும்.) ஆனால் சிஸ்டிக் பைப்ரோசிஸ் நோயாளிகளில் இந்த மீள் உறிஞ்சல் தொழிற்பாடு நடைபெறாது தடைப்பட்டிருக்கும். அதனால் அவர்கள் வேர்வையில் சாதாரண மனிதர்களை விட நான்கு மடங்கு அதீத உப்பிருக்கும்.

இதைவைத்து இந்த நோயின் இருப்பைக் கண்டுபிடித்து விடலாம். எவ்வாறாகினும் இந்நோய் உள்ளவர்களின் சராசரி ஆயுட்காலம் 44.






**நெஞ்சம் நடுங்கின்றது**

இந்த நோய் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளில் ஒன்று "உயர் மீடிறன் நெஞ்சுச் சுவர் அதிர்வுச்" சிகிச்சை (HIGH FREQUENCY CHEST WALL OSCILLATIONS -HFCWO) ஆகும் . படத்தில் இருப்பவரைப் பார்த்து நீங்கள் சற்றுப் பயந்திருப்பீர்கள். இரண்டு வளைகுழாய்களை (HOSEPIPE) உடலுக்குள் சொருகிக்கொண்டு சாவகாசமாக திறன்பேசியை நோண்டுகிறாரே என்று நினைத்திருப்பீர்கள். பயப்பிடாதீர்கள், அவை உடலுக்குள் செல்லவில்லை, அவர் அணிந்திருக்கும் விசேட மேற்சட்டையுடன் பொருத்தப்பட்டுள்ளது.

உபகரணத்தை இயக்கும் பொழுது, இந்த மேற்சட்டை உப்பி வீங்கி நெஞ்சை அழுத்தும், இதனால் வளிக்குழாய்களில் அடைபட்டுள்ள சளி அழுத்தத்தில் நகரத் தொடங்கும். பின்னர் இந்த மேற்சட்டை வீக்கம் குறைந்து பழைய நிலைக்கு வரும். நாம் குருதி அழுத்தத்தை அளக்கப் பயன்படுத்தும் கருவியைப்போன்று. ஆனால் இந்த வீங்கிச் சுருங்கும் நிகழ்வு படுவேகமாக நொடிக்கு 5 இலிருந்து 25 தடவைகள் நடக்கும். அந்த மேற்சட்டை வேகமாக அதி ரும்.

பின்வரும் வசனங்களை யூடியூப்பில் அடைப்புக் குறிகளுக்குள் தேடுவதன் மூலம் இக்கட்டுரை தொடர்பான காணொளிகளைக் காணலாம்.

HOW TO BEND WATER WITH A COMB
THE VEST AIRWAY CLEARENCE SYSTEM,HFCWO

# இராசவள்ளிக் கஞ்சி





இலைக்கஞ்சிகளைப்போல சத்தான உணவுதான் கிழங்குவகைக் கஞ்சியும். இராசவள்ளிக் கிழங்குக் கஞ்சி என்றும் இராசவள்ளிக் கூழ் என்றும் பலவாறு இதை அழைக்கிறார்கள் யாழ்ப்பாணத்தவர்கள். இராசவள்ளிக் கிழங்குடன் சவ்வரிசியைச் சேர்ந்துக் கஞ்சியாக்கி ஆற வைத்து இறுகிய அதைத் துண்டங்களாக்கி உண்ணும்போது அதன் சுவை அவ்வளவு மிகுதியாக இருக்கும்.

நாவல் நிறத்துண்டங்களாக அழகாகவும் சுவையாகவும் இருக்கின்ற இராசவள்ளிக் கிழங்குக் கஞ்சியைக் குறிப்பிட்ட ஒரு அளவில் எவ்வாறு காய்ச்சுவது என்று இந்த வாரம் பார்ப்போம்.



**தேவையான பொருள்கள்**

ஒரு கிலோ அளவுடைய இராசவள்ளிக் கிழங்கு ஒன்று. சவ்வரிசி 200 கிராம். தேங்காய்ப் பால் - பாதித்தேங்காய் அளவு, சீனி 250 கிராம், உப்பு - சிறிதளவு.

**எப்படிச் செய்வது**

இராசவள்ளிக் கிழங்கைச் சுத்தப்படுத்தித் தோல் சீவி, சிறிய சிறிய துண்டுகளாக வெட்டிக் கழுவிக் கொள்ளுங்கள். சட்டி ஒன்றுக்குள் தண்ணீர் ஊற்றிக் கிழங்கை போட்டு நன்றாக அவிய விடுங்கள். சவ்வரிசியையும் போட்டுக் கலவுங்கள். இரண்டும் அவிந்து தண்ணீர் வற்றி வரப் பாலை விடுங்கள்.

பால் கொதித்ததும், சீனியையும், உப்பையும் போட்டுக் கிளறிவிடுங்கள். ஓரளவு இறுக்கமாக வரும் பதத்தில் இறக்கிக் கிழங்குத் துண்டங்களை மசித்துக்கொள்ளுங்கள். பின்னர் சிறிது நேரம் வேகவிட்டு இறக்குங்கள். சுவையான இராசவள்ளிக் கிழக்குக் கஞ்சி தயார்.

# அறிவின் புறக்கணிப்பு சாதியத்தின் எச்சமா?



செம்மண்ணின் முதற்பக்கத்தில் வெளியாகிய "என்ஜாயி எஞ்சாமி" பாடல் பற்றிய பதிவு பலரையும் ஈர்த்திருந்தது. வெகு பிரபலமடைந்த அந்தப் பாடலை கோடிக்கணக்கான வர்கள் பார்த்து ரசித்தார்கள். அந்தப் பாடலை இயற்றியவர் பாடலாசிரியரும் பாடகருமான அறிவு என்ற அறிவரசு கலைநேசன்.

இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனின் மகளான பாடகி 'தீ'யுடன் இணைந்து அவர் உருவாக்கிய இந்தப் பாடல் பெரும்



வரவேற்பைப் பெற்று யூ டியூப்பில் 32 கோடிக்கு அதிகமான முறை பார்க்கப்பட்டிருந்தது. இந்தப் பாடல் குறித்த புகழ் மேடைகள், பல தளங்களிலும் அறிவின் பெயர் புறக்கணிக்கப்படுவதாக இப்போது விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் அரச ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் பாடல்களை எழுதி, வீதிகள், விழிப்புணர்வு நிகழ்வுகளில் அவற்றைப் பாடி அறிமுகமானவர் அறிவு. 'காலா' திரைப்படத்தின் மூலம் திரை உலகிற்குள் நுழைந்தார். இறுதியாகச் சந்தோஷ் நாராயணன் இசையில் 'சார்பட்டா பரம்பரை' படத்தில் 'நீயே ஒளி' என்ற பாடலை சான் வின்செண்ட் டி போல் என்ற பாடகருடன் இணைந்து எழுதிப் பாடியிருந்தார். இந்த நிலையில், சுயாதீன இசை குறித்து இந்திய இசை இதழ் ஒன்று வெளியிட்ட கட்டுரையிலும் அந்த இதழின் அட்டைப் படத்திலும் பாடகி தீயும் சான் வின்செண்ட் டி போலும் இடம் பெற்றனர். 'என்ஜாயி எஞ்சாமி' பாடலையும் 'நீயே ஒளி' பாடலையும் அடிப்படையாக வைத்தே அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருந் தாலும் இந்தப் பாடல்களை எழுதிய அறிவு, அட்டைப் படத்திலும் கட்டுரையிலும் இடம்பெறவில்லை. மாத்திரமன்றி இவ்விரு பாடல்களைப் பற்றிப் பேசப்படுகின்ற மேடைக ளில்கூட அவரது பெயர் அரிதாகவே பேசப்பட்டுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் அறிவின் பெயர் புறக்கணிக்கப்படுவது குறித்து இயக்குநர் பா. ரஞ்சித் கேள்வி எழுப்பினார். அதைத் தொடர்ந்து இயக்குநர் சி.எஸ். அமுதன், ஏ.ஆர். ரஹ்மான், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த வன்னியரசு எனப் பலரும் இது குறித்துக் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். அது அறிவுச் சுரண்டல் என்று விமர்சித்துமுள்ளனர்.

அதே நேரம் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவரான அறிவு திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றார் என்பதே ரஞ்சித் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியதற்கான காரணம். தமிழர்கள் எவ்வளவு வளர்ந்தாலும் உயர்ந்தாலும் சாதியம் அவர்களைவிட்டு விலக மறுப்பதன் மிகச் சமீபத்திய வெளிப்பாடாகவே இதனைக் கொள்ளவேண்டியிருக்கின்றது.

என்றாலும் இந்தப் பிரச்சினையால் தான் பெரிதும் பாதிக்கப்பட்டார் என்று வின்சன்ட் டி போல் கவலைப்பட்டுள்ளார். அவர் இலங்கையைச் சேர்ந்தவர். கடந்த 5 வருடங்களாகச் சுயாதீன இசைக் கலைஞராகத் தான் பட்ட பாடுகள் அனைத்துக்குமான பயன் கிடைக்கவிருந்த நிலையில் இயக்குநர் பா.ரஞ்சித்தின் கருத்தால் தனது எதிர்காலம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அந்த இசை இதழ் தனது அடுத்த அட்டைப்படத்தில் அறிவின் ஒளிப்படம் இடம்பெறும் என்று அறிவித்துள்ளது.

**தற்கால ரசனைக்கு ஏற்றவாறும் நவீன தலைமுறையினரின் எதிர்பார்ப்பை மிஞ்சியும் இசையில் கலக்கிவருகின்ற இசைப்புயல் ரஹ்மானின் பாடல்தான் இந்தப் பரமசுந்தரி**

# சொக்க வைக்கும் பரமசுந்தரி...!



"நம்பர் 1" என்று தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்ட தெலுங்குத் திரைப்படமான நெநோக்கடனினே மூலம் திரைத்துறையில் அறிமுகமானவர்தான் கிருத்தி சனோன். ஹிந்தப் படங்களில் அதிகம் நடிக்கும் நடிகை இவர். சபீர் கானின் ஹீரோபண்டி (2014) திரைப்படத்தின் மூலம் ஹிந்தி திரைப்படத்துறையில் அறிமுகமானவர். அந்தப் படத்தில் நடித்ததற்காகச் சிறந்த நடிகைக்கான ஃபிலிம்ஃபேர் விருதையும் வென்றவர். பின்னர் தொடந்து வணிக ரீதியாக வெற்றிகரமாக ஓடித்தள்ளிய மூன்று திரைப்படங்களில் முன்னணி பெண் கதாபாத்திரத்தில் கிருத்தி நடித்தார்.

நகைச்சுவை படமான தில்வாலே (2015), காதல் நகைச்சுவைப்படமான பரேலி கி பர்ஃபி (2017) மற்றும் லூகா சுப்பி (2019) ஆகிய மூன்று படங்களில் நடித்தார். படங்கள், விளம்பரங்களில் நடித்து வந்தாலும் பாடல்களில் நடனங்களில் கலக்குவதே அதிகம். தனது உடல் அசைவில் பலரையும் சொக்க வைத்த அழகியாகப் பாடல்களுக்கு நடனமாடிப் பலரையும் ஈர்த்து வைத்திருக்கிறார். அவருடைய நடனத்துக்குத் திரைத்துறையில் மவுசும் அதிகம். இந்த நிலையில்தான் நடனத்தில் கலக்கும் அவரது பரமசுந்தரி பாடல் வெளியாகிச் சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கிறது.



தற்கால ரசனைக்கு ஏற்றவாறும் நவீன தலைமுறையினரின் எதிர்பார்ப்பை மிஞ்சியும் இசையில் கலக்கிவருகின்ற இசைப்புயல் ரஹ்மானின் பாடல்தான் இந்தப் பரமசுந்தரி. அந்தப் பாடலுக்குக் கிருத்தி ஆடிய ஆட்டம்தான் தற்பொது பேசுபொருள். 'மிமி'' என்ற திரைப்படத்தில் இடம் பெறுகின்ற 'பரம சுந்தரி' என்ற அந்தப் பாடல் மூலம் பார்ப்பவர்களையும் மெய்மறந்து ஆட வைக்கிறார் கிருத்தி. கடந்த மாதத்தின் இறுதியில் வெளியான அந்தப் பாடல் வெளியான சில நிமிடங்களில் சமூக ஊடகங்களில் அதிவேகமாகப் பரவி 100 மில்லியன் பார்வையாளர்களைத் தொட்டுவிட்டது என்றால் பாருங்களேன்...!

பாடலில் தோன்றும் கிருத்தி சனோன் தன்னுடைய நளினம் மிகுந்த நடனத்தின் மூலம் பாடலையும் கவர்ச்சியாக்கிப் பார்வையாளர்களையும் கவர்ந்து விட்டார். அந்த நடனத்தில் அவர் வெளிப்படுத்தும் முகபாவங்களும் செல்லச் சீண்டல்களும் நடன அசைவுகளும் பிரமிக்க வைக்கின்றன.

# புதிய ஸ்பைடர் மேனில் கலக்கும் பழைய வில்லன்

2002ஆம் ஆண்டில் வெளியாகிப் பெருவரவேற்பைப் பெற்ற படம் ஸ்பைடர் மேன். அதன் தொடர்ச்சியாக 2019ஆம் ஆண்டு வெளியான 'ஸ்பைடர்மேன் ஃபார் ஃப்ரம் ஹோம்' படமும் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. அதைத் தொடர்ந்து சொனி- மார்வெல் நிறுவனங்களுக்கிடையே இந்தப் படம் தொடர்பான காப்புரிமை பிரச்சினை எழுந்து இரண்டு நிறுவனங்களும் பிரிவதாக அறிவிக்கப்பட்டது.


பின்னர் இது தொடர்பில் பேச்சுகள் நடந்தேறின. அந்தப் பேச்சுகளில் உடன்பாடு ஏற்பட்டதால் தற்போது 'ஸ்பைடர்மேன்: நோ வே ஹோம்' படத்தை இரண்டு தரப்பும் சேர்ந்தே தயாரிக்கின்றன. இந்தப் படத்துக்கான முன்னோட்டக் காட்சி தற்போது வெளியிடப்பட்டுள்ள நிலையில் 2019ஆம் ஆண்டில் வெளியாகிய ஸ்பைடர்மேன் படத்தில் வந்த டொக்டர் ஒக்டோபஸ் கதாபாத்திரம் இடம்பெற்றதைக் கண்ட ஸ்பைடர்மேன் ரசிகர்கள் மகிழ்ச்சியில் மூழ்கியுள்ளனர்.

கடந்த 'ஸ்பைடர்மேன்' படங்களில் முக்கிய பாத்திரங்களில் நடித்த டாம் ஹாலண்ட், ஜிண்டாயா, ஜேகப், மாரிஸா டோமீ உள்ளிட்ட பலரும்கூட இந்தப் படத்தில் நடிக்கின்றனர். நீண்ட நாள்களாகவே இந்தப் படம் குறித்த தகவல்களை வெளியிடாமல் ரகசியம் காத்து வந்தது படக்குழு தற்போது அவசர அவசரமாக 'ஸ்பைடர்மேன்: நோ வே ஹோம்' முன்னோட்டக் காட்சியை வெளியிட்டுள்ளனர்.

ட்ரெய்லரின் மூலம் டொக்டர் ஸ்ட்ரேஞ்ச் படத்தின் முக்கிய அங்கமாக இருப்பார் என்பதை ஊகிக்க முடிகிறது.இது தவிர ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி யாக 2004ஆம் ஆண்டு வெளியான 'ஸ்பை டர்மேன்' இரண்டாம் பாகத்தில் வில்லனாக நடித்த டொக்டர் ஒக்டோபஸ் இதிலும் வருகி றார் என்பதும் இரசிகர்களுக்கு மகிழ்ச்சியளித்துள்ளது.



# ஆபத்தான அழகி...!





ஷங்கரின் இயக்கத்தில் ரஜினி காந்தின் நடிப்பில் வெளியாகிய படம் எந்திரன். அதற்குக் கிடைத்த வரவேற்புக் காரணமாக இரண்டாம் பாகம் வெளிவந்து முதற்பாகத்தின் வரவேற்பைக் குலைத்தது வேறு விடயம்.

இயந்திர மனிதனுக்கு அழகி ஐஸ்வர் யாராய் மீது காதல் ஏற்பட்டதால் விளைந்த நாசங்களே முதற்பாகம். இரும்பில் முளை த்த காதலால் ஏற்படுகின்ற விபரீதங்கள் அதில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். அதில் வருகின்ற காட்சிகளில் ஒன்றாக ஐஸ்வர்யாராயைக் குத்திக் குருதி குடித்த நுளம்பைக் கண்டறிந்து இயந்திர மனிதன் அதைப் பிடிப்பது படமாக்கப்பட்டிருக்கும். நுளம்புக் கூட்டத்துக்குள் அந்தத் தனி ஒரு நுளம்பைத் தேடியறிவதும், கண்டுபிடிப் பதும், பின்னர் அதைப் பிடித்துவந்து காதலியிடம் மன்னிப்புக்கேட்க வைப்பதும் சுவாரசியமான காட்சிகள்தான்.

ரோபோ சிட்டி படத்தில் நுளம்புக் கூட் டத்துக்கிடையில் அந்த நுளம்பை மாத்திரம் கண்டறிந்து பிடித்ததைப்போலத் தான் நிஜ உலகில் வாழும் நுளம்புகளுக் கிடையிலிருந்து அழகான ஒரு பெண் நுளம்பைக் கண்டுபிடித்திருக்கிறார் ஒளிப்படக் கலைஞர் ஒருவர்.

இப்போது அந்தப் பெண் நுளம்பின் அழகு பலரையும் கொள்ளை கொண்டு விட்டது. இதனால் அது இணையத்தைக் கலக்கியும் பரவியும் வருகிறது. அதன் அழகைக் கண்டு வியக்காதவர்களே இல்லை என்றாகிவிட்டது. அழகிய படின மான உரோமங்களைக் கொண்ட கால்கள், உடலின் பளபளப்பு ஆகியவை யும் அந்த நுளம்பு நிற்கின்ற நிலையும் அழகிப் போட்டியில் நளினம் காட்டும் பெண்களைப் போலதான் இருக்கிறது.

மத்திய, தென் அமெரிக்காவில் காணப் படும் சபேதெஸ் என்கிற இனத்தைச் சேர்ந்த அந்த நுளம்புதான் .வெப்பமண்ட லப் பகுதியில் மிகக் கொடூரமான நோய்க ளுக்குக் காரணமாக இருக்கிறது. அழகி என்றாலும் ஆபத்தான அழகி. இந்த அழ கிய நுளம்பைக் கனடாவின் ஒன்டாரி யோவைச் சேர்ந்த கில் விசன் என்பவர் படம் பிடித்திருக்கிறார்.

# கொலம்பியா வைரஸுக்கு புதிய கிரேக்கப் பெயர் "மூ"

■ க.குமாரதாஸன் ■

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் கடந்த ஜனவரியில் முதன் முதல் அறியப்பட்ட கொரோனா வைரஸ் திரிபு க்கு "மூ"("Mu") என்ற பெயரிடப்பட்டிருக்கிறது.

அயல் நாடுகளிலும் ஐரோப்பா உட்படவேறு சில நாடுகளிலும் பரவியுள்ள அதன் குணவி யல்புகள் தொடர்ந்து அவதானிக்கப்பட்டு வருவதாக உலகசுகாதார நிறுவனத்தின் நிலை வர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

B.1.621 என்னும் அறிவியல் பெயர் கொண்ட கொலம்பியா திரிபு("Colombian variant") இனிமேல் "மூ" என்று அழைக் கப்படும்."மூ" என்பது கிரேக்க இலக்கங்களில் (Greek alphabet) பன்னிரெண்டைக்குறிக்கும். தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட "பேற்றா" (Beta) திரிபினைப்போன்று "மூ" வைரஸும் தடுப்பூசிகளைஎதிர்க்கின்ற சக்தி மிக்கதாக இருக்கலாம்என்பது பூர்வாங்கப் பரிசோதனைகளில்தெரியவந்துள்ளது.

2019 இல் சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸ் தொடர்ந்து பல மரபு மாற்றங்களை எடுத்து புதிய தன்மைகளுடன்பரவி வருவது தெரிந் ததே. அவற்றில்இந்தியாவில்கண்டறியப்பட்ட டெல்ரா திரிபு உலகெங்கும் புதிதாகத் தொற்று நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

கொரோனா என்கின்ற தாய் வைரஸில் இருந்து பல நூற்றுக் கணக்கான வைரஸ் திரிபு கள் உருவாகிவந்தாலும் அவற்றில் சில மாத்தி ரமே தொற்றும் திறன் கூடிய வையாகவும் உட லின் நோய் எதிர்ப்புச் சக்தியால் கட்டுப்படுத்த முடியாதவையாகவும் காணப்படுகின்றன. அத் தகைய ஆபத்தான திரிபுகளுக்கு உலக சுகா தார நிறுவனம் கிரேக்க மொழியில் பெயர்களைச் சூட்டி வருகிறது. இலகுவாக அடையாளம் காண்பதற்காகவும் நாடுகளின் பெயர்களைக் கூறி அழைப்பதால் உருவாகின்ற விரும்பத்த காத விளைவுகளைத் தவிர்க்கவும் கிரேக்க இலக்கங்களின் பெயர்கள் திரிபுகளுக்குச் சூட் டப்படுகின்றன.

பெல்ஜியத்தில் மூதாளர் காப்பகம் ஒன்றில் தங்கியிருந்த வயோதிபர்கள் ஏழுபேர் அண்மை யில் "மூ" என்கின்ற கொலம்பியா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தனர். அவர்கள் அனைவரும் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றி யவர்கள் ஆவர். அமெரிக்கா, மெக் ஸிக்கோ இத்தாலி, பிரான்ஸ், நெதர்லாந்து, பெல்ஜியம், இங்கிலாந்து போன்ற நாடுகளில் மரபு மாறிய"மூ" வைரஸ் தொற்றாளர்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளனர்.

## இந்த வார சுடோக்கு - 51

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | | | | | | |
| | | 6 | 2 | | | 5 | | |
| 3 | | | | | 4 | 7 | 2 | |
| | 8 | | | 6 | | 2 | | 9 |
| 2 | | | 8 | | 9 | | | 4 |
| 6 | | 1 | | 4 | | | 8 | |
| | 4 | 8 | 1 | | | | | 6 |
| | | 3 | | | 5 | 4 | | |
| | | | | | | 8 | 1 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்கு வதற்கானது. நேராகவும் கிடையாக வும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந் தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டி யினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடு களிலும் இரண்டாவது மற்றும் மூன்றா வது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட் டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர் களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
*சுடோக்கு,*
*551 A, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்*

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங் கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்ற வரின் விவரங்களும் அடுத்தவார பத்தி ரிகையில் வெளியாகும். வெற்றிபெற்ற வர் பரிசுத் தொகையை செம்மண் அலு வலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக் கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 3 | 7 | 8 | 5 | 6 | 9 | 2 |
| 8 | 9 | 5 | 2 | 6 | 1 | 3 | 4 | 7 |
| 7 | 6 | 2 | 3 | 9 | 4 | 8 | 5 | 1 |
| 6 | 3 | 7 | 1 | 2 | 9 | 4 | 8 | 5 |
| 4 | 8 | 1 | 5 | 7 | 6 | 2 | 3 | 9 |
| 2 | 5 | 9 | 8 | 4 | 3 | 7 | 1 | 6 |
| 3 | 2 | 6 | 9 | 1 | 8 | 5 | 7 | 4 |
| 9 | 7 | 8 | 4 | 5 | 2 | 1 | 6 | 3 |
| 5 | 1 | 4 | 6 | 3 | 7 | 9 | 2 | 8 |

*குறிப்பு: கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழி யர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட் டியில் கலந்துகொள்ளமுடியாது.*

# நீங்கள் முதல் ஆபாசப் படம் பார்த்த வயதென்ன?

## விசயமே அதில்தான் அடங்கியிருக்கிறது

ஒரு ஆண் முதன் முதலாக ஆபாசப் படத்தை பார்க்கும் வயதிற்கும், வாழ்க்கையின் பிற்காலத்தில் ஏற்படும் சில பாலியல் நடத்தைகளுக்கும் தொடர்பு இருப்பதாக அமெரிக்காவின் நெப்ராஸ்கா பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழுவினர் கூறுகின்றனர்.

இளம் வயதிலேயே முதல் முறையாக ஆபாசப் படம் பார்க்கும் ஆண்கள், பிற்காலத்தில் பெண்கள் மீது அதிக ஆதிக்கம் செலுத்த விரும்புவார்கள் என்றும், மூத்த வயதில் முதல் முறையாக ஆபாசப் படம் பார்ப்பவர்கள், பல பெண்களுடன் பாலியல் தொடர்பு வைக்க விரும்புவார்கள் என்றும் இந்தக் கருத்துக்கணிப்பு வெளிப்படுத்தியுள்ளது.



சராசரியாக 20 வயதுடைய 330 பட்டதாரிகளிடம் கருத்துக்கணிப்பு எடுக்கப்பட்ட நிலையில், அவர்கள் முதல் முறையாக ஆபாசப் படம் பார்த்த சராசரி வயது 13ஆக இருக்கிறது.

முதல் முறையாக ஆபாசப் படம் பார்க்கப்பட்ட மிக இளம் வயது வெறும் ஐந்து என்றும், மிக மூத்த வயது 26 என்றும் இந்தக் கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

எதிலும் வெளியிடப்படாத இந்த கண்டுபிடிப்புகள், வாஷிங்டனில் ஒரு மாநாட்டில் தொகுத்து வழங்கப்பட்டது.

இளம் வயதிலேயே ஆபாசப் படம் பார்ப்பவர்கள், ஆண் ஆதிக்கம் கொண்ட கருத்துகளுக்கு பெரும்பாலும் உடன்படுகிறார்கள்

எப்போது முதல் முறையாக ஆபாசப் படம் பார்த்தீர்கள்? வேண்டுமென்றே பார்த்தீர்களா? தற்செயலாகப் பார்த்தீர்களா? அல்லது நிர்பந்தத்திலா? என்ற கேள்விகளை முன்னணி ஆராய்ச்சியாளர் அலிஸா பிஸ்ஸ்காம் மற்றும் அவரது குழுவினர் ஆண்களிடம் கேட்டுள்ளனர். இதில் பங்கேற்ற பெரும்பாலானவர்கள் நேர்பாலின உறவு கொண்ட வெள்ளை இன ஆண்கள்.

பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புபவர்கள் அல்லது ப்ளேபாய் வாழ்க்கை வாழ்பவர்கள் - இந்த இரண்டு நடத்தைப் பண்புகளில் ஒரு ஆண் எந்த வகையைச் சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்தக் கருத்துக்கணிப்பில் பங்கேற்றவர்களிடம் 46 கேள்விகள் கேட்கப்பட்டன.

இளம் வயதிலேயே ஆபாசப் படம் பார்ப்பவர்கள், ஆண் ஆதிக்கம் கொண்ட கருத்துகளுக்கு பெரும்பாலும் உடன்படுகிறார்கள் என்பதைக் கண்டறிந்துள்ளனர்.

மூத்த வயதில் ஆபாசப் படம் பார்ப்பதற்கும், பாலியல் துணையை அடிக்கடி மாற்ற விரும்புவது போன்ற ப்ளேபாய் வாழ்க்கை முறைக்கும் தொடர்பு இருப்பதைக் கண்டறிந்த ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இளம் வயதிலே அடிக்கடி ஆபாசப் படம் பார்த்து பழகியவர்களால், நிஜ வாழ்க்கையில் பாலியல் நடவடிக்கைகளை அனுபவிக்க முடியாமல் போகலாம் என ஆராய்ச்சியாளர் க்ரிஸ்டினா ரிச்சர்ட்சன் கூறுகிறார்.

``இளம் வயதிலே ஆபாசப் படம் பார்த்த ஆண்களுக்கு, நிஜ வாழ்க்கையில் பெண்களை நெருங்குவதில் அதிக பதற்றம் இருக்கிறது. பாலியல் அனுபவங்கள் அவர்கள் திட்டமிட்ட படி இருக்காது அல்லது ஆபாசப் படங்களில் அவர்கள் உணர்ந்தது போல நிஜ வாழ்க்கை இருக்காது`` எனவும் அவர் கூறியுள்ளார்.

மாறாக,``மூத்த வயதில் ஆபாசப் படங்களை பார்த்த வர்கள், நிஜ வாழ்வில் நன்றாக பாலியல் நடவடிக்கைகளை அனுபவிக்கின்றனர். அதனால், இவர்கள் பிளேபாய் வாழ்க்கையினை வாழ்வதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கிறது`` என்றும் கூறுகிறார்.

எத்தனை ஆபாசப் படங்களை ஆண்கள் பார்த்திருக்கிறார்கள், என்ன விதமான ஆபாசப் படம், பார்த்தவர்களின் சமுக-பொருளாதார பின்னணி குறித்தெல்லாம் இந்த ஆய்வு கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.

``ஆபாசப் படம், பல இளம் ஆண்களின் பாலியல் நடத்தைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தும்`` என்கிறார் பாலியல் சிகிச்சை நிபுணர் பீட்டர் ஸாடிங்டன்.

``இதனால், இளைஞர்களின் பாலியல் பாகுபாடு வளர்வதுடன், பாலியல் திறன் குறைந்தவர்களாகவும் இருப்பார்கள்`` என கூறுகிறார் பீட்டர்.

``ஆபாசப் படம் ஆண்களுக்கு ஆரோக்கியமான விஷயம் அல்ல`` என ஆராய்ச்சியாளர் ரிச்சர்ட்சன் கூறுகிறார்.

ஆண்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பது குறித்த ஆரோக்கியமான சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள இளம் ஆண்களுக்குச் சிறந்த முன்மாதிரி தேவைப்படுவதாகவும் அவர் கூறுகிறார்.

(நன்றி: பிபிசி தமிழ்)

# உலகப் பொது மொழியாகும் தமிழ்

## பொப் பாடல்களில் தமிழைப் புகுத்துகிறார் பிரியா



தமிழ் நான் பேசும் மொழி, ஏன் அதை எனது பாடல்களில் சேர்க்கக் கூடாது? என்று கேட்கிறார் மேற்குலகில் ஆங்கிலப் பொப் பாடல்களில் பிரபலமாகி வருபவரான பிரியா.

ஈழத்தமிழ் பின்னணி கொண்ட சுவிஸ் தமிழ் பாடகி பிரியா ரகு மேற்குலகின் இசைச் சந்தையில் உச்சங்களைத் தொட்டிருப்பவர். சுவிஸில் இலங்கைத் தமிழ் அகதிகளாக வாழும் பெற்றோருக்குப் பிறந்த பிரியா "பொப்" பாணிப் பாடல்களால் இன்று உலகப் பிரபலமாக மாறியுள்ளார்.

தனது 'கமலி' என்னும் பிந்திய இசை அல்பம் ஒன்றில் அவர் தமிழ் வார்த்தைகளைப் புகுத்திப் பாடினார். உலகெங்கும் ஆங்கிலத்தில் ஒலிக்கின்ற அவரது குரலின் நடுவே இப்போது தமிழ்ச் சொற்களைக் கேட்க முடிகிறது.

ஆகப் பிந்திய தனது அல்பத்துக்கு "சந்தோசம்" என்று பெயரிட்டிருக்கிறார்.

அவரது பிந்திய பாடல்களில் உலக ரசிகர்கள் புரியாத தமிழ்ச் சொற்களைச் செவிமடுக்கிறார்கள். அது ஏன் என்ற கேள்விகளும் எழுப்பப்படுகின்றன.

"நாங்கள் எமது பாடல்களில் தமிழ்ச் சொற்களை இணைக்கத் தொடங்கி உள்ளோம். தமிழ் நான் பேசும் மொழி. நாமே உருவாக்குகின்ற பாடல்களில் தமிழை ஏன் சேர்க்கக்கூடாது? -

லண்டனின் 'த கார்டி யன்' பத்திரிகைக்கு அளித்த பதிலில் இவ்வாறு கூறியிருக்கிறார் பிரியா ரகு.

"எல்லோரும் ஹொலிவூட் பாடல்களையே பாடுகிறார்கள். அது மகிழ்ச்சிதான். ஆனால் நான் எங்கிருந்து வந்தேன் என்பதை மறக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காக எனது பெற்றோர் நமது பண்பாட்டை என்னோடு சேர்த்து வளர்த்து விட்டிருக்கின்றனர்.

"நாங்கள் தமிழ் செல்வாக்கைப் பாடல்களில் இணைக்கத் தொடங்கியுள்ளோம். அதில் நம்மைப்பற்றி அதிகம் கண்டுகொள்ள முடிகிறது. எங்களுடைய பண்பாட்டுடன் என்னை மீள இணைக்க அது உதவுகின்றது" - என்று கார்டியனிடம் மேலும் தெரிவித்திருக்கிறார் 35 வயதான பிரியா.

சுவிஸ் சென்காளன்(St Gallen) என்ற இடத்தில் பிறந்த பிரியா, தனது இசைத் தயாரிப்பாளருமாகிய சகோதரனுடன் இணைந்து ஜாப்னா கோல்ட் (Japhna Gold) என்ற வர்த்தக நாமத்தில் இணைந்தே சுயமுயற்சியாக இசை அல்பங்களைத் தயாரித்து வெளியிட்டு வருகிறார்.

(படம் :த கார்டியன் பத்திரிகை)

■ க.குமாரதாஸன் ■

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.09.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781